சங்ககாலப் பாண்டியர்



சங்ககாலப் பாண்டியர்

★

வித்துவான் திரு. ஐயன்பெருமாள் கோனர்
தமிழ்ப் பேராசிரியர்,
அர்ச். சூசையப்பர் கல்லூரி, திருச்சிராப்பள்ளி

★

வாசன் பதிப்பகம்
60, வடக்கு ஆவணிமூல வீதி, மதுரை-1.

 1964 [விலை ரூ. 1-25

திருத்திய பதிப்பு—நவம்பர் 1959
இரண்டாம் பதிப்பு—மே 1960
மூன்றும் பதிப்பு-ஜூலை 1964

Approved by the Text Book Committee
F. S. G. Gazette page 36 Date 18—5—'60.

10·9 கிலோ கிராம் வெள்ளைத் தாளில் அச்சிடப்பட்டது.

லலிதா பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட், மதுரை-1—64.

முன்னுரை

தமிழ் நாட்டு வரலாற்றில் பாண்டியர்கள் தமது தலை நகர மாகிய மதுரையில் தமிழ்ச் சங்கம் நிறுவித் தமிழாராய்ந்த செய்தி மிக முக்கியமானதும் போற்றத்தக்கதுமாகும். அப் பாண்டியரைப் பற்றிய செய்திகள் சிறப்பாகப் புறநானூற்றாலும் பொதுவாக எல்லாச் சங்க நூல்களாலும் அறியப்படுகின்றன. அவற்றை நம் மாணவர்கள் அறிந்து கொள்ள வேண்டுவது இன்றியமையாதது என்பது கூறாமலே விளங்கும்.

அவ்வகையில் எழுந்த இந் நூல் சங்க காலப் பாண்டியரைப் பற்றிச் சங்க நூல்களால் அறியக்கிடக்கும் செய்திகளைத் தொகுத் துணர்த்துவதாகும். இந்நூல் அச்சிடுங்கால் விரிவு படுத்தியும், பிழைகள் திருத்தியும் உதவிய மதுரை, தூய மரியன்னை உயர்நிலைப் பள்ளித் தமிழாசிரியர் **பண்டித திரு. மீ. கந்தசாமிப் புலவர்** அவர்களுக்கு நன்றி செலுத்தக் கடப்பாடுடையேன்.

இது உயர்நிலைப்பள்ளி மாணவர்க்குத் துணைப்பாடப் புத்தக மாய்ப் பயன்படுமென்று நம்புகின்றேன். கல்வித் துறையினரும், ஆசிரியப் பெருமக்களும் இதனை ஆதரிக்குமாறு வேண்டு கின்றேன்.

ஆக்கியோன்

பொருளடக்கம்

நாட்டு வணக்கம்

ஜன கண மன அதிநாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
பஞ்சாப ஸிந்து குஜராத மராட்டா
த்ராவிட உத்கல வங்கா
விந்திய ஹிமாசல யமுனா கங்கா
உச்சல ஜலதி தரங்கா.
தவசுப நாமே ஜாகே
தவசுப ஆசிஷ மாங்கே
காயே தவ ஜய காதா.
ஜன கண மங்கள தாயக ஜயஹே
பாரத பாக்ய விதாதா
ஜயஹே ஜயஹே ஜயஹே
ஜய ஜய ஜய ஜயஹே.

தேசீய கீதம்

இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற நீ தான்
மக்கள் எல்லாருடைய மனத்திலும் ஆட்சி செலுத்துகிறாய்.
நின் திருநாமம், பஞ்சாப்பையும் சிந்துவையும்
குஜராத்தையும் மஹாராஷ்டிரத்தையும்
திராவிடத்தையும் ஒரிஸாவையும் வங்காளத்தையும்
உள்ளக் கிளர்ச்சியடையச் செய்கிறது.
அது விந்திய ஹிமாலய மலைகளில் எதிரொலிக்கிறது;
யமுனை; கங்கை நதிகளின் இன்ப நாதத்தில் கலக்கிறது;
இந்தியக் கடல் அலைகளால் ஜபிக்கப்படுகிறது.
அவை நின் ஆசியை வேண்டுகின்றன; நின் புகழைப் பாடுகின்றன;
இந்தியாவின் சுகதுக்கங்களை நிர்ணயிக்கிற உனக்கு
வெற்றி, வெற்றி, வெற்றி.

சங்ககாலப் பாண்டியர்

1. சங்க காலம்

தமிழராகிய நாம் ஒவ்வொருவரும், நமது பண்டைத் தமிழ் இலக்கண இலக்கியங்களைப் பற்றியும், அவற்றுலறியக் கிடக்கும் நமது முன்னோர் வரலாறுகளைப் பற்றியும் அறிய வேண்டியது இன்றியமையாததாகும். பண்டைக்கால அவ் வரலாறுகளைப் பற்றி நினைக்கும்போது நமது மனத்தில் முற்பட்டுத் தோன்றுவன, நம் பண்டை முத்தமிழ்ச் சங்கங்களும், அவற்றை நிறுவி வளர்த்து வந்த பாண்டிய மன்னரைப் பற்றிய வரலாறுகளுமேயாம். முதற்கண் சங்ககாலத்தைப் பற்றி ஆராய்வோம்.

சங்க காலம் என்பது மதுரையில் பாண்டியர்கள், முதல், இடை, கடை என்னும் முச்சங்கங்களை நிறுவி வளர்த்து வந்த காலமாம். பாண்டியர் சங்கம் நிறுவி வளர்த்து வந்த செய்தி, பழைய சங்க நூல்களிலும், அவற்றிற்குப் பின்னர் எழுந்த ஐம்பெருங் காப்பியங்கள், தேவாரம், நாலாயிர திவ்யப் பிரபந்தம், கம்பராமாயணம், வில்லி பாரதம் முதலிய பல நூல்களிலும் கூறப்பட்டுள்ளது. மற்றும் இச் சங்கங்களின் வரலாற்றைத் தெள்ளத் தெளிய விரிவாக எடுத்துக் கூறுவது, இறையனரகப் பொருளுக்கு நக்கீரர் இயற்றியதாக வழங்கப்பட்டு வரும் உரையாகும். அதினின்றும் அறியப்படும் செய்திகளாவன : "தலைச்சங்க மிருந்தவர் அகத்தியனும், திரிபுர மெரித்த விரிசடைக் கடவுளும், குன்ற மெறிந்த குமர வேளும், முரஞ்சியூர் முடி நாக ராயரும், நிதியின் கிழவனும்

முதலாகிய ஐநூற்றுநாற்பத்தொன்பதின்மர் ஆவர். அவர்களால் எத்துணையோ பரிபாடல், முதுநாரை, முதுகுருகு, களரியாவிரை ஆகியவை பாடப்பட்டன. அத்தலைச்சங்கம் நாலாயிரத்து நானூற்றுநாற்பது ஆண்டுகள் நடந்து வந்தது. அச்சங்கத்தை நடத்திய பாண்டியவரசர் காய்சின வழுதி முதலாகக் கடுங்கோன் ஈறுக எண்பத்தொன்பதின்மர் ஆவர். அவருள் கவியரங்கு ஏறினுர் எழுவர். அவர்கள் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கடலால் கொள்ளப்பட்ட மதுரையாம். அத்தலைச் சங்கத்தார்க்கு இலக்கண நூலாயமைந்தது அகத்தியமாகும்.

இடைச் சங்க மிருந்தவர் அகத்தியர், தொல்காப்பியர், இருந்தையூர்க் கருங்கோழி, மோசி, வெள்ளூர்க் காப்பியன், சிறுபாண்டரங்கன், திரையன் மாறன், துவரைக் கோமான், கீரந்தை முதலியோர். இவர்கள் ஐம்பத்தொன்பதின்மர் ஆவர். இச்சங்கத்தில் அங்கத்தினராயிருந்து பாடிய புலவர்கள் மொத்தம் மூவாயிரத்து எழுநூற்றுவர். அவர்களால் கலியும், குருவும், வெண்டாளியும், வியாழமாலையகவலும் என எத்துணையோ பாடல்கள் பாடப்பட்டன. அவர்களுக்கு இலக்கண நூல்களாயமைந்தவை அகத்தியம், தொல்காப்பியம், மாபுராணம், இசைநுணுக்கம், பூதபுராணம் என்பவை. இடைச்சங்கம் மூவாயிரத்தெழுநூறு யாண்டு நிகழ்ந்து வந்தது. அச்சங்கத்தை நிறுவி வளர்த்து வந்தவர் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈறுக ஐம்பத்தொன்பதின்மர் ஆவர். அவருள் கவியரங்கேறிய பாண்டியர் ஐவர் ஆவர். அவர்கள் சங்கமிருந்து தமிழாராய்ந்தது கவாடபுரம் என்னும் நகரமாம். அக்காலத்திலேதான் தமிழ்நாடு கடலால் கொள்ளப்பட்டது.

கடைச்சங்கம் இருந்து தமிழாராய்ந்தவர் சிறுமேதாவியார், சேந்தன் பூதனுர், அறிவுடையரனுர், பெருங்குன்றூர்க்கிழார், இளந்திருமாறன், மதுரையாசிரியர் நல்லந்துவனுர், மதுரை மருதனிளநாகனுர், மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரனுர்

முதலியோராவர். கடைச்சங்க காலத்துப் பாடல்களியற்றிய புலவர்கள் நானூற்று நாற்பத்தொன்பதின்மர். அவர்களாற் பாடப்பட்டன நெடுந்தொகை நானூறு, குறுந்தொகை நானூறு, நற்றிணை நானூறு, ஐங்குறுநூறு, பதிற்றுப்பத்து, நூற்றைம்பது கலி, எழுபது பரிபாடல் என்பவையும், மற்றும் கூத்து, வரி, பேரிசை, சிற்றிசை முதலியனவுமாம். அவர்களுக்கு இலக்கண நூலாயமைந்தவை அகத்தியமும் தொல்காப்பியமுமாம். அவர்கள் சங்கமிருந்து தமிழாராய்ந்த காலம் ஆயிரத்தெண்ணூற்று ஐம்பது யாண்டுகள். கடைச்சங்கத்தை நிறுவி வளர்த்து வந்தவர் கடல் கொள்ளப்பட்டுப் போந்திருந்த முடத்திருமாறன் முதலாக, உக்கிரப் பெருவழுதி ஈருக நாற்பத்தொன்பதின்மர் ஆவர். அவருள், மூவர் பாண்டியர் கவியரங்கேறினர். அவர்கள் சங்கமிருந்து தமிழாராய்ந்தவிடம் உத்தர மதுரையாம்.

மேற்கண்ட களவியலுரையைப் பற்றி இக்காலத்தில் ஆராய்ச்சிகள் பல எழுந்துள்ளன. அவற்றைப் பின்பற்றி அவ்வுரை நக்கீரனரால் இயற்றப்பட்டதா? அன்றி மற்றெருவரால் இயற்றப்பட்டதா? அதனுட் கண்ட செய்திகள் எம்மட்டில் சரியானவை என்பனபற்றி நாம் ஈண்டு ஆராய்தல் வேண்டா. எது எங்ஙனமாயினும் மதுரையில் பாண்டியர் சங்கம் நிறுவி வளர்த்து வந்ததையும், அதில் பல புலவர் இருந்து தமிழாராய்ந்து வந்ததையும் எவரும் மறுத்தல் இயலாது. நமக்கு அதுவே போதியதாகும்.

சங்கம் முதல், இடை, கடை என மூன்றுகக் கூறப்படுகின்றது. இதனல் முதற் சங்கம் சில காலம் நடந்து வந்த பின் ஏதோ காரணத்தால் நின்றுவிட்டது. பிறகு மீண்டும் சங்கம் நிறுவப்பட்டு அதுவும் சில காலம் சென்றபின் யாது காரணத்தாலோ நின்றுவிட்டது. அப்பால் இறுதி முறையாக மற்றெரு சங்கம் நிறுவப்பட்டு நடந்து வந்தது என்னும் செய்திகள் அறியப்படும். சங்கங்கள் இவ்வாறு இடையில்

நடைபெறாது ஒழிந்தது ஏன் என்னும் வினா எழுகின்றது. இதற்கு விடை, தமிழ் நாட்டில் நிகழ்ந்த கடல் கோள்களே. இங்ஙனம் சங்கத்தை நடைபெறாது செய்து விட்டன என்று கூறலாம். முதற் சங்கத்தின் இறுதியில் ஒரு கடல் கோளும், இரண்டாம் சங்கத்தின் இறுதியில் மற்றொரு கடல் கோளுமாக இரண்டு கடல் கோள்கள் பண்டைக் காலத்தில் தமிழ் நாட்டில் ஏற்பட்டன. இச் செய்தியைச் சிலப்பதிகாரத்தில் பாண்டியன், தன்மேல் வேல் எறிந்த பகையைப் பொறாது, கடல் அவனது நாட்டை அழிக்கத் தொடங்கிப் பஃறுளியாற்றையும் பல அடுக்குகளாக அமைந்த குமரி மலையையும் தன்னுள் ஆழ்த்தியது என வருவதால் அறியலாம்.

மேலும் சிலப்பதிகார உரையாசிரியராகிய அடியார்க்கு நல்லார் தமது உரையில்.

"தென்பாலி முகத்திற்கு வடவெல்லையாகிய பஃறுளி யென்னுமாற்றிற்கும், குமரியாற்றிற்கும் இடையே எழுநூற்றுக் காவத தூரம், இவற்றின் நீர் மலிவான் என மலிந்த ஏழ் தெங்க நாடும், ஏழ் மதுரை நாடும், ஏழ் முன்பாலை நாடும், ஏழ் பின்பாலை நாடும், ஏழ் குன்ற நாடும், ஏழ் குணகாரை நாடும், ஏழ் குறும்பனை நாடும் என்னும் இந்த நாற்பத் தொன்பது நாடும், குமரி, கொல்லம் முதலிய பன்மலை நாடும், காடும், நதியும் பதியும் தடநீர்க் குமரி வட பெருங்கோட்டின் காறும் கடல் கொண்டது" எனக் கூறியிருப்பதும் இதனை விளக்கும்.

இம் முச்சங்கங்களுள் முதற் சங்கம் இப்போதுள்ள மதுரைக்குப் பல நூறு காவதங்களுக்கு அப்பாலிருந்ததும் கடலால் கொள்ளப்பட்டதுமான மதுரையில் நடைபெற்ற தாகும். இடைச் சங்கம் நடைபெற்ற இடம், இப்போதைய மதுரைக்கும் பழைய மதுரைக்கும் இடையில் இருந்ததும்

கடலால் கொள்ளப்பட்டதுமாகிய கவாடபுரம் என்னுமிடமாம். கடைச்சங்கம் இப்போதைய மதுரையில் நடைபெற்றது. இவற்றுள் இடைச்சங்கமிருந்த கவாடபுரத்தைப் பற்றி அறியக் கிடக்கும் சில செய்திகள் சங்க காலத்தை அறியக் கருவியா யுள்ளன. அவற்றைப்பற்றி இப்போது ஆராய்வோம்.

இராமாயணத்தில் சீதையைத் தேடுவதற்காக இராமர் வானரர்களை அனுப்பும்போது, "வானரர்களே, அதன்பின் பொன்மயமானதும், முத்து, மணி இவற்ருல் அழகு செய்யப் பெற்றதும், ஒளிமிக்கதும், தக்கதுமாகிய பாண்டியர் கவாடத் தைப் பார்ப்பீர்கள்" என்று கூறியதாக வான்மீகி இராமாயணம் கூறுகின்றது. இதில் கவாடத்தை என்றது கவாடபுரத்தையே யாம் என்பது அறிஞர் துணிபு. இதனுல் இராமாயணம் நிகழ்ந்த காலத்தில் இடைச்சங்கம் நடந்து வந்தது என்பது புலனுகும். மற்றும் பெயர் பெற்ற வரலாற்ருசிரியராகிய பண்டார்க்கர் என்பவர் இராமாயண காலத்தைப் பற்றி யாராய்ந்து அது கி. மு. 700-க்கு முற்பட்டது எனக் கூறு கின்ருர். இதினின்று இடைச்சங்க காலம் ஏறத்தாழ இரண் டாயிரத்தைந்நூறு ஆண்டுகட்கு முற்பட்டது எனக் கூறலா மன்ரே ?

இனி, முதற் சங்கம் நாலாயிரத்து நானூற்று நாற்பது யாண்டுகள் நடந்ததாக அறிவதால், அதன் தொடக்கம் மேற் கூறியவாற்ருல் ஒருவாறு ஏழாயிரமாண்டுகட்கு முற்பட்டது என அறியலாம்.

இனிக் கவாடபுரத்தைப் பற்றிய மற்ரெரு செய்தி வருமாறு: மௌரிய சந்திரகுப்தருக்கு உதவியாயிருந்து அவருக்கு மகத நாட்டு ஆட்சி கிடைக்குமாறு செய்தவரும், சிறந்த அரசியலறிவு படைத்தவருமான சாணக்கியர் அல்லது கௌடில்யர் என்பவர் அர்த்தசாத்திரம் என்னும் நூலை இயற்றி

யவர் ஆவர். அவர் தமது அர்த்த சாத்திரத்தில் முத்துக்களின் பெயர்களைக் கூறுமிடத்துப் பாண்டிய கவாடகம் எனச் சிறந்த முத்துக்களைக் குறிப்பிடுகின்றார். இதனால் அவர் காலத்தில், கவாடபுரத்து இடைச்சங்கம் நிலவியிருந்தது தெளியப்படும். அவர் காலம் கி. மு. முந்நூறுக்கு முற்பட்டது என்று அறியக் கிடத்தலால் அக்காலத்தில் இடைச்சங்கம் இருந்தது என அறியலாம்.

இலங்கை பௌத்த வரலாறாகிய இராசாவளி என்னும் நூல், கி. மு. 265-க்கும் 161 க்கும் இடையில், கலியாணியில் அரசுபுரிந்த திஸ்ஸா என்பவன் காலத்தில் இலங்கையை அடுத்துக் கடல்கோள் ஒன்று நிகழ்ந்ததாகக் கூறுகிறது. இலங்கை வரலாறாகிய மகாவமிசம், இக்கடல்கோள் அதற்குப் பின்னர்ச் சற்றேறக்குறைய 60 ஆண்டுகள் கழித்து நிகழ்ந்த தாகக் கூறுகிறது. ஆகவே இடைச்சங்கத்தை அழிக்கவந்த இரண்டாவது கடல்கோள் கி. மு. 150-ல் அல்லது அதை யடுத்து நிகழ்ந்தது எனக்கொள்ளலாம். முதற் சங்க முடிவில் ஏற்பட்ட முதற் கடல்கோள் இராமாயண காலத்திற்கு முற் பட்டது என்று மட்டும் கூறலாமேயன்றிக் காலத்தை அறுதி யிட்டுக் கூற இடமில்லை.

இனிக் கடைச்சங்க காலத்தைப் பற்றி ஆராய்வோம். கி. பி. மூன்றும் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழ் நாட்டைக் களப்பிரர் என்னும் ஒரு குலத்தார் கைப்பற்றினர் என்பது வரலாற்றால் அறியப்படுகின்றது. இவர்கள் வேங்கடத்தைச் சுற்றியிருந்த களவர் என்பவர்கள் என அறிஞர் உரைக் கின்றனர். இவர்கள் தமிழ் மூவேந்தரது நாடுகளையும், காஞ்சியில் ஆண்ட பல்லவர்களையும் வென்று தென்னாடு முழு வதையும் ஆண்டார்கள். இவர்கள் காலத்தில் சேர, சோழ, பாண்டிய, பல்லவர்களைப் பற்றிய செய்தி ஒன்றுமே புலப்பட வில்லை. பாண்டிய நாட்டைப் பொறுத்து இவர்களது ஆட்சி

கி. பி. 575 வரை இருந்தது என்னலாம். இவர்களை வென்று பாண்டிய நாட்டு ஆட்சியை மேற்கொண்ட கடுங்கோன் என்னும் பாண்டிய அரசன் அவ்வாட்சியைக் கி. பி. 575-ல் மேற்கொண்டான் என வரலாற்று ஆராய்ச்சியாளர் துணி கின்றனர். வேள்விக்குடிச் செப்பேடுகள் இவன் களப்பிரரை வென்று பாண்டிய நாட்டைக் கைப்பற்றியதை விளக்கு கின்றன. ஆகவே, கடைச்சங்க காலத்தைக் கி. மு. 150 முதல் கி. பி. 200 வரை என்று ஒருவாறு கூறலாம்.

2. பாண்டிய நாடு

தமிழ் நூல்கள் தமிழ் நாட்டைப் பற்றிப் பேசப்புகும் போதெல்லாம், அந்நாடு மூன்று பிரிவினையுடைய தென்றும், அம் முப்பிரிவுகளையும் முறையே சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூன்று அரசர் ஆண்டு வந்தனர் என்றும் கூறு கின்றன. மேலும் அவை, தமிழ்நாடு அம் மூவேந்தர்க்கே யுரியதெனப் பறைசாற்றுகின்றன.

சங்க காலத்தில் இயற்றப்பட்ட பண்டைத் தமிழ் நூல் களில் எத்துணையோ நூல்கள், கடல்கோளாலும் செல்லரித் தமையாலும், வழிவழியாகப் பயின்று வரப்படாமையாலும் அழிந்துபட்டன. அழிந்தன போக எஞ்சியுள்ளவை பத்துப் பாட்டு, எட்டுத் தொகை, பதினெண்கீழ்க் கணக்கு, தொல் காப்பியம், அகத்தியம் என்னும் நூலில் சில பாடல்கள் ஆகியவை களாம். இவற்றுள் மிகப் பழமையானது தொல்காப்பியம் என்னும் இலக்கண நூலாகும். இந்நூலுள் தமிழ் மக்களைப் பற்றிக், "கொடையாலுண்டான சிறந்த புகழ்பெற்ற மூவேந்த ருடைய நாடாகிய தமிழ்நாட்டிலே வடக்கே வேங்கட மலையும், தெற்கே குமரியும், கிழக்கு மேற்கில் கடலும் எல்லையாகவுள்ள

நிலத்தில் வாழ்பவர் '' எனக் கூறப்பட்டுள்ளது. இங்குத் தமிழ் நாடு மூவேந்தர்க்கேயுரிய நாடாகக் கூறப்பட்டிருத்தல் காண்க.

இத்தமிழ் நாட்டின் ஒரு பகுதியாய்த் தொன்று தொட்டுப் பாண்டிய மன்னரால் ஆளப்பட்டு வந்தது பாண்டிய நாடாகும். இந்நாடு தென்புலம் எனவும் கூறப்படும். இதனுல் பாண்டிய நாடு தமிழ்நாட்டின் தெற்குப்பகுதியாம் என்பது பெறப்படும். "தென்புலங் காவல் மருமான்...மதுரையும்'' என வரும் சிறுபாணுற்றுப்படையடிகளால் இது விளங்கும்.

இத் தென்புலமாகிய பாண்டியநாடு பண்டு மிக விரிந்திருந்தது. பின்னர் அடுத்தடுத்து வந்த கடல் கோள்களால் மிகச் சுருங்கிய அளவினையுடையதாகிவிட்டது. இச் செய்தி தமிழ் நூல்கள் பலவற்ருல் அறியக்கிடக்கின்றது. இங்ஙனம் கடல் கோள்களால் அழிந்த நாடுகளாவன: ஏழ்தெங்கநாடு முதலிய நாற்பத்தொன்பது நாடுகள் என முன்னர்க் கூறியுள்ளோம். இவை இப்போதைய குமரி முனைக்குத் தெற்கே எழுநூறு காத தொலைவு பரவியிருந்தன. இந்நாடுகளுக்குத் தெற்கெல்லையாகக் குமரிமலை என்பது இருந்தது. அதனையடுத்துக் குமரியாறு, பஃறுளியாறு என்னும் இரண்டு ஆறுகள் பாய்ந்தோடின. இச் செய்திகள் எல்லாம் தமிழ் நூல்களால் அறியக் கிடப்பனவாம்.

கடலினடியை ஆராய்ந்து செய்தியறியும் இக்கால ஆங்கில ஆராய்ச்சியாளர், நமது நாட்டை யடுத்த கடற் பகுதியை ஆராய்ந்து பல செய்திகளைக் கண்டறிந்துள்ளனர். அவர்கள் நமது தமிழ் நாட்டுக்குத் தென்கிழக்கேயுள்ள சந்தாத் தீவுகள் தொடங்கி மேற்கே ஆப்பிரிக்காக் கண்டத்தின் கீழ்க்கரையை அடுத்த மடகாஸ்கர் தீவு வரையில் முற்காலத்தில் லெமுரியா என்னும் பெயரையுடைய அகன்றதொரு நிலப்பரப்பு இருந்தது எனக் கண்டறிந்துள்ளனர். பிற்காலத்தில் அது கடலுள் ஆழ்ந்ததென்றும் அவர்கள் கூறுகின்றனர். இந்த

லெமுரியா நிலப்பரப்பே பண்டைத் தமிழ்நாடு என்னும் ஒரு கொள்கையும் உண்டு.

மேற்குறித்த தமிழ் நூல்களின் கூற்றும் இந்த ஆங்கில ஆராய்ச்சியாளரின் செய்தியும் ஒத்திருத்தலால், லெமுரியாவின் ஒரு பகுதி பாண்டிய நாட்டைச் சேர்ந்ததாயிருத்தல் வேண்டும் என உய்த்துணர இடமிருக்கிறது.

இங்ஙனம் அகன்று கிடந்த பாண்டிய நாட்டின் தெற்கெல்லை குமரிமலை என்று தெரிகிறது. இதையடுத்துப் பஃறுளி யாறு என்னும் ஓர் ஆறு ஓடியது. இவ்வாற்றை நிலந்தரு திருவிற் பாண்டியன் என்னும் பாண்டியவரசன் வெட்டுவித்தான் என்பர். குமரிமலை கடலால் கொள்ளப்பட்டபின், அதற்கு வடக்கிலிருந்த குமரியாறு பாண்டிய நாட்டின் தெற்கெல்லையாய் அமைந்தது. அக்காலத்தில்தான் காவடபுரம் பாண்டிய நாட்டின் தலைநகராயிருந்தது. அந்நகரம் குமரியாற்றிற்கும் பொருநையாற்றிற்கும் இடைப்பட்ட நிலப்பரப்பில் இருந்தது. பின்னர் உண்டான மற்றொரு கடல்கோளால் குமரியாறும் கவாடபுரமும் அழிந்து பட்டன. அதன்பின் இப்போது குமரிமுனை என்றழைக்கப்படும் குமரிக் கடற்றுறையே பாண்டிய நாட்டிற்குத் தெற்கெல்லையாய் அமைந்தது.

"வடவேங்கடம் தென்குமரி ஆயிடைத் தமிழ்கூறு நல்லுலகத்து" என்று பனம்பாரனார் என்னும் புலவர் தொல்காப்பியப் பாயிரத்துள் கூறியுள்ளார். இதனால் தமிழ்நாடு வடவேங்கடம், தென்குமரி ஆகியவற்றிற்கு இடைப்பட்ட நிலப்பரப்பு என்பது பெறப்படும். இப்பாயிரம், இயற்றிய பனம்பாரனார் தொல்காப்பியரோடு ஒருசாலை மாணாக்கராய் அகத்தியர்பால் தமிழ் கற்றவராவர். இங்கே வேங்கடம், குமரி என்பவை இன்னவை எனக் குறிக்கப்படவில்லை. இரண்டையும் ஒன்றுபோலக் கூறியிருத்தலால், ஒன்றைப் போன்றதே

மற்றென்று எனக்கொள்ள இடமேற்படுகிறது. வேங்கடம் என்பது மலை எனத்தெரிவதால், அவ்வாறே குமரியும் மலையே யாகும் என்பது இதனால் பெறப்படும். இதனையொட்டி, "வடக்கு, தெற்கு, கிழக்கு, மேற்கு ஆகியவற்றில் முறையே வேங்கடம், குமரி, கடல் ஆகியவைகளை எல்லையாகக் கொண்டது தமிழ்நாடு" எனக் காக்கைப் பாடினியார் என்பவர் கூறியுள்ளார். இவரும் தொல்காப்பியரோடு ஒருசாலை மாணுக்கராவர்; அதாவது அகத்தியரது பன்னிரண்டு மாணுக்கருள் ஒருவராவர். இவரது கூற்றிலிருந்து கிழக்கிலும் மேற்கிலும் கடல் எல்லையாய் அமைந்தது என்று அறியலாம். இவரும் பனம்பாரனுரைப்போலவே வேங்கடம், குமரி என்பனவற்றை இன்னவை எனக்கூறவில்லை. ஆதலின் முன்னர்ப் பனம் பாரனுரது குறிப்பைக்கொண்டு ஆராய்ந்தறிந்தது போன்று, இவரது குறிப்பினின்றும் குமரி என்பது மலையேயாம் எனக் கொள்ளக்கிடக்கின்றது.

நிற்க, புறநானூற்றுப் பாடல் ஒன்றில் வடவேங்கடத்தைப் பனிபடு நெடுவரை, அதாவது பனிபொருந்திய நீண்டமலை எனவும், குமரியை உருகெழு குமரி, அதாவது அச்சந்தரத்தக்க குமரி எனவும் கூறியுள்ளார் அப்பாட்டுப் பாடிய புலவர். மற்றொரு புறநானூற்றுப் பாடல் கிழக்கிலும் மேற்கிலும் தமிழ் நாட்டிற்குக் கடல் எல்லையாகக் கூறிவிட்டுத் தெற்கே குமரி, வடக்கே பெருங்கல் எனத் தெற்கு வடக்கு எல்லைகளைக் குறிக்கின்றது. இப்பாடல்களினின்று குமரி என்று கூறப்பட்டது கடல் அன்று என்பது தெளிவு. ஆயின் குமரி என்றது யாது?

இப்போதைய குமரிமுனைக்குத் தெற்கே பண்டைக் காலத்தில் நிலம் பரந்து கிடந்தது என்றும், அந்நிலப் பரப்பின் தெற்கில் குமரிமலை, குமரியாறு ஆகியவை இருந்தனவென்றும் முன்னர்க் கூறினேம். ஆகவே மேலே குமரி என்றது இவ்விரண்டுள் ஏதாவது ஒன்றையே குறிக்கும். பஃறுளியாற்

றுடன் பல அடுக்காய் அமைந்த குமரி மலையைக் கடல் கொண்டது எனச் சிலப்பதிகார உரை குறிக்கின்றது. ஆகவே, மேலே குறிப்பிட்ட குமரியைக் குமரியாறு எனக்கொள்ள இட முண்டு.

பாண்டியநாடு மேற்கூறியவாறு அளவில் சுருங்கிய தெனினும் பெருமையில் மேம்பட்டது. பண்டைக்கால முதலே அது, செந்தமிழ்நாடு எனச் சிறப்பித்துக் கூறப்பட்டு வந்துள்ளது. பழைய பாடல் ஒன்று, "செந்தமிழ் நாடென்பது யாதெனில், சந்தனம் வளரும் பொதியமலையிலுள்ள அகத்திய முனிவரும், சௌந்தரபாண்டியனும், மற்றும் சங்கப் புலவரும் சிறக்க வீற்றிருக்கின்ற மங்கலமாகிய பாண்டி வள நாடே யாகும்" எனக் கூறுகின்றது.

மற்றொரு பழைய பாடல், "செந்தமிழ் நாடென்பது யாதெனில், சிவபெருமானது அருளாம் தமிழின் பெருமையை ஓங்கச் செய்த அடியார் கூட்டமும், முதற் சங்கமும், உலகில் திருமாலின் பெருமையைப் பூசிக்கும் சோழனும், சைவப் பெருமக்களும் மகிழ்ந்து தங்கியிருப்பதாகிய குற்ற மற்ற சோழ வள நாடேயாகும்" எனக் குறிக்கின்றது. இவ்வாறு மாறு பட்ட கருத்து இருப்பினும், பாண்டிய நாடே செந்தமிழ் நாடு என்பது அறிஞர் கருத்தாம்.

நிற்க, செந்தமிழ் நாடு என ஒரு நாட்டைக் கூறவே, கொடுந்தமிழ் நாடு என ஒன்று உண்டோ என்னும் ஐயம் நிகழ்கின்றதன்றோ? கொடுந்தமிழ் நாடு ஒன்றல்ல பன்னிரண்டு உண்டு. அவையாவன, தென்பாண்டி நாடு, குட்ட நாடு, குட நாடு, கற்கா நாடு, வேணாடு, பூமி நாடு, பன்றி நாடு, அருவா நாடு, அருவா வடதலை நாடு, சீத நாடு, மலாடு, புனல் நாடு என்பன.

சேர, சோழ, பாண்டியர் மூவருமே தமிழை வளர்த்து வந்தனர். மூவர் அவைக்களத்திலும் தமிழ்ப் புலவர் இருந்தனர். ஆயினும் நூல்கள் அரங்கேற்றப்பட்டு வந்தது பாண்டிய வரசனது அவைக்களத்திலேயாம். இதற்குக் காரணம் முதன்முதலில் அகத்தியர் முதலிய சான்ருேரால் மதுரையில் சங்கம் நிறுவப்பட்டு நடத்திவரப்பட்டதேயாதல் வேண்டும். இக்காரணம் பற்றியே போலும் பாண்டிய நாடு செந்தமிழ் நாடு எனப்பட்டது.

3. பாண்டியர் குடி

"கல் தோன்றி மண் தோன்ருக் காலத்தே முன் தோன்றி மூத்தகுடி" மூவேந்தர் குடி. ஆதலின் பாண்டியர் குடி எக்காலத்தில் தோன்றியது எனத் திட்டமாகக் கூறுதல் இயலாது. வரலாற்றுக் காலத்திற்கும் முற்பட்டு மூவேந்தர் குடி விளங்கியிருந்தது என்பதற்குச் சான்றுகள் பல உள.

வடக்கே ஆரியவரசர் விளக்க முற்றிருந்த இராமாயண, பாரத காலமாகிய இதிகாச காலத்திலே தமிழ் வேந்தர் சிறக்க விருந்தனர் என்பதற்கு அந்நூல்களுள் சான்றுகள் உள்ளன. இராமாயணத்தில் இராமர் சீதையைத் தேடுதற்காகத் தெற்குத் திசை நோக்கி அநுமார் முதலிய வானரங்களை அனுப்பிய காலத்தில் பாண்டியரது கவாடபுரத்திற்குச் சென்று தேடுங்கள் என்கின்ருர். அக்காலத்தில் அக்கவாடபுரம் பொன், முத்து முதலியவைகளால் புனையப் பெற்ற கோட்டை வாயிலை யுடையதாயிருந்தது என்று அதிற் கூறப்பெற்றுள்ளது.

மகாபாரதத்தில் பாண்டவர் ஐவருள் ஒருவனுகிய அருச்சுனன் பாண்டிய மன்னன் மகளை மணந்து கொண்டான் எனக் கூறப்பட்டுள்ளது. மேலும் பாரதப் போரிலும் தமிழ் வேந்தர் ஈடுபட்டுள்ளனர். அக்காலத்திலிருந்த சேரவரசன்

அப்போரில் பாண்டவர், கௌரவர் ஆகிய இருவர் பக்கத்திலும் சேராமல், இருதிறப் படைகளுக்கும் போர் முடிகிற வரையில் உணவளிப்பதாகக் கூறி அங்ஙனமே செய்தான். அதனல் அச்சேரன் பெருஞ்சோற்று உதியஞ்சேரலாதன் எனப்பட்டான்.

மற்றும் வடமொழிப் புராணங்களிலும் பாண்டியரைப் பற்றிய செய்திகள் காணப்படுகின்றன. கி. மு. நான்காம் நூற்ருண்டினராகிய காத்தியாயனர் என்பவர், தாம் வட மொழிப் பாணினி வியாகரண நூலுக்கு எழுதிய வார்த்திகம் என்னும் உரையில் பாண்டிய என்னும் சொல்லுக்கும் இலக் கணங் கூறியுள்ளார். கி. மு. மூன்ரும் நூற்ருண்டிலிருந்த மௌரியப் பேரரசரான அசோகரது கல்வெட்டுக்களிலும் பாண்டியரைப் பற்றிய செய்தி கூறப்பட்டுள்ளது.

இன்னும் இலங்கையின் பழைய வரலாற்றைப் பற்றிக் கூறும் மகாவமிசம் என்னும் நூலுள்ளும் பாண்டியரைப் பற்றிய செய்தி வருகின்றது. அதனுள், புத்தர் நிரியாண காலமாகிய கி. மு. ஐந்தாம் நூற்ருண்டில் இருந்த விசயன் என்னும் ஓரரசன் ஒரு பாண்டியன் மகளை மணந்து கொண் டான் என்றும், அம்மன்னன் பாண்டிய அரசனுக்கு ஆண்டு தோறும் பரிசில் அனுப்பினன் என்றும் கூறப்பட்டுள்ளது.

இனி, வேற்று நாட்டார் பாண்டியவரசரைப் பற்றிக் கூறும் சில செய்திகளை ஆராய்வோம். கி. மு. மூன்ரும் நூற்ருண்டில் கிரேக்க நாட்டுத் தூதராய்ப் பாரத நாட்டை யடைந்த மெகஸ்தனிஸ் என்பவர் பாண்டிய நாட்டைப்பற்றி "ஹெராக் கிளீசுக்கு, பண்டேயா என்ருெரு மகள் இருந்தாள். அவளுக்குத் தெற்கே கடலோரத்திலிருந்ததொரு நாட்டை அவன் அளித்தான். அந்நாடு முந்நூற்றறுபத்தைந்து ஊர் களைக் கொண்டது. அவற்றுள் ஒவ்வொரு ஊரினரும் ஒவ் வொரு நாளைக்கு அவ்வரசன் மகளுக்குத் திறை கொடுக்க

வேண்டும் என்று அவ்வரசன் கட்டளையிட்டான்" எனக் கூறியுள்ளார்.

இனி, கி.பி. 78-இல் இருந்த மேனாட்டு ஆசிரியராகிய பிளினி என்பவர் மெகஸ்தனிஸ் கூறியதையொட்டி ஒரு செய்தி கூறியுள்ளார். அதாவது, "இந்தியாவில் பண்டோ என்னும் ஒரு அரசிக்குச் சொந்தமான நாடொன்று உண்டு. ஹெராக்கிளீசுக்கு அப்பெண் ஒருத்தியே இருந்தமையால் அவர் அவளுக்கு ஒரு பெரிய நாட்டை அளித்தார். அந்நாடு முந்நூறு ஊர்களையுடையது. அவளது மரபினர் அதனையாண்டு வந்தனர். அவர்கள் பெரிய படையை வைத்திருந்தனர்" என்பது.

மேற்கண்டவாறு கிரேக்க நாட்டாசிரியர்கள் கூறிய வரலாறுகள் மலயத்துவச பாண்டியனையும், அவனது மகள் மீனாட்சியம்மையையும் குறிக்குமென உணரலாம். அன்றி, அருச்சுனன் மணந்துகொண்டதாகக் கூறப்படும் சித்திராங்கதை என்னும் பாண்டிய இளவரசியைக் கூறியதாகக் கொள்ளினும் அமையும்.

இனித் தமிழ் மூவேந்தருள் பாண்டியர் முழுமதி மரபைச் சார்ந்த அரசர் இனத்தவர் என்றொரு கொள்கை நீண்ட நாளாக வழங்கி வருகிறது. சிலப்பதிகாரம் பாண்டியவரசனைத் திங்கள் வழியோன் என்கின்றது. சூளாமணியில் பாண்டியவரசன் தண் சுடரோன் வழி மருகன் அதாவது மதி மரபினன் எனப்படுகின்றான். பிற்காலத்து நூல்கள் பலவற்றிலும் இவ்வாறே பாண்டியர் இந்தக் குலத்தவர் எனக் குறிக்கப்படுகின்றார்கள்.

4. பாண்டியர் தலைநகரங்கள்

சங்க காலத்தில் கடல் கோள்களால் பாண்டிய நாடு அடிக்கடி அழிக்கப்பட்டதால் பல நகரங்கள் அதற்குத் தலை நகரங்களாய் அமையலாயின. அந்நகரங்களைப் பற்றிய வரலாற்றை இப்போது ஆராய்வோம்.

தென் மதுரை அல்லது மதுரை: முதற் சங்க காலத்தில் பாண்டியநாடு இன்றைய குமரிப் பெருந்துறைக்குத் தெற்கே எழுநூற்றுக் காவதத்தொலைவு பரவியிருந்தது. பின்னர் அது கடல்கோள்களால் அழிந்து சுருங்கியது. கடல்கோளால் அழிவதற்கு முன் பரந்துபட்டிருந்த பாண்டிய நாட்டுக்கு மதுரை என்னும் பெயருடையதொரு நகரம், தலைநகரமா யிருந்தது. அது, இன்று மதுரை என வழங்கப்படும் நகரத் திற்குத் தெற்கில் பல காவதங்களுக்கு அப்பால் இருந்தது. அதனால், அது தென்மதுரை என்று இப்போது குறிக்கப் படுகின்றது. அகத்தியர் பண்டு வடக்கிருந்து தெற்கே வந்து பாண்டியவரசனைக் கொண்டு முதற் சங்கம் நிறுவித் தமிழாராய்ந்தது இத்தென்மதுரையில்தான். இதைத்தவிர இதைப்பற்றிய வரலாறு ஒன்றும் தெரிந்திலது.

கவாடபுரம்: முதற் கடல்கோளால் தென்மதுரை யழிந் ததும், பாண்டியர் கவாடபுரம் என்னும்நகரைத் தலைநகரமாகக் கொண்டனர். இங்குத்தான் இடைச் சங்கம் நடந்து வந்தது. இந்நகர் இரண்டாம் கடல்கோளால் அழிந்த குமரியாற்றிற்கு வடக்கிலும், இப்போதைய குமரி முனைக்குத் தெற்கிலுமாக அவ்விரண்டிற்கும் இடையில் இருந்தது. இந்நகர், பாண்டி யர்க்குத் தலைநகராயிருந்த காலத்தில்தான் இராமாயண, பாரத நிகழ்ச்சிகள் நிகழலாயின. இதற்கு அவ்விதிகாசங்களி லேயே சான்றுகள் உள்ளன. இராமாயணத்தில் சீதையைத் தேடுவதற்காக இராமர் வானரர்களை அனுப்பிய காலத்துத்

தெற்குப் பக்கத்திற்குப் போக்கிய அநுமான் முதலியோரைப் பார்த்து, "நீங்கள் தெற்கே சென்ருல் பாண்டியரது கவாடத்தைப் பார்ப்பீர்கள்" என்று கூறியதைப்பற்றி முன்னமேயே கூறியிருக்கிறேம். மற்றுப் பாரதத்தில் துரோண பருவத்தில் பாண்டவர்களுக்குத் துணையாயமைந்த பாண்டியன் துரோணரை எதிர்த்துப் போரிட வந்தான் என்றும், இப் பாண்டியன் ருக்மி, கர்ணன், அருச்சுனன், அச்சுதன் இவர் களோடு ஒப்புமை கூறத்தக்க வலிமை படைத்தவன் என்றும் கூறப்பட்டுள்ளது. மற்றும் இவன் துவாரகையை அழிப்ப தற்கும் உலக முழுவதையும் வெல்லுவதற்கும் கருதியிருந்தனன் என்றும், கற்றறிந்த நண்பர்களால் தடுக்கப்பட்டு அம் முயற்சியைச் செய்யாதொழிந்தனன் என்றும் ஆண்டுக் கூறப் பட்டுள்ளது.

நிற்க, மௌரிய மரபை நிலைநாட்டிய சந்திரகுப்த மன்னனுக்கு அமைச்சராய், அவன் அப்பேரரசை அடைவ தற்குக் காரணமாயிருந்தவர் சாணக்கியர் என்னுமொருவர் என்பதையறிவோம். அவரே அர்த்த சாத்திரம் என்னும் பெரிய சிறந்த பொருள் நூலை இயற்றியவர். அவர் தமது நூலில் முத்துக்களின் பலவகைகளைப் பற்றிக் கூறியுள்ளார். அவற்றுள் ஒன்றை அவர் பாண்டிய கவாடகம் என்னும் பெயரால் குறிக்கின்ருர். இப்பெயரிலிருந்து கவாடபுரத்திற்கு அருகில் கடலில் அக்காலத்தில் சிறந்த முத்துக்கள் எடுக்கப் பட்டன என்றும், அவை தலைநகரத்திற்குக் கொணரப்பட்டு அங்கிருந்து பலவிடங்களுக்கும் அனுப்பப்பட்டன என்றும், அதனுல் அவை அத்தலைநகரத்தின் பெயரால் வழங்கப்பட்டன என்றும் அறியலாம். தமிழ் நூல்களில் இவை தென்கடல் முத்து எனச் சிறப்பிக்கப்படுகின்றன. இக்கவாடபுரம் கடலால் கொள்ளப்பட்ட காலத்து, அஃதாவது இடைச்சங்க இறுதிக் காலத்தில் பாண்டியவரசன் முடத்திருமாறன் என்பவன் இருந்தான் என்று இறையனுர் களவியலுரை கூறுகின்றது.

இவ்வரசன் இரண்டாம் கடல் கோளால் இறவாது தப்பி, இப்போதைய மதுரையைத் தலைநகராக்கிக் கொண்டு மதுரையை ஆண்டுவந்தான். இங்ஙனம் தப்பியோடிய காலத்தில் இவன் கால் முடமாயிருக்க வேண்டும் என்றும், அறிஞர் கருதுகின்றனர்.

மதுரை அல்லது வடமதுரை: இரண்டாம் கடல் கோளுக்குப் பின் இப்போதைய மதுரை பாண்டியர்க்குத் தலைநகராயிற்று எனக் கூறினோம். முதற் சங்க காலத்து மதுரைக்கு இது வடக்கிலுள்ளது ஆதலால், இது வடமதுரை என்றும் குறிக்கப்படும். இம் மதுரையைப் பற்றிப் பல செய்திகள் புராண நூல்களில் கூறப்பட்டுள்ளன. இதற்குக் கூடல், ஆலவாய் முதலிய பல பெயர்கள் உண்டு. இப்பெயர்க் காரணங்கள் வருமாறு:

ஒருகால் பாண்டியன் மீது சினங்கொண்ட இந்திரன் மதுரையை அழிக்குமாறு தனக்கு அடங்கிய ஏழு மேகங்களையும் ஏவினான். அவை மதுரை நகரின் மேலே பரவிப் பெருமழை பொழிந்து, அந்நகரை அழிக்கத் தொடங்கின. அப்போது பாண்டியவரசன் மதுரைச் சொக்கநாதரை வழிபட்டு அவ் வின்னலைப் போக்கியருளுமாறு வேண்டினான். அப்போது அவ்விறைவரது ஆணையால் அவரது சடைமுடியினின்று நான்கு மேகங்கள் கிளம்பி, மதுரை நகர்மீது நான்கு திசைகளிலும் நான்கு மாடங்களைப் போல ஆகி, இந்திரனது பெருமழையால் மதுரை அழியாதவாறு காத்தன. இதனால், மதுரைக்குக் கூடல் அல்லது நான்மாடக்கூடல் என்பது பெயராயிற்று.

ஒருகால் மதுரை கடல்கோளால் அழிய, அது இருந்த விடங்கூட அறிய முடியாமற் போயிற்று. பிற்காலத்தில் மதுரையை ஆளப்போந்த பாண்டியவரசன், முன் மதுரை

இருந்தவிடத்திலேயே மீண்டும் புதிய மதுரையை உண்டாக்கி அதனைத் தலைநகராகக் கொண்டு ஆளவேண்டுமென்று விரும்பினன். அப்போது அவனுக்குப் பழைய மதுரையின் எல்லை தெரியாமற் போனதால், அதைக் காட்டியருளுமாறு சிவபெருமானை வேண்டினன். அவரும் அவனது வேண்டு கோட்கிரங்கித் தமது கையில் கடகமாய் அமைந்திருந்ததொரு பாம்பைக் கீழே செல்லவிட்டு, மதுரை நகரின் எல்லையைக் குறித்துக்காட்டுமாறு அதற்குப் பணித்தார். அது சென்று தன் உடலை வளைத்து நிறுத்தி, மதுரையின் எல்லையைப் பாண்டியனுக்குக் குறித்துக் காட்டியது. இதனல் மதுரைக்கு ஆலவாய் என்பது பெயராயிற்று. இவ்விரண்டும் புராணக் கூற்று.

இனி, மணிமேகலையில் ஆபுத்திரன் என்பான் ஒருவன் மதுரையில் செழுங்கலைநியமம் என்னும் சிந்தாதேவி கோயிலில் இருந்துகொண்டு, அங்நகரிலுள்ள ஏழை மக்கட்கு உணவளிப் பதாகிய அறச் செயலைச் செய்து கொண்டிருந்தான் என்னு மொரு செய்தி காணப்படுகிறது. சிந்தாதேவி என்பவள் கலைமகளேயாம். இதனல் மதுரையில் கலைமகளுக்குக் கோயி லமைந்திருந்தது என்று தெரிகிறது. பௌத்த சமயத்தில் பற்றுள்ளங்கொண்டவனகிய ஆபுத்திரன் இதிலிருந்து அறஞ் செய்தான் என்பதாலும், இத்தேவியின் அருளாலேயே அவன் அமுதசுரபி என்னும் சோறு குறையாத ஓட்டினைப் பெற்றான் என்று மணிமேகலை கூறுவதாலும், இக்கோயில் பௌத்த சமயத்தைச் சார்ந்தோரால் போற்றப்பட்டு வந்தது என்று அறியலாம்.

நிற்க, கோவலனும் கண்ணகியும் புகார் நகரினின்று மதுரைக்குச் செல்லப் புறப்பட்டுக் கவுந்தியடிகளுடன் வழி நடந்து மதுரையை அடைந்த காலை, முதல் முதல் மதுரையை அடுத்த புறஞ்சேரியில் வந்து தங்கினர் எனச் சிலப்பதிகாரம்

குறிக்கின்றது. அப்புறஞ்சேரி துறவிகள் வசிக்குமிடமாதலால், அங்கு இல்லறத்தார் இரவில் தங்கலாகாது என்றும், அதனல் கோவலனும் கண்ணகியும் மாலையில் மதுரை நகர்க்குள் சென்றுவிட வேண்டும் என்றும் கவுந்தியடிகள் கூறுகின்றுர். அப்போது அங்கு ஆரியாங்கனைக்குப் பாற்சோறு படைத்துப் பூசித்துவிட்டு வந்த மாதரி என்னும் இடைக்குல முதுமகள் ஒருத்தியிடம் அவர் கோவலனையும் கண்ணகியையும் அடைக்கலமாகக் கொடுத்து அவளுடன் அவர்களை மதுரை நகர்க்கு அனுப்புகின்றுர். இதனல் பண்டைக்காலத்தில் மதுரை நகரையடுத்துத் துறவிகள் வசித்தற்குரிய புறஞ்சேரி என்னும் ஓரிடம் அமைந்திருந்தது என அறியலாம்.

மதுரை நகரையடுத்து வையையாறு ஓடியது. அதில் அமைந்த மணற் குன்றுகளிடத்து மரம் பயில் பொழில்கள் செழித்திருந்தன. அப்பொழில்களில் கோங்கு மரங்கள் மிகுந்திருந்தன. அம்மரத்தின் பூக்களும், மற்ற மரங்களின் பூக்களும் மாலை யொழுகினற் போல வையை நீரிர் மிதந்தோடின. அப்பொழில்களிலுள்ள நீர்த்துறைகளை யடுத்து நீண்ட காலமாய் வாழ்ந்து வரும் பாண்குடி மக்களின் குடியிருப்பிடங்கள் இருந்தன என்று மதுரைக்காஞ்சி கூறுகின்றது. இன்னும் அவ்வையையாற்றில் வெள்ளக் காலங்களில் புது நீர்விழா நடக்குமென்றும், அப்போது மக்கள், சிங்கமுகம், யானைமுகம் முதலிய முகப்புக்கள் அமைந்து அழகாய் ஒப்பனைசெய்யப்பெற்ற படகுகளில் ஏறி, வையைப் பெருக்கில் அவற்றைச் செலுத்தி விளையாடுவர் என்றும் நூல்கள் கூறுகின்றன.

வையையாற்றை அடுத்து மதுரை நகரின் அகழியும், புறமதிலும் இருந்தன. அந்த அகழி மண்ணுள்ள அளவும் ஆழ்ந்தது. நீலமணி போலும் நீரைக் கொண்டிருந்தது. உழிஞைப்போர் செய்ய வந்த பகையரசர் வெற்றி பெற்று மண்ணு மங்கலம் என்னும் கொண்டாட்டத்தைக் கொண்டா

டாதவாறு தடுத்த பெருமையை யுடையது. அதனையடுத்த மதில் தேவருலகிற்குச் செல்லுமாறு உயர்ந்தது; பல கற்படைகளையுடையது. அதிலமைந்த வாயில்கள் மிகப் பழையன; நெடுங்காலமாய்ப் பகைவரால் சிதைக்க இயலாத பெருமை வாய்ந்தன. அவ்வாயில்களில் தெய்வங்கள் நிலை நிறுத்தப் பெற்றுப் பூசிக்கப்பட்டு வந்தன. அப்பூசைக் காலத்தில் நெய்விடப் பெற்றதால் அவை கருமை நிறங்கொண்டிருந்தன. அவ் வாயில்களின்மீது அமைந்த மாடங்கள் மேகம் உலாவுமாறு மலைகளைப் போல ஓங்கியிருந்தன. அவ்வாயில்களிடத்து மக்களும் மாக்களும் வையையாற்று நீரைப்போல இடையறாது நடந்துகொண்டிருந்தனர்.

மதுரை நகரத் தெருக்கள் இருபக்கங்களிலும் உயரிய இல்லங்களைப் பொருந்தி இடையேயமைந்த வழிகளோடு கூடிப் பேராற்றையும் அதனிருகரைகளையும் ஒத்து விளங்கின. அத் தெருக்களிடத்துப் புயற்காற்றால் முழங்கும் கடலொலி போல முரசொலி முழங்கியது. அவ்வொலி நாட்டவர்க்கு விழாவினைத் தெரிவிப்பதற்காக ஏற்பட்டது. இன்னும் அத்தெருக்களில் குளத்தில் கையால் நீரையடித்து நீந்தி விளையாடுதலைப் போலப் பலவகை இயங் (வாத்தியங்) களை வாசித்து ஒலியெழுப்பி மக்கள் மனமகிழ்ந்து ஆரவாரித்தனர்.

நிற்க, மதுரையில் நாளங்காடி, அல்லங்காடி என இரு கடைத் தெருக்கள் உண்டு. நாளங்காடி என்பது பகலில் விற்பனை நடக்கும் கடைத்தெருவாம். அல்லங்காடி என்பது இரவில் விற்பனை நடக்கும் கடைத் தெருவாகும். அவை அழகிய ஓவியங்களைக் கண்டாற் போன்ற கண்ணுக்கினிய தோற்றம் வாய்ந்திருந்தன.

மதுரை நகரத் தெருக்களில் பற்பல மாளிகைகளில் பற்பல கொடிகள் மலைகளிடத்து அருவிகளைப் போல விளங்கி

யிருந்தன. அவற்றுள் சில கோயில்களில் விழாக்கள் எடுத்தற்காக உயர்த்தப்பட்டவை. வேறு சில போர்களில் தண்டத்தலைவர் பெற்ற வெற்றிகளைக் குறிப்பதற்காகத் தூக்கிய வெற்றிக் கொடிகளாம். மற்றும் சில பகைவரை எதிர்த்துச் சென்று செய்த தும்பைப் போரில் பெற்ற வெற்றிகளைக் குறிப்பதற்காக உயர்த்தப்பெற்ற வெற்றிக் கொடிகளாகும். இவற்றைத் தவிரக் கள்ளினது களிப்பு மிகுதியைச் சாற்றுங் கொடிகளும், கல்வி, தவம், கொடை முதலியவைகளில் மேம்பட்ட தன்மையால் எடுக்கப்பட்ட கொடிகளுமாகப் பல்வேறு வகைப்பட்ட கொடிகள் ஆங்குக் காற்றால் அலைக்கப்பெற்றுப் படபடவென்ற ஓசையுடன் அசைந்தாடிக் கொண்டிருந்தன.

இன்னும் அந்நகரத் தெருக்களிலே, கடலில் கடுங்காற்றால் அலைக்கப்பெற்றதால் நங்கூரம் பாய்ச்சி நிறுத்தப்பெற்ற மரக்கலமானது நங்கூரக் கயிற்றோடு போராடிச் சுழலுதலைப் போலச் சினமிகுந்து பாகரைக்கொன்று சங்கிலியோடு கூடிய கட்டுத்தறியை முறித்து, அத்தறியுடன் மதயானை சுழன்று திரிந்தது. அதனை அடக்குவோர் அதன் முன்னும் பின்னும் சங்குகளை முழக்கிக்கொண்டு சென்றனர். இன்னும் அங்கு வானம் மறையக் காற்றைப் பிளந்துகொண்டு செல்லும் அன்னப் பறவைகளைப் போலப் பல நிறங்களையுடைய குதிரைகள் பூட்டப்பெற்றுப் பல தேர்கள் விரைந்து செல்லா நிற்கும். மேலும் குதிரைகளைப் பயிற்றுவோனாகிய ஆசிரியன் ஐவகைச் செலவுகளையும், பதினெட்டுச் சாரிகளையும் அவற்றிற்குப் பயிற்றுதலால் அவற்றின் குளம்புகள் அழுந்தின சுவடுகள் பற்பல ஒழுங்குகளில் தெருக்களில் படிந்திருந்தன. இன்னும் தெருக்களில் மதயானைகளைப் போன்ற வலிவும் வீரமும் உடைய போர் வீரர், விற்போர் முதலியவற்றைச் செய்தவாறு செல்லுதலால் அத்தெருக்கள் ஆரவாரம் மிகுந்தவையாயிருந்தன.

பின்னும் அத்தெருக்களின் வீரமுரசினது கண்ணையொத்த பூந்தட்டுக்களில் வைத்துப் பூமாலைகள், பண்ணியாரங்கள், நறுமணப் பொடி, வெற்றிலை பாக்கு முதலிய பண்டங்களை விற்பார் திரிந்து திரிந்து அலுத்து அங்குள்ள மாடங்களின் நிழலில் தங்கியிருப்பார்.

கொற்கை: பாண்டியர்க்குத் தலைநகரம் மதுரை என்பதே வழக்காயினும், தமிழ் நூல்கள் பாண்டியவரசரைக் கொற்கைக்கு உடையவர் எனச் சிறப்பித்துக் கூறுகின்றன. சங்க காலத்துப் பாண்டிய இளவரசர் கொற்கையினின்று பாண்டிய நாட்டின் ஒரு பகுதியை ஆண்டு வந்தனர் எனத் தெரிகிறது. மற்றும் பிற்காலப் பாண்டியர்க்குக் கொற்கை தலைநகரமாகவும் இருந்திருக்கிறது. ஆதலின் அந்நகரைப்பற்றிய செய்திகளையும் ஆராய்வோம்.

சிறுபாணாற்றுப் படை பாண்டியனைக் "கொற்கைக் கோமான்" என்கின்றது. மதுரைக் காஞ்சியில் பாண்டியன் "கொற்கையிலுள்ளோர் விரும்பும் பொருநன்" எனக் குறிக்கப் படுகின்றான். இக்கொற்கை துறைமுக நகரமாகும். சூல் முற்றிய ஒளி முதிர்ந்த சீரிய முத்தினையும், விளங்குகின்ற சங்கினையும் உடைய சங்கு குளிப்பார் குடியிருப்புகளை உடையது இந்நகர். இன்னும் கள்ளுண்ணும் இழிந்த குடிகளையுடைய சிற்றூர்கள் பல இந்நகரெல்லையில் அமைந்திருந்தன. "மந்தி முத்தையடக்கி, உமட்டியர் ஈன்ற புதல்வரோடு ஆடும் கொற்கை" என இந்நகர்ச் சிறப்பைச் சிறுபாணாற்றுப்படை விளக்குகின்றது. இத்துறையிடத்து முத்துக்கள் கீழே சிந்திக் கிடத்தலால் அங்கு வரும் புரவிகளின் குளம்புகளில் அவை சிக்கி, அக் குதிரைகளின் போக்கைத் தடுக்கின்றன என அகநானூற்றில் கூறப்பட்டுள்ளது. இதனால் பண்டைக்காலத்தில் இது முத்திற்குப் பெயர் போனது என அறியலாம். முன்னம் கவாடபுரம் இரண்டாம் கடல்கோளால் அழிந்த பின் முத்துக்குளிக்கும் தொழில் இந்நகரில் மேம்பட்டது போலும்.

5. பாண்டியவரசர்

1. நிலந்தரு திருவின் நெடியோன்

தமிழ் நாட்டில் எக்காலத்தில் அரசு தொடங்கிற்று? தமிழ் நாட்டு மூவேந்தருள் யார் முதல்வர்? என்னும் வினுக்கட்கு விடைகூற இயலாது. "கற்றேன்றி மண்டோன்ருக் காலத்தே வாளோடு முற்றேன்றி மூத்தகுடி" தமிழ் மூவேந்தர் குடி எனத் தமிழ் நூல்கள் கூறுவதால் மிகப்பழங் காலந் தொட்டுத் தமிழ்நாடு சேர சோழ பாண்டிய மன்னர்களால் ஆளப்பட்டு வந்தது என்று கூற வேண்டியிருக்கின்றது. "வண்புகழ் மூவர் தண்பொழில் வரைப்பின்" (சிறந்த புகழை யுடைய சேர சோழ பாண்டியராகிய மூவேந்தரது குளிர்ந்த சோலைகளையுடைய நாட்டில்) என்றும், "போந்தை வேம்பே ஆர்என வரூஉம், மாபெருந் தானையர் மிலைந்த பூவும்" (பனை, வேம்பு, ஆத்தி என்று கூறப்படுகின்ற அம் மூவேந்தர் சூடிய மாலையும்) என்றும் தொல்காப்பியம் மூவேந்தரைப்பற்றிக் கூறுகிறது.

நிற்க, தமிழ் மூவேந்தருள் ஒருவராகிய பாண்டியருடைய செய்திகள் சிலவற்றை இறையனுர் களவியலுரை வாயிலாக அறிகின்றேம். ஆங்கு முதற் சங்கத்தைப்பற்றிக் கூற வந்த உரைகாரர், மதுரையில் முதற் சங்கம் நிறுவி நடத்தி வந்த பாண்டியவரசர் காய்சினவழுதி முதலாகக் கடுங்கோன் ஈருக எண்பத்தொன்பதின்மர் என்று கூறியுள்ளார். அதனுல் முதற் பாண்டியவரசன் காய்சினவழுதி என அறியலாம். இவனைப் பற்றிய வரலாறு ஒன்றும் தெரியவில்லை. முதற்சங்க காலத்து முதலரசன் முதல் இறுதியரசன் வரையில் சென்றகாலம் நாலாயிரத்து நானூற்று நாற்பது ஆண்டுகள் எனக் கூறப் படுகின்றது. இக்காலவரையறைக்குள் இருந்த அரசரைப் பற்றியும் ஒன்றும் தெரியவில்லை.

இனி, இடைச்சங்கத்தைப் பற்றிய இறையனுர் களவியலுரை, அச்சங்கத்தை நடத்தியவர் வெண்டேர்ச் செழியன் முதலாக முடத்திருமாறன் ஈருக ஐம்பத்தொன்பதின்மர் எனக் கூறுகின்றது. இவருள் முடத்திருமாறன் நீங்கலாக ஏனையோரைப் பற்றிய செய்தியொன்றும் தெரிந்திலது. இம் முடத்திருமாறன் செய்தியைப் பற்றி இப்போது ஆராய்வோம். முடத்திருமாறன் காலத்துக் கடல்கோள் ஒன்று பாண்டிய நாட்டில் ஏற்பட்டது என்றும், இவ்வரசன் அக் கடல்கோளுக்கு முன்னும் பின்னும் இருந்தான் என்றும், இவனே கடைச்சங்கம் நிறுவியவன் என்றும் இறையனுர் களவியலுரையால் அறியலாம்.

நிற்க, தொல்காப்பியப் பாயிரத்தில் நிலந்தரு திருவிற் பாண்டியன் அவைக்களத்து அதங்கோட்டாசான் முன்னிலையில் தொல்காப்பியம் அரங்கேற்றப்பட்டது என்று கூறப்பட்டிருக்கிறது.

குமரிமலையும் பஃறுளியாறும் கடலால் கொள்ளப்பட்டது, முதற் கடல்கோள் நிகழ்ந்த காலத்திலாம் என்றும், முடத்திருமாறன் காலத்தில் உண்டான கடல்கோள், இரண்டாம் கடல்கோள் என்றும் அறிஞர் கருதுகின்றனர். மேலும் இடைச்சங்ககாலத் திறுதியில் இருந்த நிலந்தரு திருவிற் பாண்டியனும், கடைச்சங்க காலத்துத் தொடக்கத்தில் இருந்த முடத்திருமாறனும் ஒருவரே என்பதும் அறிஞர் சிலர் கருத்தாம். இன்னும் கடல் வடிம்பலம்ப நின்ற பாண்டியனும், நிலந்தரு திருவிற் பாண்டியனும் ஒருவரே என்பதும் சிலர் கருத்தாம்.

நிலந்தரு திருவிற் பாண்டியனைக் குறித்து மாங்குடி மருதனுர் என்னும் புலவர் தாம் பாடிய மதுரைக் காஞ்சியில் அவன் இருபெரு வேந்தராகிய சேர, சோழரையும் மற்றும் வேளிர் பலரையும் வென்முன் என்று கூறுகின்ருர். மேலும்

இவன் மலைகளைக் கடந்து வழிகளையுண்டாக்கும் மிகவாற்றல் உடையவன் என்றும், நிலந்தந்த பேருதவியைச் செய்தவன் என்றும், நெடியோன் என்றும் அவர் கூறியிருக்கின்றார். இன்னும் நெட்டிமையார் என்னும் புலவர் பல்யாகசாலை முதுகுடும்பிப் பெருவழுதியைப் பற்றிப் பாடிய பாடலில் "முந்நீர்க் கடல் தெய்வத்திற்கு எடுத்த விழாவினையுடைய நெடியோனால் உளதாக்கப்பட்ட பஃறுளியாற்று மணலினும் பலகாலம் நீ வாழ்வாயாக" என வாழ்த்தியிருக்கின்றார். இதனால் பஃறுளி யாறு இந்த நெடியோனாகிய நிலந்தருதிருவிற் பாண்டியனால் வெட்டப்பட்டது என அறியலாம்.

நிற்க, சிலப்பதிகாரத்து இப்பாண்டியனைப் பற்றிய செய்தி கடல் கோளுக்குப்பின் அரசனாகிய இவன் இமயம் வரையிலுமுள்ள பல வடநாட்டு அரசரை வென்றான் என்று கூறப்பட்டுள்ளது. முல்லைக்கலி இவனைக் குறித்து, "தனது அடிகளால் கடலின் அளவை இவ்வளவு என உலகத்தரசர்க்குணர்த்தியதோடு, தன் வேலை எறிந்து கடல் நீரை வற்றச் செய்தான்" என்கின்றது. இங்ஙனம் செய்ததால் கடல் இவன் மீது பகை கொண்டு இவனது நாட்டை விழுங்கிவிட்டது. அதனால் நாட்டளவு மிகவும் குறைய இவன் பிற தமிழ் நாட்டரசர் மீது படையெடுத்துச் சென்று புலி உருவினையும், வில் உருவினையும் நீக்கித் தனது மீன் உருவினை நிலை நாட்டினான்.

நிற்க, நெடியோன் என்னும் இவனது பெயர்க்காரணம் பற்றிப் புறநானூற்று உரையாசிரியர், "விந்நீர்க்கண் வடிம்பலம்ப நின்ற வியப்பால் நெடியோன் என்றார்" என்று கூறியுள்ளனர். மாவலி மன்னனிடம் மூன்றடி மண்கொண்ட திருமால் மிக உயர்ந்து நெடியோனாய் நின்றான் என்னும் பொருள் இப்பெயரில் ஒலிக்கும். இவ்வரலாற்றையே பிற்காலத்துத் திருவிளையாடற் புராணத்தில், கடல்சுவற வேல் விட்ட வரலாறாகக் குறித்தனர். அவ்வரலாறாவது :

"ஒரு காலத்தில் கடல் பொங்கி வந்து மதுரையை அழிக்கத் தொடங்கியது. அப்போது மதுரையை ஆண்டு கொண்டிருந்த உக்கிர குமார பாண்டியர் என்பவர், தமக்குச் சோமசுந்தரப் பெருமான் அருளிய வேலைக் கடல்மீது எறிந்தார். அது கடல் நீரையெல்லாம் வற்றச் செய்துவிட்டது. கடல் அவனைப் பணிந்து அவன் அடிகளைக் கழுவியது. அதனால் உயர்வுபெற்ற அவ்வரசன் கடல் வடிம்பலம்ப நின்ற பாண்டியன் எனப் புகழ்பெற்றான்." என்பது.

இவ் வரலாற்றில் பாண்டியன் பெயர் உக்கிர குமார பாண்டியன் எனக் குறிக்கப்பெற்றிருக்கிறதாயினும், இச் செயல் நிலந்தரு திருவிற் பாண்டியனது செயலே என அறியலாம். கடல் பொங்கி வந்தது எனக் கூறப்பட்டது கடல் கோளைக்குறிக்கும். கடல்சுவற வேல்விட்டது என்றது, கடல் கடந்து இவ்வரசன் பல நாடுகளுக்குச் சென்று ஆங்காங்குள்ள அரசர் பலரை வென்று அடிப்படுத்தியதைக் குறிக்கும் என்று கொள்ளுதல் பொருத்தமெனத் தோன்றுகின்றது. கடல் வடிம்பலம்ப நின்றது எனக் கூறியது இவன் கடலில் நாவாய்களை ஓட்டிய திறனைக் குறிப்பதாகும் என அறிஞர் கருதுகின்றனர். மற்று இவ்வரசன் கடல் கடந்து வென்ற நாடுகளில் கடற்கரைப் பாறையில் தன் காலடியைப் பொறித்துக் கடல் நீர் அச்சுவட்டைக் கழுவுமாறு செய்த செயலே கடல்நீர் வடிம் பலம்ப நின்ற பாண்டியன் என்பதால் குறிக்கப்படுகிறது. என்றும் ஓர் அறிஞர் கருதுகின்றார்.

தான் கடலுக்கு அப்பால் உள்ள நாடுகளை வென்று மேம்படுதற்குக் கடல் உதவியாயிருந்தது பற்றிக் கடல் தெய்வத்திற்கு இவன் விழாச் செய்தனன். அதனால் இவன் முந்நீர் விழவின் நெடியோன் எனச் சிறப்பிக்கப்பட்டான்.

மற்றும், இவன் கவியரங்கேறிய பாண்டியனுமாவான். களவியலுரைகாரர், "கவியரங்கேறினர் எழுவர் பாண்டியருள்

ஒருவன் சயமா கீர்த்தனாகிய நிலந்தரு திருவிற் பாண்டியன் தொல்காப்பியம் புலப்படுத்தி(ரீஇயி)னான்" எனக் கூறுவதால் இதனை அறியலாம்.

இங்கு இவ்வரசன் சயமா கீர்த்தி எனக் குறிக்கப்படுதல் காண்க. இவ்வாறே இவ்வரசன் அடியார்க்கு நல்லார், நச்சினார்க்கினியர் ஆகியோராலும் குறிக்கப்படுகின்றான். இவ்வாறு குறிக்கப்படுதற்குக் காரணம் இவன் யவத்தீவில் அதாவது சாவகத் தீவில் பெற்ற வெற்றியும், அங்குக் கடல் நீர் தன் அடிகளைக் கழுவுமாறு பாறையில் தன் அடியை இவன் பொறித்து வைத்ததுமேயாமென்று திரு. ரா. இராகவையங்காரவர்கள் கருதுகின்றார்கள். இதற்கு அவர்கள் அத்தீவிலுள்ள கல்வெட்டுக்கள் சிலவற்றையும் சான்றாகக் காட்டுகின்றார்கள். சயமா கீர்த்தி என்னும் பெயரில் சய என்பது யவத்தீவு அதாவது சாவகத் தீவைக் குறிக்கும் என அவர்கள் கருதுகின்றார்கள்.

இவ்வாறு இவன் கடல் கடந்து வென்று கொண்ட நாடுகள் சாவகத்தீவு, அதனை யடுத்துள்ள சிறிய தீவாகிய மதுரை என்னும் தீவு, மலயம் எனப்படும் சுமத்திரா தீவு, போர்னியோ தீவு முதலியனவாம். இவையெல்லாம் பண்டைப் பாண்டியர்களால் ஆளப்பட்டன என்பதற்கு அத்தீவுகளிலேயே சான்றுகள் உள்ளன. மதுரை என்று ஒரு தீவிற்குப் பெயர் ஏற்பட்டிருத்தல் காண்க. இன்னும் மலயம் என்பது ஒரு தீவிற்குப் பெயராய் அமைந்ததும், அகத்தியர் வாழ்ந்த பொதிய மலையின் பெயராகிய 'மலயம்' என்பதைப் பின்பற்றி எழுந்த பெயரேயாம். போர்னியோ தீவில் பொருநை என்னும் பெயரால் ஓராறு குறிக்கப்படுகின்றது. இவற்றையெல்லாம் நோக்கக் கடல் வடிம்பலம்ப நின்ற பாண்டியனும், நிலந்தரு திருவிற் பாண்டியனும் ஒருவனேயாவன் என்பது புலப்படும்.

'முடத் திருமாறன்' என்னும் பெயரில் 'முடம்' என்பதை எடுத்துவிட்டால் 'திருமாறன்' என்பது மிகுந்து நிற்கின்றது. இத் 'திருமாறன்' என்பது 'திருவிற் பாண்டியன்' என்பதனோடு பெயரால் ஒருமைப்படுகின்றது. கடல்கோளுக்கு முன்னும் பின்னும் முடத்திருமாறன் இருந்ததாகத் தெரிவதால், கடல் கோள் காலத்தில் தப்பி வரும்போது இவன் கால்கள் முடம் பட்டிருத்தல் கூடுமென்றும், அதனால் முடத் திருமாறனும், நிலந்தரு திருவிற் பாண்டியனும் ஒருவனேயாவான் என்றும் திரு. ரா, இராகவையங்கார் அவர்கள் கருதுகின்றார்கள். வேறு சில அறிஞர் இவ்விருவரும் வேறு வேறானவர் என்னுங் கொள்கையுடையவராயிருக்கின்றனர்.

இவன் பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதிக்கு முற்பட்டவன். முதுகுடுமியை நெட்டிமையார் "நிலந்தரு திருவிற் பாண்டியனால் உளதாக்கப்பட்ட பஃறுளி யாற்றினும் பல காலம் நீ வாழ்வாயாக" என வாழ்த்துவதால் இதனையறியலாம்.

2. பல்யாகசாலை முதுகுடுமிப் பெருவழுதி

சங்ககாலப் பாண்டியருள் இவன் நிலந்தரு திருவிற் பாண்டியனுக்கு அடுத்தபடியாகப் பழமையானவன் எனக் கூறலாம். இவனுடைய பெயரிலிருந்து இவன் பல வேள்விகளைச் செய்தவன் என்பது புலப்படும். இவனைப் பாடிய புலவர்கள் இவனைக் குடுமி என்னும் பெயரால் குறிக்கின்றனர். இவனது குடுமி முதுகுடுமி எனச் சிறப்பிக்கப்படுகின்றது. இதனால் இவன் எப்போதும் வேள்வித் தலைமைக்குரிய குடுமியோடு கூடியிருப்பவன் என்பது பெறப்படுகின்றது. இவன் அசுவமேதம் பல செய்திருக்கலாம். மற்றும் இராசசூயம் முதலியனவும் வேட்டியிருக்கலாம். இவன் மறக்கள வேள்வி செய்தவன் எனத் திரு. உ. வே, சாமிநாதையரவர்கள் தமது குறிப்புரையில் குறித்துள்ளார்கள்.

இவனைப் பாடிய புலவர்கள் காரிகிழார், நெட்டியமையார், நெடும்பல்லியத்தனுர் என்னும் மூவராவர். இவருள் காரிகிழார் காரி என்னும் ஊரினர். அவ்வூர் தொண்டை நாட்டில் உள்ள தென்றும், இப்போது அது இராமகிரி என்னும் பெயரால் வழங்கப்படுகிறது என்றும் திரு. ஐயரவர்கள் கூறுகின்றூர்கள். நெட்டிமையார் என்பவர் நெடுமை+இமையார் அதாவது நீண்ட இமையையுடையவர் என உறுப்பாற் பெயர் பெற்றவ ராகக் கொள்ளப்படுகின்றூர். நெடும்பல்லியத்தனுர் இசையில் வல்ல புலவர் என்றும், பாணர் குலத்தவராயிருக்கலாம் என்றும் உய்த்துணரப்படுகின்றூர்.

காரிகிழார் இவ்வரசனை, "உனது புகழ் வடக்கில் பனி மூடப்பெற்ற இமயமலைக்கு வடக்கிலும், தெற்கில் குமரி யாற்றிற்குத் தெற்கிலும், கிழக்கில் சகரரால் தோண்டப்பட்ட சாகரம் என்னும் கடலுக்குக் கிழக்கிலும், மேற்கில் பழைய கடலுக்கு மேற்கிலும், மற்றும் நிலம், வானம், துறக்கம் என்னும் மூன்றில் கீழதாகிய நிலத்திற்குக் கீழும், மேலதாகிய கோவுலகத்திற்கு மேலும் மேம்படுவதாக" என வாழ்த்து கின்றூர்.

இவரது பாட்டில் "தெனுஅது உருகெழு குமரியின் தெற்கும்" என்னும் தொடருக்கு உரையாசிரியர், "தெற்கின் கண்ணது உட்கும் திறம் பொருந்திய கன்னியாற்றின் தெற்கும்" எனப் பொருள் கூறுகின்றூர். இதனுல், குமரிக் கோடும், பஃறுளியாறும் கடலால் கொள்ளப்பட்டபின் குமரி யாறு பாண்டிய நாட்டின் தெற்கெல்லையாய் அமைந்திருந்த காலத்தில் இவன் அரசனுயிருந்தவன் என்பது பெறப்படும். இங்குக் கீழ்க்கடலைத் 'தொடுகடல்' அதாவது சகரரால் தோண்டப்பட்ட கடல் எனக் குறித்திருத்தலால் இவ்வரசன் காலத்தில் சகரரால் கடல் தோண்டப்பட்ட வரலாறு செவி வழிச் செய்தியாக இருந்திருக்க வேண்டும் என அறியலாம்.

மேலும் இப் புலவர் இவனைக்குறித்து "நீ பகைவர் நாட்டில் கடற் படையோடு சென்று அவர்களது பசிய வினை நிலங்களையுடைய அரிய மதிலரண்களைக் கைக்கொண்டு அவற்றுட் கிடைத்த நல்ல அணிகலன்களைப் பரிசிலர்க்குக் கொடுத்தாய்" எனக் கூறுகின்றார். இதனால் இவன் கடல் கடந்தும் பல நாடுகளை வென்றான் என்பது புலப்படும்.

இன்னும் இப் புலவர் "நினது கொற்றக்குடை முனிவரால் பூசிக்கப்படும் முக்கட் செல்வரது அதாவது சிவபெருமானது கோயிலை வலம் வருவதற்குத் தாழ்க" என வாழ்த்துகின்றார். இதனால் இவ்வரசன் காலமாகிய இடைச் சங்க காலத்தில் தமிழ் நாட்டில் சிவனெறி பரவியிருந்தது என அறியலாம். இப்புலவரது சிவனெறிப் பற்றும் இதனால் விளங்கும்.

மற்றும் இவர், "நின்முடி நான்கு மறைகட்கும் உரிய அந்தணர் நின்னை நீடுவாழ்க என வாழ்த்தற்கு எடுத்த கையின் முன்னே வணங்குக" எனக் கூறுதலால் இவ்வரசன் காலத்தில் மறைவழிக் கொள்கையும் நிலவியிருந்தது என்பது பெறப் படும்.

இவ்வரசனை நெட்டிமையார் பாடியனவாக மூன்று பாடல்கள் புறநானூற்றில் காணப்படுகின்றன. அவற்றுள் முதற்பாட்டில் அக்காலத்திய போர் முறையைப் பற்றிய செய்தியொன்று கூறப்பட்டுள்ளது. அதாவது ஓரரசன் மற்றோரரசனது நாட்டின்மீது படையெடுக்கப் புகும் காலத் தில், அப்படையெடுப்பைத் தொடங்குமுன், அந்நாட்டு ஊர் களிலுள்ள மக்கட்குத் தன் படையெடுப்பைக் குறித்துப் பறை யறைவித்துத் தெரிவிப்பான். அவ்வாறு பறையறிவிக்கையில், போரிட இயலாதவர் எல்லாரும் தத்தமக்குரிய காவல் இடங்களைத்தேடி யடைந்து தங்களைக் காத்துக்கொள்க என்று

கூறப்படும். ஏழை யெளியவர்களை யெல்லாம் அணுக்குண்டு கொண்டு அழிக்கும் இக்காலத்திய போர் முறைக்கும், மேற் குறித்த நமது தமிழ்நாட்டுப் பண்டைப் போர் முறைக்கும் உள்ள வேறுபாடுகளை உய்த்துணர்ந்து கொள்க. அப்பாட லடிகளின் பொருளாவது, "பசுக்களும், பசுப்போன்ற இயல் பினையுடைய பார்ப்பனரும், பெண்களும், நோயாளிகளும், பிதிர்க்கடன் செய்வதற்குறிய புதல்வரைப் பெறுதவர்களும், நாங்கள் இந்நாட்டில் படையெடுக்கப் போவதால் அவரவர்க் குரிய பாதுகாப்பிடங்களைத் தேடிக் கொள்க! இல்லாவிடில் எமது அம்பால் ஊறு நேரும்!" என்பதாகும். இதனால் போரில் எதிர்த்தவரை யன்றி ஏனையோர்க்குப் பண்டைத் தமிழர் யாதொரு துன்பமும் செய்யார் என அறியலாம். மேலும் அந்த மிகப்பழமையான காலத்திலேயே தமிழ்நாட்டில் "பிதிர்க்கடன், நீர்க்கடன் முதலியன செய்யும் முறை இருந்தது" என்பது புலப்படும்.

இன்னும் இவரது இப்பாட்டில் "... தங்கோச் செந்நீர்ப் பசும்பொன் வயிரியர்க் கீத்த" என்னும் அடிகளுக்கு உரை யாசிரியர் "தமது அரசாட்சியினது செவ்விய நீர்மையால் சம்பாதித்த பசும்பொன்" என்பாரும் உளர் என்று கூறு வதால், அக்காலத்தரசர் கொடுங்கோல் புரிந்து வரி வாங்குவ தில்லை என்று உணரலாம்.

இப்புலவர் தமது இரண்டாவது பாட்டில் "குடுமி, நீ பிறர் மண்ணை அவரிடமிருந்து பறித்து நின்னுட்டுப் பாணர் பொற்றாமரை சூடவும், நின்னுட்டுப் புலவர் யானைகளுடன் தேர்களை ஏறுதற்கேற்ப அமைக்கவும் செய்வாய். இது நினக்கு அறமோ ?" என்கின்றூர். இதனால் இவ்வரசன் பகை வரை வெல்பவன் என்றும், பரிசிலர்க்கு நிறைய வழங்குபவன் என்றும் செய்திகள் புலப்படுவதோடு, போர்க்குச் செல்லுத

லும், பகைவரையும் பகைவர் ஊர்களையும் அழித்தல் நல்ல தன்று என்றுமொரு பொருளும் புலப்படுதல் காண்க.

இப்புலவர் இவ்வரசனைப் பாடிய மூன்றும் பாட்டில் "தேரோடுதலால் குழியுண்டான தெருவில், வெள்ளிய வாயை யுடைய கழுதை ஏர் பூட்டி உழுது பகைவரது அகன்ற அரண்களைப் பாழ் படுத்தினாய்; புள்ளினங்கள் ஒலிக்கின்ற அவர்களது விளை நிலங்களின்கண்ணே, மெல்லிய தலையாட்ட மணிந்த குதிரைகளது குளம்புகள் தாவுமாறு தேரைச் செலுத்தினாய்; அசையும் தன்மையோடு பெரிய கழுத்தினையும், பரந்த அடியினையும் அஞ்சுந் தன்மையையும், கொம்புகளையும் உடைய யானைகளை அப்பகைவரது காவலையுடைய குளங்களில் படியச்செய்தாய்; அப்படிப்பட்ட சினத்தையுடையாய் நீ" என்கின்றார். இதனால் பகைவர்மீது ஏற்றெழுந்து செல்ல வேண்டுமென்னும் அரசரியல்பைப் பெற்றவன் இவ்வரசன் என்பது பெறப்படும். மற்றுப் போரால் விளையும் இன்னல்கள் இத்துணை என அவ்வரசன் மனதில் இரக்கந் தோன்றுமாறு கூறினர் என்று கொள்ளுதற்கும் இடம் உள்ளது.

இன்னும் இப்புலவர் இப்பாட்டில் இவ்வரசனை நோக்கி "நினது, தூசிப்படையின் வலியைக் கெடுத்தற்காக ஆவலோடு வந்து, அது இயலாததால் வசையுண்டாக வாழ்ந்தவர் பலரோ? அல்லது குற்றமற்ற அறநூலிலும் நான்கு மறைகளிலும் கூறப்பட்ட சிறந்த வேள்விகளை முடித் தற்காக நடப்பட்ட தூண்களையுடைய வேள்விச் சாலைகள் பலவோ? எவை பல?" என வினவுகின்றார். இதிலிருந்து இவன் பகைவரோடு போரிடுதலை எவ்வளவு தலைமையாகக் கொண்டானோ, அவ்வளவு தலைமையாகவே வேள்விகள் செய் வதையும் மேற்கொண்டான் என்பது விளங்கும். மற்றும் இவன் இசை, கூத்தநூல் இவற்றில் வல்லவன் என்பதும் இப்புலவர் பாடலால் விளங்குகின்றது.

இனி, நெடும்பல்லியத்தனார் என்னும் புலவர் இவ்வரசனைப் பாடிய பாடலைப் பார்ப்போம். இவர் தமது பாணர் கூட்டத்தைச் சேர்ந்த விறலியை நோக்கிக் கூறுவது போல இவ் வரசனது பெருமையைப் புலப்படுத்துகின்றார்.

இவர், ''சில் வளைகளையுடைய ஏ விறலி! நல்ல யாழையும், சிறுபறையையும், ஒருதலை மாக்கிணையுடனே கட்டிக்கொண்டு மற்றோர் தேயத்தின்கண் போரிட்டவாறு பாசறையில் இருக்கும் முதுகுடுமிப் பெருவழுதியைக் கண்டு பரிசில் பெற்றுவரச் செல்வோம்'' என விறலியை நோக்கிக் கூறுகின்றார். இதினின்று இவ்வரசன் அரசரியல்பு வழுவாதவாறு எப்பொழுதும் போர் செய்தலையே தொழிலாகக் கொண்டிருப்பவன் என்பதும், பாசறைக்கண் இருக்கும் போது இசை என்றால் கேட்டு மகிழ எண்ணங்கொண்டவன் என்பதும், பல வேள்விகளைச் செய்தலால் எப்போதும் வேள்விக்கு அறிகுறியாகிய குடுமியோடு கூடியிருப்பவன் என்பதும் புலனாகும்.

வேள்விகளைச் செய்தலும், போர்மேற் செல்லுதலும் எங்ஙனம் ஒரே காலத்தில் நிகழ்தல் கூடும் என்னும் ஐயம் இங்கு நிகழலாம். அரசர்க்குரிய வேள்விகளில் சிறப்பானவை அசுவமேதம், இராசசூயம் என்பவை. இவை செய்தற்கு முன்னால் அரசர் எல்லாரையும் வென்று தங்கீழ் அடங்கியிருக்குமாறு செய்தல் வேண்டும் என்னும் முறை உண்டு. அதனால் இவ்வேள்விகளை இவ்வரசன் செய்ய மேற்கொண்டான் என்றும், அதனால் போர்கள் நேர்ந்தன வென்றும், அப்போர்களில் வென்ற இவன், எல்லா அரசரினும் மேம்பட்டு விளங்கினான் என்றும் கொள்ளுதல் இங்குப் பொருந்தும்.

நிற்க, இவன் வேள்விகள் பலவற்றைச் செய்து புகழ் பெற்ற செய்தி, பிற்காலச் செப்பேடுகளிலும் புகழப்பட்டுள்ளது. எங்ஙனமெனில், சின்னமனூர்ச் செப்பேடுகளில் பண்டைப்

பாண்டியனொருவன் ஆயிரம் வேள்விகளைச் செய்து புகழ் பெற்றான் என்று கூறப்பட்டுள்ளது. அச்செய்தி இம் முதுகுடுமிப் பெருவழுதியையே குறிக்கும் என்பதைக் கூறவும் வேண்டுமோ?" மற்றும் வேள்விக்குடிச் செப்பேடுகள் இம் மன்னனைக் குறித்துக் "கொல்யானை பல வோட்டிக் கூடா மன்னர் குழாம் தவிர்த்த...பல்யாக சாலை முதுகுடுமிப் பெரு வழுதியெனும் பாண்டியாதி ராசன்" என்று குறிக்கின்றன.

பண்டைத் தமிழ் மன்னர்களில் பல்லோர் மறைவழி மதத்தைப் பின்பற்றியவர்களாய் வேள்விகள் பல செய்துள்ள னர். சோழன் இராச சூயம் வேட்ட பெருநற்கிள்ளி என்னும் பெயரால் இதனை அறியலாம். ஆயினும் இவ்வரசனைப்போல வேள்விகளை மிகுதியாகச் செய்து பெயர் பெற்ற அரசன் எவனுமில்லை.

3. பாண்டியன் மதிவாணன்

இவன் கடைச் சங்க காலத்துப் பாண்டியருள் ஒருவன் எனக் கொள்ள இடமிருக்கின்றது. கடைச் சங்கம் நிறுவிய பாண்டியருள் கவியரங்றேியவருள் இவன் ஒருவன் என்று சிலப்பதிகார உரையாசிரியர் ஆகிய அடியார்க்கு நல்லாரது உரைப் பாயிரத்தால் தெரிய வருகின்றது. இவ்வரசன் நாடகத் தமிழ்நூல் ஒன்று இயற்றியுள்ளான். அது மதிவாணர் நாடகத் தமிழ்நூல் எனப்படும். இந்நூல் நூற்பாவாலும் வெண்பா வாலும் இயன்றது.

அடியார்க்கு நல்லார் தமது சிலப்பதிகார உரையில் இசையைப் பற்றிய செய்திகட்கு மேற்கோளாகக் காட்டும் ஐவகை இசை நாடக நூல்களுள் மேற்குறித்த நூலும் ஒன்றாகும். மற்றவை இசை நுணுக்கம், இந்திர காளியம், பஞ்சமரபு, பரத சேனபதீயம் என்பவை. ஆகவே அடியார்க்கு

நல்லார் காலம் வரையில் இம்மதிவாணர் நாடகத் தமிழ்நூல் வழக்கிலிருந்தது என்பது அறியப்படும்.

இந்நூல் முதனூலிலுள்ள வசைக் கூத்திற்கு மறுதலை யாகிய இசைக் கூத்தின் அதாவது புகழ்க் கூத்தின் இலக் கணத்தை உணர்த்துவது என்று அடியார்க்கு நல்லார் கூறி யுள்ளார். இவற்றைத் தவிர இவனது பிறவரலாறு ஒன்றும் தெரியவில்லை.

4. பொற்கைப் பாண்டியன்

இவ்வரசன் எக்காலத்தவன் எனத் திட்டமாக அறுதி யிட்டுக் கூறுதல் இயலாது. இவனது வரலாறு புராண வரலாறு போன்றது. அது பின் வருமாறு:

கணவனிறந்த வருத்தம் தாங்காது மதுரைமா நகரை எரிப்பேன் என்று புறப்பட்ட கண்ணகியின் முன் தோன்றிய மதுரைமா நகரத் தெய்வமாகிய மதுராபதி தெய்வம், பாண்டி யர்களது செங்கோற் பெருமையை அவளுக்கெடுத்துச் சொல்லி அவளது சினத்தை அடக்க முயன்றது. அப்போது அது இப் பொற்கைப் பாண்டியனது வரலாற்றை அவளிடம் கூறிற்று. அவ்வரலாறு பின்வருமாறு:

ஒருகால் மதுரையில் அந்தணர் தெருவில் வாழ்ந்து கொண்டிருந்த கீரந்தை என்னுமோர் அந்தணன் நாவலந் தீவின் எங்கணுஞ் சென்று நன்னீராடிவர விரும்பினன். அவன் ஒரு நாளிரவில் தான் மறுநாள் பயணம் செய்யப்போகும் செய்தியைத் தன் மனைவியிடம் கூறிக்கொண்டிருந்தான். அப்போது நகர் காவலுக்காக வந்த பாண்டியவரசன், இரவில் அவ்வந்தணன் வீட்டில் பேச்சுக் குரல் கேட்கக் கண்டான். அதன் காரணமென்ன வென்பதை அறிய விரும்பி அவ்வீட் டருகிற் சென்று ஒட்டுக்கேட்டான். அப்போது கீரந்தையின்

மனைவி அவ்வந்தணன் ஊரைவிட்டுச் சென்றுவிட்டால் தன்னைக் காப்பவர் யார்? என்று அவனை நோக்கிக் கேட்டாள். அதற்கு அவன் "மன்னனது செங்கோல் நின்னைக் காக்கும்" என்றான்.

அதனைக் கேட்ட அரசன் அப்பார்ப்பனியைக் காப்பது தனது கடமையாயிற்றென்பதை உணர்ந்தான். அவளை காப்பதெப்படியென ஆராய்ந்து நாடோறும் அவளுக்குப் படியரிசி கொடுத்தல் வேண்டுமெனத் தீர்மானித்தான். அவளுக்கு மட்டும் கொடுத்தால் ஊரார் அவளது நடத்தை யிலும், தன் நடத்தையிலும் குற்றங்காண்பர் என்றெண்ணி, மறுநாள் முதல் அத்தெருவிலுள்ள அந்தணர்க்கெல்லாம் படியரிசி கொடுத்து வருவானாயினான்.

நாட்கள் பல சென்றன. ஒருநாளிரவு நன்னீராட்டு முடிந்த கீரந்தை தன்னில்லம் எய்தியிருந்தனன். அன்று தான் பல ஊர்ப் பயணம் போய் வந்த செய்திகளையெல்லாம் தன் மனைவிக்கு விரித்துரைத்துக் கொண்டிருந்தான். ஆதலின் நள்ளிரவில் நகர் காவல் செய்ய வந்த பாண்டியன் அவ் வீட்டில் பேச்சுக் குரல் கேட்பதைக் கண்டான். கீரந்தை திரும்பி வந்திருப்பான் என்பதை நினையாது அரசன் யாரோ கள்வர் உட்புகுந்தனர் போலும் என்றெண்ணி அவ்வீட்டுக் கதவைத் தட்டினான். அப்போது கீரந்தைக்குத் தன் மனைவி மீது ஐயப்பாடு உண் டாயிற்று. அதையறிந்த மனைவி, "முன்னொரு நாள் அரசன் செங்கோல் என்னைக் காக்குமென்று கூறி என்னை இம் மன்றத்திருத்திச் சென்றீரன்றோ? அதுவே இன்றும் என்னைக் காக்கும்" என்றனள். அவ்வளவில் உணர்வுபெற்ற அந்தணன் வாளாவிருந்துவிட்டான்.

இச் செய்தியை மறைந்து நின்று கேட்டவரசன் 'அந்தணன் மனைவிக்கு இழுக்கு உண்டாகி விட்டதே' என்று

வருந்தினன். என்ன செய்வதென்று ஆராய்ந்து முடிவில் அந்தத் தெருவிலுள்ள எல்லா வீட்டுக் கதவுகளையும் தட்டிக் கொண்டு, எவர் கண்ணுக்கும் படாமல் சென்றுவிட்டான்.

மறுநாட் காலை அந்தணர் யாவரும் கூடி முன்னுள் இரவு தமது இல்லங்களின் கதவை யாரோ தட்டிவிட்டுச் சென்றதைப் பற்றிப்பேசி, யாரோ ஒரு கள்வனே அங்ஙனம் செய்திருக்க வேண்டுமென முடிவு கட்டினர். பிறகு அவர்கள் யாவரும் அரசன் அவைக்குச் சென்று முதனுள் இரவு தங்கள் வீட்டுக் கதவுகளை யாரோ கள்வன் தட்டிவிட்டுச் சென்றுன் என்று முறையிட்டனர். அது கேட்ட அரசன் ஏதோ நினைப்பவன் போல நடித்துப் பின், அக்கள்வனைக் கண்டுபிடித்தால் அவனுக்குக் கொடுக்கத்தக்க தண்டனை யாதென வினவினன். அப்போது அவையிலிருந்த பெரியோர்கள் யாவருங்கூடி ஆராய்ந்து, தட்டிய அவனது கையை வெட்டி விடுவதே தக்கது என்றனர்.

உடனே அரசன் தன் உடைவாளை உருவித் தன் கையைத் தானே வெட்டிக்கொண்டான். அது கண்ட அவையினர் யாவரும் ஒரு நொடிப்பொழுது திகைத்துப் பின் ஆ! ஆ! என்று வாய்விட்டுக் கூவி வருந்தினர். பின்னர் அவையோர்க்கெல்லாம் முன்னுள் நடந்த செய்தி யாதெனத் தெரிய வந்தது. அவர்கள் தங்கள் அரசனது நேர்மையான நடத்தையைக் கண்டு வியந்தனர். அத்தகைய நல்லரசன் கை யிழந்து துன்புற நேர்ந்ததே என மிகவும் வருந்தினர். கையிழந்த அரசன் பிறகு பொற்கை ஒன்று செய்தமைத்துக் கொண்டான். அதுமுதல் அவனுக்குப் பொற்கைப் பாண்டியன் என்பது பெயராயிற்று.

5. பாண்டியன் அறிவுடை நம்பி

இவன் கடைச்சங்க காலத்தில் இருந்த ஒரு பாண்டிய அரசன். "பாண்டியன் அறிவுடை நம்பியுழைச் சென்ற பிசிராந்தையார் பாடியது" என்னும் குறிப்புடன் புறநானூற்றில் ஒரு பாடல் காணப்படுகின்றது. அதனால் பிசிராந்தையார் காலத்திலும், அவரது நட்பினனாகிய கோப்பெருஞ்சோழன் காலத்திலும் பாண்டிய நாட்டை யாண்ட அரசன் இவன் என அறியலாம்.

அறிவுடை நம்பியுழைச் சென்ற பிசிராந்தையார் செய்தி மிக்க வியப்பிற் கிடமானது. பாண்டிய நாட்டுப் பிசிர் என்னும் ஊரினராகிய இவர் உறையூரின்கண் ஆண்டு கொண்டிருந்த சோழவரசனது சிறந்த பண்புகளைப்பற்றிக் கேள்வியுற்று அவனிடம் போய் அவனோடு பழகாமலே அவனைத் தமது சிறந்த நட்பினனாகக் கொண்டார். அங்ஙனமே அச்சோழ வரசனும் பிசிராந்தையாரைப்பற்றிக் கேள்வியுற்று அவரைத் தனது உயிர் நட்பினராகக் கொண்டான்.

"புணர்ச்சி பழகுதல் வேண்டா வுணர்ச்சிதான்
நட்பாங் கிழமை தரும்"

என்னும் பொய்யாமொழிக் கிணங்க இருவரது நட்பும் சிறந்ததாயிற்று.

இங்ஙனமாகக் கோப்பெருஞ் சோழனோடு அறிவற்ற அவனது மக்கள் பகைத்து, அவனோடு போரிடவும் துணிந்தனர். சான்றோர் பலரது அறிவுரைக் கிணங்க கோப்பெருஞ் சோழன் நாட்டைப் புதல்வரிடமே ஒப்படைத்து விட்டனன். பின்னர் அறிவற்ற மக்கள் செய்த செய்கைக்குப் பொருது வடக்கிருந்து உயிர்விடத் தீர்மானித்தான். வடக்கிருத்தலாவது, தான் உள்ளவிடத்திற்கு வடக்கே தூயதோரிடத்தில் வடக்கு

நோக்கி உண்ணுநோன்பிருந்து உயிர்விடுதலாம். அங்ஙனம் இருந்தபோது, அவ்வரசன் தன் பக்கத்திலிருந்தாரைப் பார்த்து, "நான் நன்னிலையில் இருந்த காலத்தில் என் நண்பனாகிய பிசிராந்தை என்னும் புலவன் என்னிடம் வந்திலன்; ஆயினும் நான் துன்ப நிலையிலிருக்கும் இக்காலத்தில் அவன் வாராதிரான்" என்றான். எங்ஙனமோ பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழனுக்குற்ற துன்ப நிலையை அறிந்தார். உடனே விரைந்து ஓடோடியும் அவனிருப்பிடம் சென்றார்.

ஆனால் புலவர் வருவதற்குள் சோழன் உயிர் நீத்தான். புலவர் சென்றபோது அவ்வரசன் கூறியவாறு, அவனுக்குப் பக்கத்தில் புலவருக்கு இடம் வகுக்கப்பட்டிருந்தது. அவரும் வடக்கிருந்து உயிர் துறந்தார். அக்காலை அங்கிருந்தார் பலரும் பிசிராந்தையார் மிக்க வயது சென்றவராயிருந்தும் நரை, திரை, பிணி, மூப்பு இவை இல்லாதிருத்தலைக் கண்டு மிகவும் வியப்பெய்தி அவரிடம் அதன் காரணத்தை வினவலாயினர்.

புலவர் அவர்களைப் பார்த்து "யாண்டு பலவாகியும் நரையில்லாதிருத்தல் எங்ஙனம் என்கின்றீரன்றே? என்னுடைய மனைவியும் புதல்வரும் அறிவு நிரம்பினர்; எனது ஏவலாளர் என் ஏவலின்படி தவறாது நடப்பவர்; அரசனும் முறையல்லாதவற்றைச் செய்யானாய் நாடு காத்து வருகின்றான்; மற்றும் எல்லா நற் பண்புகளும் அமைந்த சான்றோர் என் ஊரின்கண் உளர். எனவே எனக்கு எது பற்றியும் கவலையில்லை. அதனால்தான் யாண்டுபல வாகியும் நரையிலாதாயிற்று" என்றார்.

மேற்கண்ட கூற்றில் "அரசன் முறையல்லாதவற்றைச் செய்யானாய் உலகங் காக்கின்றான்" என்றது நமது பாண்டியன் அறிவுடை நம்பியின் செங்கோலைக் குறிக்கும்.

இதினின்று இப்பாண்டிய வரசன்மீது அப்புலவர் எத்தகைய மதிப்பு வைத்திருந்தார் என்பதும், இவ்வரசன் எத்தகைய செங்கோலினன் என்பதும் புலப்படும்.

பிசிராந்தையார் யாதொரு கவலையும் இன்றி இருந்தார் என்பது மேற்குறித்த செய்தியால் விளங்கும். அவர் யாரிடமும் சென்று பாடிப் பரிசில் பெற்றதில்லை. நமது பாண்டியன் அறிவுடை நம்பியிடம் சென்றவர் செவியறிவுறூஉவாகப் பாடினரேயன்றி அவனைப் பாடிப் பரிசில் பெற்றிலர். செவி யறிவுறூஉவாவது நல்லவற்றைக் கூறி அறிவுறுத்துதலாகும். அவ்வகையில் இப்பிசிராந்தையார் பாடிய பாட்டுச் சிறந்த அரசியலறிவை தன்னுட் கொண்டுள்ளது. அப்பாடலின் பொருள் பின்வருமாறு:

ஒரு மா ஆகிய அளவிற்கும் குறைந்த அளவு நிலத்தில் விளைந்த குறைந்த அளவு நெல் ஆயினும், அதனைக்கொணர்ந்து நன்முறையில் அமைத்துக் கவளமாக்கி யானைக்குக் கொடுப் பின், அந்நெல் அந்த யானைக்குப் பல நாளைக்கு உணவாகும். அங்ஙனமன்றிப் பல செய்களில் விளைந்த மிகுதியான நெல்லா யினும், யானை தானே சென்று உண்ணுமாறு அச் செய்களுக் குள் விடப்பட்டால் அந்த யானை உண்ணும் நெல்லினும் அது தன் காலால் மிதித்துப் பாழ்படுத்திய நெல் மிகவும் கூடுத லாகும். அதனால் அதற்கும் நீண்ட நாளைக்கு உணவு கிடைக் காது. செய்களுக்கும் கேடுண்டாகும்.

அரசன் குடிகளிடத்து வரிவாங்கும் செய்தியும் இதனைப் போன்றதே. குடிகளிடத்து அன்புகொண்டு, அவர்கள் கொடுக்கத்தக்க அளவும் காலமும் அறிந்து, அவர்களிடம் வரியை வாங்கினால் எளிதாக நிறையப் பொருள் பெற்று அரசன் பல நல்ல செயல்களைச் செய்யக்கூடும். அங்ஙன மன்றிக் குடிகளின் குறைவு நிறைவுகளை அறியாது, காலமும்

அறியாது அவர்களை வருத்தி அவர்களது சொத்துக்களை அரசன் பறிமுதல் செய்து பொருள் பெறுவானாயின், அரசனும் நன்மையடையான். அவனது நாடும் கெடும்.

மேற்கண்ட செய்தியிலிருந்து அரசியல் நூல் அறிவு அக்காலத்தில் எவ்வளவு நுண்ணியதாயிருந்தது என்பது புலனாகும். நிற்க, இவ்வரசன் சிறந்த அறிவுடையனாயிருந்தது பற்றியே இவனுக்கு இப்பெயர் அமைந்திருக்க வேண்டும் என அறியலாம். அதனாலேயே இவன் நல்லிசைப் புலவர் வரிசையிற் சேர்க்கப்பெற்றான். இவனது செய்யுட்களும் சங்க நூல்களில் சேர்க்கப் பெற்றுள்ளன. இவன் செய்தனவாக நற்றிணையில் ஒன்றும், அகநானூற்றில் ஒன்றும், குறுந்தொகையில் ஒன்றும், புறநானூற்றில் ஒன்றுமாக நான்கு செய்யுட்கள் காணப்படுகின்றன. அவற்றுள் புறநானூற்றுச் செய்யுள் புதல்வரைப் பெறுதலின் சிறப்பை நன்கு விளக்குகின்றது. அச்செய்யுளின் பொருள் பின்வருமாறு:

"குழந்தைகள் குறுகக்குறுக நடந்து சென்று, தமது சிறிய கைகளை நீட்டி, உணவுக் கலங்களில் உள்ள உணவுப் பொருள்களைக் கீழே எடுத்து எறிவார்கள்; கீழேயுள்ளவற்றை உணவுக் கலங்களில் எடுத்துப் போடுவர். அவற்றைக் கையிலேயே பறித்தெடுத்தும், வாயால் கௌவியும், கைகளால் துழாவியும், நெய்யை உடைய அடிசிலை உடலின்மீது தெறிக்குமாறு வீசியும் இன்பத்தால் மயக்குவர். இப்படிப்பட்ட புதல்வரைப் பெறாதவர்கள் பெறுதற்கரிய பெருஞ்செல்வத்தைப் பெற்றுப் பலரோடு கூடியுண்ணும் பேற்றைப் பெற்றாராயினும், அவர்களது வாழ்நாட்கள் பயனற்றனவாகும்" என்பது.

இங்குப் பாண்டியன் சிறு குழந்தைகளின் செயல்களை உள்ளது உள்ளபடி எடுத்து உரைத்திருக்கும் நயம் அறிந்து இன்புறத் தக்கதாம்.

6. ஒல்லையூர் தந்த பூதப்பாண்டியன்

இவன் கடைச்சங்க காலத்தவன். வீரத்தாலும் கல்வியாலும் மேம்பட்டவன். நல்லிசைப் புலவர் வரிசையில் சேர்க்கப் பெற்ற பாண்டியருள் இவனும் ஒருவனுவான். புறநானூறு, அகநானூறு இவற்றில் இவனது பாடல்கள் சேர்க்கப் பெற்றுள்ளன. ஒல்லையூர் தந்த என்னும் அடைமொழி இவனது வீரத்தை விளக்குவதாகும். இன்னும் இவ்வடை மொழியால் ஒல்லையூர் என்னுமோரூர் அக்காலத்து நிலவரண், நீரரண், காட்டரண், மலையரண் என்னும் நால்வகையரண் களோடு கூடிப் பகைவரால் எளிதில் வெல்ல இயலாதவாறு இருந்தது என்றும், அதனை இவ்வரசன் தன் வலிமையாலும் முயற்சியாலும் வென்று கொண்டான் என்றும் அறியலாம்.

இவ்வரசனது மனைவியராகிய பெருங்கோப் பெண்டு என்பவர் கற்பால் மேம்பட்டவர்; கல்வியறிவிற் சிறந்து கவிபாடும் வன்மையும் வாய்ந்தவர்: நல்லிசைப் புலவர் வரிசையிற் சேர்க்கப்பட்டவர். இவர் பாடிய பாடலொன்று புறநானூற்றில் உள்ளது.

பூதப்பாண்டியன் இறக்க இவ்வம்மையார் உடன்கட்டை யேறத் துணிந்தனர். அது கண்ட மதுரைப் பேராலவாயார் என்னும் புலவரும், மற்றும் சான்றேர் பலரும் இவரை உடன் கட்டை யேருதவாறு தடுத்தனர். இவர் அவர்களது சொல்லைக் கேளாமல் உடன்கட்டையேறினர். இவரது பாடல் அந்த வேளையில் அவர்களது பேச்சை மறுத்துக் கூறுவது போல் அமைந்துள்ளது.

நிற்க, பூதப்பாண்டியனை வென்று அவனது நாட்டைக் கைக்கொள்ள வேண்டி வேந்தர் பலர் சூழ்ச்சி செய்தனர் போலும். அதனைக் கண்டு சினங்கொண்ட இவன் வஞ்சினங்

கூறுவது போல இவனால் பாடப்பட்ட பாடல் அமைந்துள்ளது. அப்பாடலினின்று பல செய்திகள் அறியக்கிடக்கின்றன. அப் பாடலின் பொருளாவது :

"அரியேறு போலச் சினந்து என்னை வெல்லுதற்கு வந்த மிக்க படையையுடைய எனது பகைவேந்தரைத் தாக்கி அவர்கள் அலறிக் கொண்டு புறங்கொடுத்தோடுமாறு செய்யேனாயின், நான் எனது மனைவியாகிய இவளினின்றும் பிரிவேனாக! இன்றும் அறநிலை திரியாத அவைக்களத்து அறவழி நடவாத ஒருவனை வைத்து அதனால் முறை திறம்பிய கொடுங்கோலனாக நான் ஆவேனாக; மேலும் வையையாற் சூழப்பெற்ற பல ஊர்களையுடையவனும், மையல் என்னும் ஊர்க்குத் தலைவனுமாகிய மாவனும், எயில் என்னும் ஊரையுடைய ஆந்தையும், புகழமைந்த அந்துவஞ் சாத்தனும், ஆதனழிசியும், மிக்க சினத்தையுடைய இயக்கனும், மற்றும் பலருமாகிய எனது சிறந்த நட்பினரோடும் கூடி மகிழும் மகிழ்ச்சியையும் யான் அடையாமற் போவேனாக; மற்ற அரச குலத்திற் சிறந்த பாண்டிய நாடு காக்கும் அரசுரிமையையுடைய குடிப்பிறப்பினின்றும் நீங்கி வேறு குடியிற் பிறப்பேனாக!" என்பது. இதில் முதலாவதாக "இந்த எனது மனைவியினின்றும் நான் பிரிவேனாக" என்று சொல்கின்றான். இதினின்று இவன் கற்பிற் சிறந்த தன் மனைவியாரின் பெருமையறிந்து அவரைப் பிரியாது இனிது வாழ்ந்தான் என்றும், அவரைப் பிரிந்து வாழ்வதைப் பெருத்த தீமையாகக் கருதினன் என்றும் அறியலாம்.

அடுத்து, இவன் "அறங்கூறவையத்து அறத்திற்கு மாறுபட்டு நடக்கும் தன்மையை யுடையவனைப் பணிபுரிவோனாக ஏற்படுத்தி அதனால் முறைமை திறம்பிய கொடுங்கோலனாக நான் ஆவேனாக" என்கின்றான். இதினின்று அறங்கூறவையம் தன் பணியைச் சரிவர ஆற்றி வருமாறு அதில்

கல்வி கேள்வி யொழுக்கங்களாற் சிறந்த பெரியோரை அமர்த்தி இவன் கோல் கோடாது முறைமை செய்து வந்தான் என்றும், கோல் கோடுதலைப் பெரிதும் வெறுத்து அஞ்சினன் என்றும் அறியலாம்.

பின்பு இவன் "மையற்கோமான் மாவனும், மன்னெயில் ஆந்தையும், அந்துவஞ்சாத்தனும், ஆதனழிசியும், வெகு சின இயக்கனும் உள்ளிட்ட என் நண்பரோடு நான் அளவளாவி மகிழும் பேற்றை இழப்பேனாக" என்கின்றான். இதனால் மாவன், ஆந்தை, அந்துவஞ் சாத்தன், ஆதனழிசி, இயக்கன் ஆகியோர் இவனது உயிர் நட்பினர் என்பதும், அவர்களோடு அளவளாவுவதை இவன் பெறுதற்கரிய பேறாகக் கருதினான் என்பதும் புலப்படும்.

இறுதியாக இவன் தென்புலங் காக்கும் பாண்டியர் குடியிற் பிறவாது வேறு குடியிற் பிறப்பேனாக என்கின்றான். இதினின்று உலக அரசர் குடிகளிற் பாண்டியர்குடி எவ்வளவு உயர்வாக இருந்தது என்றும், நகை, ஈகை, இன்சொல், இகழாமையாகிய நான்கினையும் வகையாகப் பெற்றிருந்தது என்றும், அக்குடியை இப்பாண்டியன் உயர்வாக மதித்தான் என்றும், அக்குடியிற் பிறவாது ஒழிதலை எவ்வளவு இழிவாக மதித்தான் என்றும் அறியலாம். தம் குடிப்பிறப்பின் மேன்மையை நன்கு மதித்து நடப்பவர் ஒருகாலும் முறை தவறி நடவாராதலின், இச் சொற்களினின்று இவனது நேர்மை உணரலாகும்.

இத்தகைய சிறந்த அரசன் காலமில்லாக் காலத்திலே எவ்வாறோ இறந்துபட்டான், அக்காலை இவனது மனைவியார் உடன்கட்டை யேறத் துணிந்து தம்மைத் தடுத்த சான்றோர் சொல்லையும் கேளாது கருதியது முடித்தனர் என்று முன்னர்க் கூறினோம். அக்காலை அவ்வம்மையார் பாடலொன்று பாடின

றென்றும், அப்பாடல் அவர்களது சொல்லை மறுத்துக் கூறுவது போல அமைந்தது என்றும் முன்கூறப்பட்டது. அப்பாடலின் பொருள் வருமாறு :

"பல் சான்றீரே, பல் சான்றீரே, நின் கணவனோடு நீயும் இறக்க என்று கூருது, இறவாது ஒழிக என்று கூறும் பொல்லாத அறிவுடைய பல் சான்றீரே, கேண்மின் :

அணில் வரிபோலும் வரிகளையுடைய வெள்ளரிக்காயை அரிந்து வெளிப்படுத்திய அதனுடைய விதையைப் போன்றதும், நெய் கலவாது பிழிந்து கொண்டதுமாகிய சோற்றையும், எள்ளரைத்த விழுதோடு புளி கூட்டி அடப்பட்ட வேளைக் கீரைக் கறியையும், உணவாகக்கொண்டு, பருக்கைக் கற்கள் பரப்பிய படுக்கையின்கண் பாயின்றிப் படுக்கும் கைம்மை நோன்பை நோற்று உழலும் பெண்டிருள் சேர்ந்தவள் அல்லள் யான் ; சுடுகாட்டில் உண்டாக்கப்பட்ட கரிய விறகால் அடுக்கப்பட்ட பிணப்படுக்கை உங்களுக்குக் கொடியதாயிருக்கலாம்; கணவனை இழந்த எனக்கு அத்தீயும், மலர்ந்த தாமரை மலர்களுடைய நீர் நிறைந்த பொய்கையும் ஒரு தன்மையனவேயாம்.'' என்பது அது.

பெருங்கோப் பெண்டின் இக் கூற்றிலிருந்து நாம் அவ்வம்மையாரின் சிறந்த பண்புகளைக் காண்கின்ருேம். அவ்வம்மையார் சான்ருேர் தடுத்தும் கேளாது தீப்பாய்ந்தனர் என்பது ஒருபுறம் இருக்கத், தம்மைத் தடுத்த சான்ருேர்க்கே அவர் அறிவுரை பகர்கின்ருர். 'என்னைக் கணவனுடன் இறக்க என்று கூறவேண்டிய நீவிரே தவிர்க என்கின்றீர்கள். அதனல் நீவிர் பொல்லாச் சூழ்ச்சி செய்கின்றீர்கள் என்றே கருதுகின்றேன்' என்று கடிந்து கொள்கின்ருர். மற்றும் அக்காலத்தில் கைம்மை நோன்பு பற்றிய செய்தியும் இதனல் காண்கின்ருேம். அஃதாவது, கைம்மை நோன்பு நோற்பவர்'

நெய் பெய்து கொள்ளாது நீர்ச் சோற்றைப் பிழிந்து வைத்துக் கொண்டு, அதற்கு உதவியாகப் புளி கூட்டிச் சமைக்கப்பட்ட வேளைக்கறியை வைத்துக்கொண்டு உண்பர்; பரற்கற்கள் பரப்பிய படுக்கையில் பாயின்றிப் படுப்பர் என்பதாம். இத் தகைய கைம்மை நோன்பை மேற்கொள்வதையும் பழந்தமிழர் சிறப்பாக மதித்திலர். கணவரோடு தீப்பாய்தலையே அவர்கள் சிறப்பாக மதித்தனர். அத்தகைய கைம்மை நோன்பு நோற்கும் பெண்டிர் கூட்டத்தில் யான் சேர்ந்தவள் அல்லள் என அந்த அம்மையார் கூறுவதால் இதனை அறியலாம். 'ஈமத்தீயில் பாய்ந்திறக்கும் செய்தி நுமக்கு அரிதாகத் தோன்றலாம். கற்புடைய பெண்டாகிய எனக்குக் குளிர் நீரையுடைய தாமரைப் பொய்கையும் தீயும் ஒரு தன்மையனவே' என்றும் கூறிய அம்மையாரது வீரச் சொற்கள் எத்தகைய பாராட்டுக் குரியன என்பதை எண்ணிப் பார்த்தல் வேண்டும்.

தாம் தடுத்தும் கேளாது தீப்பாய்ந்திறந்த பெருங்கோப் பெண்டின் செயலை மதுரைப் பேராலவாயார் என்னும் புலவர் ஒரு பாட்டால் வியந்து பாராட்டுகின்றார். அப்பாடலின் பொருள் பின்வருமாறு:

"அரண்மனையில் தம் கணவனைச் சிறிதுபொழுது காணா தொழியினும் வருந்துகின்ற அரசியார், இப்பொழுது அணங் குடைத் தேவியுடைய முற்றத்து நீர்வடிந்த மயிர் முதுகில் புரளப் புறங்காட்டைப் பார்த்துக் கண்கள் சுழலா நிற்பார்," என்பது அப்புலவர் வியப்புரை.

அரசியாரது கணவனையிழந்த வருத்தத்தைப் புலவர் தம் மனத்துள் உணர்ந்து கூறும் பெற்றியை இதனுட் காண்க. இப்பொழுது தென்னாட்டிலுள்ள பூதப்பாண்டி என்னும் ஊர் பண்டைக்காலத்தில் இப்பாண்டியன் பெயரால் அமைக்கப் பட்டிருக்கலாமென அறிஞர் கருதுகின்றனர்.

7. கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதி

இவர் கடைச்சங்க காலத்து பாண்டியருள் ஒருவர். பரி பாடலில் 15-ஆம் பாட்டைப் பாடிய இளம்பெருவழுதியார் என்பவரும் இவரும் ஒருவரே எனக் கருதுகின்றனர். ஏனெனில் இவ்விருவர் பாடல்களிலும் கருத்தொப்புமை காணப்படுகின்றது. கடலுண் மாய்ந்த என்னும் அடைமொழி, கடற் படையெடுப்பின் காரணத்தாலோ வேறு எக்காரணத்தாலோ, இவர் கடலிற் சென்றுகொண்டிருக்கும் போது அங்குக் கடலில் மூழ்கி இறந்திருக்க வேண்டும் என்பதைப் புலப்படுத்தும். இவர் இளமையிலேயே கல்வியறிவால் மேம்பட்டு விளங்கியதால் இவருக்கு இப்பெயர் வந்திருக்கலாம் என்று அறிஞர் கருதுகின்றனர். இவர் பாடிய பாடல்கள் பரிபாடலிலும், புறநானூற்றிலும் காணப்படுவதால் கவியறங்கேறிய பாண்டியருள் இவரும் ஒருவர் ஆவார் எனத் தெளியலாம்.

இவர் பாடிய பரிபாடலில் சிலம்பாற்றுல் அணி செய்யப் பெற்றுள்ள திருமாலிருஞ்சோலைமலை சிறக்கப்புனைந்துரைக்கப் பெற்றுள்ளது. அங்கு எழுந்தருளியுள்ள கண்ணன், பலதேவன் ஆகியோரது பெருமைகள் நன்கு எடுத்தியம்பப் பெற்றுள்ளன. அங்குள்ள குன்றைக் குறித்து அது திருமாலினையொப்பது என்றும், கண்டார் மயக்கத்தைப் போக்குவது என்றும் கூறியுள்ளார். அதனோடு அங்குக் குடும்பத்துடன் சென்று கண்டு வழிபடுமின் என மக்களுக்கு இவர் அறிவுரை பகர்கின்றார். அதனால் இவர் திருமால் அடியவராயிருக்க வேண்டும் என்று அறியலாம்.

இவர் சிறந்த அறிவாளியாவர். இவர் பாடியதாகப் புறநானூற்றில் ஒரு பாடல் உள்ளது. அப்பாடலால் இவரது அறிவின் நுட்பமும் சிறந்த ஒழுக்கமும் புலப்படும். அப்பாடலின் பொருள் பின் வருமாறு:

"இவ்வுலகத்துச் சிலர் தேவர் தலைவனது துறக்க உலகத்து அமுதம் தங்களுக்குக் கிடைத்தாலும், அது இனியது; நரை, திரை, பிணி, மூப்பு முதலிய துன்பங்களைப் போக்குவது என்னும் காரணத்தால் அதனைத் தாம் மட்டும் தமியராய் உண்ணுது, பலர்க்கும் அதனைக்கொடுத்து உண்ணச் செய்து தாமும் உண்ணும் தன்மை யுடையவர்களாயிருக்கின்றனர். மேலும் சினத்தைத் தவிர்த்தவர்களாயிருக்கின்றனர்; சோம்பலை நீக்கியவர்களாகவும் இருக்கின்றனர். அஞ்சத்தகுவனவற்றிற்கு அஞ்சுந் தன்மையுடையவர்களாகவும் இருக்கின்றனர். இத்தகையவர்கள் புகழ் கிடைப்பதாயின் தம் உயிரையும் கொடுத்து அதனைப் பெற முயல்வர். பழிவரும் என்று இருந்ததாயின் அதனுல் உலக முழுவதுமே கிடைப்பதாயினும் அதனை விரும்பமாட்டார்கள். இப்படிப்பட்ட சிறந்த பண்புகளை யுடையவர்களாகித் தமக்கென வாழாது பிறர்க்கெனப் பாடுபடுவர்கள் உலகில் இருப்பதனுல்தான் உலகம் நிலைத்து நிற்கின்றது" என்பார் இவர்.

மேற் கூறியவற்ருல் தமக்குக் கிடைக்கும் உணவைப் பிறருடன் பகிர்ந்து உண்ணவேண்டும் என்பதும், சினத்தைத் தவிர்க்க வேண்டும் என்பதும், பழி, பாவம் இவற்றிற்கு அஞ்சி நடக்க வேண்டும் என்பதும், சிறந்த செயல்களைச் செய்து புகழுடைய வேண்டும் என்பதும் விளங்கும்.

8. ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன்

கடைச்சங்க காலத்துச் சிறப்பாக ஆட்சி நடத்திய பாண்டியருள் இவன் ஒருவன். இவனது பெயருக்கு முன்னுல் உள்ள ஆரியப்படை கடந்த என்னும் அடைமொழி இவன் வடநாட்டு ஆரியரை வென்ருன் என்பதைப் புலப்படுத்தும், இவ்வடநாட்டு வெற்றியைப்பற்றி இளங்கோவடிகள் தமது சிலப்பதிகாரத்தில், "வட ஆரியருடைய படையை வென்று

தெற்கின்கண்ணுள்ள தமிழ் நாட்டவரெல்லாம் காணுமாறு குற்றமற்ற கற்பினையுடைய மனைவியுடன் அரியணையிலேயே இறந்துபட்ட பாண்டியன் நெடுஞ்செழியன்" எனச் சிறப்பித்துக் கூறியுள்ளார். இவன் அரசு கட்டிலிலேயே இறந்துபட்ட வரலாறு பின்வருமாறு :

காவிரிப்பூம் பட்டினத்தில் மாசாத்துவான் என்னும் பெருங்குடி வணிகனுக்கு மகனாகிய கோவலன், அந்நகரத்து மாநாய்கன் என்னும் வணிகனுக்கு மகளாகிய கண்ணகியை மணந்து வாழ்ந்து வந்தான். அவன் ஆடல் பாடல்களால் சிறந்த மாதவி என்னும் கணிகைமேல் அன்பு கொண்டு தன் மனைவியை விட்டுப் பிரிந்து அவளுடனேயே கூடி வாழ்வானாயினன். நாள் சில செல்ல, அவனுக்கு மாதவிபால் வெறுப்புண்டாயிற்று. உடனே, அவன் அவளை விட்டுப் பிரிந்து கண்ணகியைக் கூட்டிக்கொண்டு புறப்பட்டு வாணிகம் செய்ய விரும்பி மதுரையை அடைந்தான். அங்கு அவன் தன் மனைவியின் காற்சிலம்பு ஒன்றை விற்று அதை வாணிக முதலாகக்கொள்ள எண்ணிச் சிலம்புடன் மதுரைக் கடைத்தெருவை அடைந்தான். அப்போது அவன் எதிரே அரண்மனைப் பொற்கொல்லன் வரக் கோவலன் தன் சிலம்பை அவனுக்குக் காட்டி அதனை விற்றுத்தருமாறு கூறினான்.

அப்பொற்கொல்லன் முன்னரே அரசியின் சிலம்பு ஒன்றைக் களவாடிய கள்வனாவான். அவன் கோவலனது சிலம்பை வாங்கிப் பார்த்துத் தான் அரண்மனையில் திருடிய சிலம்பினை அது ஒத்திருந்தது கண்டு, தன் பழியைக் கோவலன் மீது சுமத்தத் தீர்மானித்தான். பிறகு அவன் கோவலனை நோக்கி "இச்சிலம்பினைப் பற்றிய செய்தியை அரண்மனை சென்று அரசனிடம் கூறி வருகின்றேன் ; அதுவரை நீ இங்கு இரு" என்று சொல்லிக் கோவலனை ஓரிடத்தில் இருக்கச் செய்துவிட்டு அரண்மனை சென்றான்.

சென்றவன் அரசனாகிய நமது நெடுஞ்செழியனிடம், 'அரண்மனையில் சிலம்பு திருடிய கள்வன் அச்சிலம்புடன் வந்திருக்கின்றான்' என்று கூறினான். அதுகேட்ட நெடுஞ்செழியன் வினை வயத்தால் மதிகெட்டு "அச்சிலம்பு அக்கள்வன் கையில் உளதாயின் அவனைக் கொன்று அச்சிலம்பினைக் கொணர்க" என்று தன் காவலர்க்குக் கட்டளையிட்டான். காவலர் பொற்கொல்லனோடு சென்று கோவலனது சிலம்பைப் பார்த்தனர். அது அரண்மனைச் சிலம்பு போலவே காணப் பட்டதாயினும், கோவலன் கள்வன் என்பதற்குரிய அறி குறிகள் ஒன்றும் அவனிடம் காணப்படவில்லை. அதைக் கண்டு காவலர் அவனைக் கொல்லுதற்குத் தயங்கி நிற்கப் பொற் கொல்லன், அவர்களுக்குக் கோவலன் கள்வனே என நம்புமாறு பல செய்திகளைக் கூறினான். உடனே அவர்கள் கோவலனை வெட்டி வீழ்த்திச் சிலம்பினை எடுத்துச் சென்றனர்.

இஃது இங்ஙனமாகக் கோவலன் வரவை எதிர்பார்த் திருந்த கண்ணகிக்குச் சிலர் கோவலன் கொல்லப்பட்ட செய்தியைக் கூறினர். அவ்வளவில் அவள் பெருந்துயரடைந்து பலவாறு புலம்பியழுது, பின் "அரசனிடம் சென்று வழக்காடி, என் கணவனது குற்றமற்ற தன்மையை மெய்ப்பித்துப்பின் இவ்வூரை எரியூட்டுவேன்" என வஞ்சினம் கூறிச் சென்றாள். சென்றவள், அரசனிடம் சென்று "ஆராயாத மன்னனே, என் கணவன் கள்ளவனல்லன். அவன் கொணர்ந்தது என் கால் சிலம்பேயாகும். அதிலுள்ள பரல்கள் (சிலம்பினுள் ஓசை யுண்டாக்குவதற்காகப் போடப்படும் மணிகள்) மாணிக்கங் களாம்" என்றாள்.

நெடுஞ்செழியன் "நன்று, எனது சிலம்பிலுள்ள அரிகள் முத்துக்களாம்; சிலம்பை உடைத்து உண்மை காண்போம்" என்று தனக்குள் நினைத்தான். அதன்மேற் கோவலனிட மிருந்து கொண்ட சிலம்பைக் கொணர்வித்துக் கண்ணகிபாற்

கொடுத்தான். அவள் அதனை ஓங்கித் தரையில் எறிந்தாள். அப்போது அதனுள்ளிருந்து மாணிக்கப் பரல்கள் தெறித்தோடின. அம்மணிகளில் ஒன்று அரசன் வாயிலுந் தெறித்தது. மணியைக் கண்டதுமே அரசன் மயங்கினன். அமைச்சன் பேச்சுக் கேட்டு அதன்படி ஒழுகுபவனல்லனே அரசன் எனப்படுவான். அரசியல் உணராத தொழிலாளி பேச்சுக் கேட்டு அறிவை இழந்தேனே! யான் ஒருநாளும் அரசனுகேன்; கோவலனைக் கள்வன் என்றேன்; ஆராய்ந்து பார்த்தால் அவன் கள்வனல்லன்; அவனைக் கொன்று, அவன் சிலம்பைக் கவர்ந்திருக்கும் யானே கள்வன் ஆவேன். இதுகாறும் பழுது படாத பாண்டியர் ஆட்சி, என் காலத்திற் பழுதுபட்டது. என் வாணுள் குறைக என இவ்வாறெல்லாம் புலம்பினன். புலம்பி நெடுஞ்செழியன் தன் செங்கோல் பழுதுபட்டதை உணர்ந்து அரியணையினின்று கீழே விழுந்து இறந்தான். தலைக் கற்பு வாய்ந்த அவனது மனைவியாகிய கோப்பெருந்தேவியும், கணவனிறந்தபின் உயிர் வாழ விரும்பாதவளாய்த் தானும் உடனே இறந்துபோயினள். பின்னர், கண்ணகி தன் கற்பின் திறத்தால் மதுரையை எரியூட்டி வையையாற்றின் கரை வழியாகவே மேற்கு நோக்கிச் சென்று சேர நாட்டடைந்து அங்குத் திருச்செங்குன்றம் என்னும் மலைமீதுள்ள ஒரு வேங்கை மரநிழலில் நின்றாள். அப்போது தெய்வ உருவுடன் அவளது கணவன் கோவலன் தேவருலகினின்று தேரில் வந்திறங்கி, அவளை அத்தேரின் மீது ஏற்றி வைத்துக்கொண்டு வானுலகு சென்று விட்டான்.

நிற்க, மேற்கண்டவாறு நெடுஞ்செழியன் இறந்துபட்ட செய்தியைக் கேள்வியுற்ற, சேரவரசனாகிய செங்குட்டுவன் அவ்வரிய செயலை வியந்து, அருகிலிருந்த சீத்தலைச் சாத்தனார் என்னும் புலவரை நோக்கிப் ''புலவீர், செழியனது செங்கோல், அவன் ஆராயாது கோவலனைக் கொல்வித்ததனால் வளைந்து

கொடுங்கோலாகியது; உலகத்தார்க்கு அச்செய்தி எட்டுவதற்கு முன்னலேயே அவன் அரசு கட்டிலினின்று வீழ்ந்திறந்ததனல் அது மறுபடி நிமிர்ந்து முன் போல் செங்கோலாகியது. மற்றும் அரசர்க்கு நாட்டில் தகுந்த காலத்தில் மழை பெய்யாது ஒழியின் அச்சம்; உயிர்கள் தவறு செய்தால் அச்சம்; மக்கள் துன்பமின்றி இனிது வாழ்ந்தாலும் எவர்க்கு எப்போது என்ன குறை நேருமோ என அரசர் அஞ்சிக்கொண்டேயிருப்பர். இவ்வாறு அரசர்க்கு அடுத்தடுத்து அச்சமே யுண்டு. எனவே, அரச குலத்தில் பிறந்தவர்க்கு எந்நாளும் துன்பமேயன்றிப் பிறிதில்லே. ஆதலால் அரசகுலத்தில் பிறப்பது தொழுதகவு உடையது அன்று'' என்று கூறினன். இதனல் பாண்டிய வரசனது செங்கோல் திறம் இனிது விளங்கும்.

இவ்வரசன் கோவலனைக் கொல்வித்ததற்குரிய முன்னை வினைச் செய்தி பற்றி மதுராபதி என்னும் தெய்வம் கண்ணகியிடம் அவள் மதுரையை எரிக்கப் புகுந்த காலத்தில் விளக்கிக் கூறியது. அச்செய்தி வருமாறு :

''கலிங்க நாட்டில் சிங்கபுரம், கபிலபுரம் என்னும் இரண்டு ஊர்களை முறையே தலைநகர்களாகக்கொண்டு பங்காளிகளாகிய இரண்டு அரசர் அரசு புரிந்திருந்தனர். அவர்களுக்குள் பகைமை மூண்டிருந்தது. அக்காலை கபிலபுரத்தினின்று சங்கமன் என்னுமொரு வணிகன் சிங்கபுரத்தையடைந்து அணிகல வாணிகம் செய்துகொண்டிருந்தான். அங்கு ஒற்றர் தலைவனாக இருந்த பரதன் என்பான் அதுகண்டு, அவ்வூர் அரசன் முன் சென்று அச் சங்கமன் பகைவரது ஒற்றன் எனக் கோள் சொல்லி அவனைக் கொல்வித்தான். அதனல் அச் சங்கமன் மனைவியும், சிறந்த கற்புக்கரசியுமாகிய நீலி என்பவள் மிக்க துன்பமடைந்து பதினன்கு நாட்கள் வரை நிலை கொள்ளாது அலைந்து, பின் ஒரு மலை மீதேறி, 'எனக்கு இத்துன்பம் செய்தவர் மறுபிறப்பில் இத்துன்பத்தை அடைக' எனச்

சுடுசொற் சொல்லி, மலைமீதிலிருந்து கீழே விழுந்து இறந்தனள். அப்பரதனே நின் கணவனாகிய கோவலன்; ஆதலால் கண்ணகி, "நீ பதினான்கு நாட்களுக்குப் பின் உன் கணவனை வானோர் வடிவிற் காண்பாய்" என்றது.

இவ்வரலாற்றாலும் இவ்வரசனது செங்கோல் தன்மை விளங்கும். மற்று இவ்வரசன் சிறந்த கல்விமான்; புலவர்களைப் பேணிப் போற்றியவன்; கவியரங்கேறிய காவலன். இவனாற் பாடப்பெற்ற பாட்டு ஒன்று புறநானூற்றில் உள்ளது. அதனால் இவனது கல்வியார்வமும், கல்வித் திறமும் நன்கு விளங்கும். அப்பாடலின் பொருள் பின்வருமாறு:

"தன் ஆசிரியருக்குத் துன்பம் நேர்ந்தபோது உதவியும், மிகுந்த பொருளைக் கொடுத்தும், அவருக்கு வழிபாடு செய்யும் தாழ்வான நிலைமையை வெறாமல் கற்றல், ஒருவனுக்கு மிகவும் நல்லது. ஏனெனில், ஒத்த பிறப்பினராகிய உடன்பிறந்தாருள் ஒருவன் கல்வி கற்றிருந்தானாயின் அச் சிறப்பால் அம்மக்களைப் பெற்ற தாய், மனம் வேறுபட்டுக் கற்ற அம்மகனிடம் தனியன்பு கொள்ளுவாள். ஒரே குடியிற் பிறந்த பலபேர்களில் மூத்தவன் இவ்வலுவலைச் செய்ய வருக என்று அரசன் கூறான்: மற்று அவர்களுள் கற்றவன் கூறும் வழியில் அரசன் நடப்பான்; நான்கு வகையாக வேற்றுமைப்படுத்திக் கூறப்பட்ட குலத்தாருள் தாழ்ந்த குலத்திற் பிறந்த ஒருவன் கற்றுக் கல்வியால் உயர்ந்தானாயின், உயர் குலத்திற் பிறந்தவனும் அவனையடைந்து அவனை வழிபடுவான்", என்பதாம்.

இவனது இப்பாடல் கல்வியின் மேன்மையை எத்துணை விளக்கமாக எடுத்துரைக்கின்றது என்பதை எண்ணிப் பார்க்க வேண்டும். கல்வி கற்பிக்கும் ஆசிரியருக்குப் பொருளைக் கொடுக்கவேண்டியிருக்கின்றது. அவருக்கு ஒரு துன்பம் நேரின் உதவி செய்ய வேண்டியிருக்கின்றது. இவையன்றி

எல்லாவற்றுக்கும் மேலாக அவரிடம் அடங்கி ஒடுங்கி அவர் சொற்படி நடந்து மானத்தைப் பாராட்டாது தாழ்ந்து நிற்க வேண்டியிருக்கிறது. இந்நிலையை வள்ளுவர், செல்வர் முன் ஏழைகள் அச் செல்வம் பெறப் பணிந்து நிற்பதுபோல, ஆசிரியர்முன் மாணவர் கல்வி பெற ஆவலுடன் தாழ்ந்து நிற்றல் வேண்டுவதாகிய ''ஏக்கறு நிலை'' யாகக் கருதுகின்றார்.

இவ்விதத் தாழ்மையான நிலையை அடையவேண்டியிருக்கின்றதே என்று கல்வியைக் கல்லாமல் விடுவது கூடாது. எங்ஙனமாயினும் கற்றலே நல்லது என்கின்றான் இம்மன்னன். மேலும் கல்விச் சிறப்பால் தாய் தன் மனமும் திரிந்து தனது பல பிள்ளைகளுள் கற்றவனையே அவள் மிகுதியும் விரும்புவாள்: கற்றவன் கூறிய வழிச் செல்லும் அரசன் கல்லாதவனை வருக வென்றும் கூறான். கற்று வல்லவனாயின் தாழ்ந்த குடிப் பிறந்தவனை உயர் குடியிற் பிறந்தவன் வழிபடுவான், என்றெல்லாம் அவன் கூறியவைகள் எண்ணி எண்ணிப் பார்த்து மகிழத் தக்கவையா யிருத்தலை அறிக.

9. சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாறன்

நன்மாறன் என்பது இவன் அரசெய்திய பின்னர் ஏற் பட்ட பெயராம். அதற்கு முன் இவனது பெயர் வெற்றி வேற் செழியன் என்பது என்றும், இவன் ஆரியப் படை கடந்த நெடுஞ்செழியனது தம்பி என்றும் ஆராய்ச்சியாளர் சிலர் கருதுகின்றனர். ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் மதுரையில் ஆண்டுகொண்டிருந்தபோது இவன் இளவரசனாய்க் கொற்கையில் ஆண்டுகொண்டிருந்தான். தன் ஆட்சி கொடியதென்று நெடுஞ்செழியன் அரச கட்டிலினின்று வீழ்ந்திறந்ததும் இவன் கொற்கையினின்று மதுரையை அடைந்து அரசை ஏற்றான் என்று சிலப்பதிகாரம் கூறுகின்றது. மக்களல்லாதாரும் இள வரசுப் பட்டம் பெற்றுப் பின்னர் அரசெய்துவதும் உண்டு

ஆதலின் இங்ஙனம் இவன் அரசு பெற்றான் போலும். பெரிய அரசன் உயிரோடிருக்கையிலேயே தனக்குப் பின் அரசெய்துவதற்கு ஒருவனை இளவரசராக்கும் வழக்கம் தொன்று தொட்டே வழக்காம். இராமாயணத்தில் இராமனுக்கு இளவரசுப் பட்டம் கொடுக்க முற்பட்ட காலத்தில் கைகேயி குறுக்கிட்ட செய்தியாலும் இதனை அறியலாம். இவ்வழக்கத்தைப் பின்பற்றியே பிற்காலச் சோழர் பாண்டியர் முதலானவரும் நடந்து வந்திருத்தலை வரலாற்று வாயிலாக நாம் காணலாம். சேரன் செங்குட்டுவன் கண்ணகியின் படிவம் சமைத்தற்காகக் கற் கொணருவது குறித்து வடநாடு சென்றிருந்தபோது இவன் பட்டம் எய்தினன்.

இவன் முறைதவறாத நேர்மையுடையவனாய் அரசாண்டு வந்தானாயினும் பாண்டியநாடு பஞ்சத்தால் வாடுவதாயிற்று. இதற்குக் காரணம் என்னவென்று இவன் பெரியோர்களிடம் ஆராய்கையில் அவர்கள், "கண்ணகிக்கு உண்டான சினம் இன்னும் தணிந்திலதாதலால் இங்ஙனம் நேர்ந்துள்ளதெனத் தோன்றுகின்றது. ஆதலின் கண்ணகித் தெய்வத்திற்கு விழா வெடுக்க" என்றனர். அவ்வாறே இவன் அக் கற்புடைத் தெய்வத்திற்குப் பெருவிழா நடத்தினன். இவ் விழாவில் இவன் நூறு பொற்கொல்லர்களைக் கொண்டு கண்ணகியின் சினம் தணியுமாறு செய்தான் என அறியப்படுகின்றது. அதன் பின்னர் நாட்டில் மழை வளம் பெருகிற்று. நாடு செழித்தது.

இம்மன்னன் மிகுந்த கொடையாளி: உயிர்களிடத்து அருளுடையவன்; பொய் மெய்களை ஆராய்ந்தறிந்து நடுவு நிலை தெரிந்து முறை செலுத்த வல்லவன்; பகைவரை வென்று அவர்க்குத் துன்ப முண்டாக்குவதில் எந்நாளும் வெம்மை குறையாத ஞாயிற்றினைப் போன்றவன்; புலவர்க்கும் இரவலர்க்கும் பரிசிலளித்துப் போற்றி இன்பஞ் செய்தலில் எந்நாளும் குளிர்ச்சி நீங்காத திங்களைப் போன்றவன். இவனது

இத்தகைய பண்புகளை யெல்லாம் இவ்வாறு புகழ்ந்து மதுரைக் கூலவாணிகன் சீத்தலைச் சாத்தனுர் என்னும் புலவர் இவனைப் பாடியிருக்கின்ருர். அப்பாடல் புறநானூற்றிற் காணப்படு கின்றது. இவன் நீண்டகாலம் அரசாளாது விரைவிலேயே இறந்து பட்டான். இவன் இறந்துபட்ட இடம் சித்திரமாடம் என்பது. அது ஓவியங்கள் நிறைந்து அழகுபெற்ற மாளிகை. அங்குத் துஞ்சியமை குறித்து இவன் 'சித்திரமாடத்துத் துஞ்சிய' என்னும் அடைமொழி சேர்க்கப் பெற்ருன்.

10. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன்

இவன் பாண்டியன் சித்திரமாடத்துத் துஞ்சிய நன்மாற னுக்குப் புதல்வன். நெடுஞ்செழியன் இளமையிலேயே அர செய்தினுன் என்று அறியப்படுவதால் நன்மாறன் நீண்ட நாள் அரசாளாது இறந்து பட்டான் என்று கொள்ளவேண்டியிருக் கின்றது. இவன் இளைஞனுயிருந்த போது வலிமையும் அஞ்சாமை மிக்க வீரனுய்ச் சோழன், சேரமான் மாந்தரஞ் சேரலிரும்பொறை என்னும் பேரரசர் இருவரும் திதியன், எழினி, எருமையூரன், இளங்கோவேண்மான், பொருநன் என்னும் வேளிர் ஐவரும் ஆகிய எழுவரையும் தலையாலங்கானம் என்னு மிடத்தில் எதிர்த்துப் போரிட்டு வென்ருன் என்று தெரி கின்றது. இவனது இச்செயலைப் பாராட்டிப் பல புலவர்கள் பாடியுள்ளனர். இதனுலேயே இவன் தலையாலங்கானத்துச் செருவென்ற என்னும் அடைமொழியுடன் குறிக்கப்படு கின்ருன்.

வீரத்தில் சிறந்து விளங்கியது போலவே இவன் கல்வி யிலும் மேம்பட்டு விளங்கினுன். இஃது இவன் பாடிய நகுதக்கனரே என்று தொடங்கும் புறப்பாட்டால் அறியக் கிடக்கின்றது. அப்பாடல் இவன் பாடிய வஞ்சினப் பாட்

லாகும். இவன் மிகச் சிறு வயதிலேயே பட்டம் பெற்றது குறித்து இவனது பகைவர் இகழ்ந்து கூறினர் என்று அப் பாட்டால் புலப்படுகின்றது. "என்னை இகழ்ந்து சுடுசொற் சொல்லிய சினம் மிகுந்த அந்த வேந்தரை நான் ஒருங்கே வென்று சிறைபடுத்தாமற் போவேனேயாயின், எனது குடை நிழற்கீழ் வாழும் எனது குடிகள், யாங்கள் துன்பமின்றித் தங்குதற்குரிய நிழலைக் காண இயலாது செய்து விட்டான் கொடியவனாகிய எமதரசன் என்று கண்ணீர்விட்டு அழுது எனது குடியைப் பழி தூற்றுமாறு செய்த கொடியவனாக நான் ஆவேனாக! எனது நாட்டை மாங்குடி மருதனார் முதலாகிய நல்லிசைப் புலவர்கள் பாடாது ஒழிவாராக! இரப்போர்க்கு இல்லை என்று கூறத்தக்கவாறு மிகக் கொடிய வறுமையை நான் அடைவேனாக!" என்பது இவன் கூறிய வஞ்சினமாம்.

இவ்வஞ்சினத்தால் விளங்கும் சீரிய பொருள் உற்று நோக்கத்தக்கது. முதலாவதாக இவன் 'இங்ஙனம் நான் செய்யேனாயின் குடிகள் எனது குடியைப் பழி தூற்றத்தக்க வாறு கொடுங்கோலனாக ஆவேனாக' என்கின்றான். இதினின்று இவன் பழிக்கு எவ்வளவு அஞ்சினான் என்றும், கொடுங் கோன்மையை எவ்வளவு வெறுத்தான் என்றும் அறியலாம். இவன் 'நல்லிசைப் புலவர் எனது நாட்டைப் பாடாதொழிக' என்றதனால், புலவரால் பாடப்பெறுதலை இவன் எத்தகைய பெரும் பேறாகக் கருதினான் என்பது விளங்கும். 'இரப் போர்க்கு ஈயவியலாத வறுமையை யான் அடைக' என்று இவன் கூறும் செய்தி கூர்ந்து நோக்கத்தக்கது. "நல்ல குடிப் பிறந்தார் நல்கூர்ந்தார் ஆனாலும் இல்லை என மாட்டார் இசைந்து" என்பது ஔவையாரின் அமுத மொழி. எத் தகைய வறுமை வரினும் இல்லை என்று சொல்லா உயர் குடியிற் பிறந்த செழியன், இல்லை என்று சொல்லுமாறு வறுமையடைவது என்றால் அவ்வறுமையின் கொடுந்தன்மை

யாதாயிருக்கவேண்டும்? அவ்வாறு இல்லை என்பதினும் இறந்துபடுவதையே மேலாக உயர்ந்தோர் கொள்வராதலின் அவ்வஞ்சினத்தால் 'யான் இறந்துபடுவேனாக' என்று செழியன் கூறியதாகவே கொள்ளலாமன்றோ?

நிற்க, இவன் தான் கூறிய வஞ்சினத்திற் கேற்றவாறே தன் பகைவர் யாவரையும் ஒருங்கே வென்றான். சிலர் இறந்தொழிந்தனர். சிலர் சிறைப்பட்டனர். சிறைப்பட்டோரில் தலைமையானவன் சேரமான் யானைக்கட்சேய் மாந்தரஞ் சேரலிரும்பொறை என்னும் சேரவரசனாவான். இவன் வீரத்திலும் ஊக்கத்திலும் மேம்பட்டவனாயினும் செழியனிடம் எவ்வாறோ சிக்கிச் சிறைப்பட்டுவிட்டான். பின்னர் இவன் தன் வல்லமையால் சிறையினின்று தப்பிச் சென்றுவிட்டான் என்று புறநானூற்றால் தெரியவருகின்றது. ஆயினும் வழுதியின் வஞ்சினம் பழுதுபடவில்லை என்பதை நாம் நோக்க வேண்டும்.

இனிப் புலவர் இவனைப் பற்றிப் பாடியுள்ள செய்திகளை நோக்குவோம். இடைக்குன்றூர் கிழார், குடபுலவியனார், கல்லாடனார், மாங்குடிக் கிழார் என்போர் இவனைப் பாடியவர்கள், மதுரைக்காஞ்சி என்னும் பெயரிய பெரியதொரு பாட்டு மாங்குடி மருதனார் என்பவரால் இவன் மீது பாடப்பட்டுள்ளது. இவரும் மாங்குடிக் கிழாரும் ஒருவரேயாவர்.

இடைக்குன்றூர் கிழார் இவனைக் குறித்துப் பாடிய செய்யுட்களால் அறியப்படும் செய்திகளாவன:

"ஒருவனை ஒருவன் கொல்லுதலும், ஒருவனுக்கு ஒருவன் தோற்றலும் உலகில் புதியனவாக நடக்கும் செய்திகளல்ல: ஆனால் நெடுஞ்செழியனது மேன்மையை அறியாராய் அவனோடு வந்து போரிட்ட இருபெரு வேந்தராகிய சேரனும், சோழனும், மற்றும் ஐம்பெருவேளிரும் தோற்று நிலை

கெடுமாறு, அவன் தான் ஒருவனுக நின்று எதிர்த்துவென்றது போன்ற வியப்பான செய்தியை இன்றளவும் கேட்டறியோம்."

"செழியன் சதங்கை வாங்கப்பட்ட காலிலே வீரக்கழலை அணியப்பெற்றவன்; குடுமி யொழிக்கப்பட்ட தலையிலே வேப்ப மாலையோடு உழிஞை மாலையைச் சூடியவன்; சிறியவளை நீக்கப்பட்ட கையிலே வில்லைப் பிடித்துத் தேரின் மொட்டிலே நின்ருன்; இன்னும் ஐம்படைத் தாலியையும் களையவில்லை; பாலுண்ணலை ஒழித்து இன்றுதான் உணவுண்ணும் வயதை யடைந்தான். தன்மேல் சினங்கொண்டு போரிடும் வேந்தரை அவன் மதிக்கவும் இல்லை; பழிக்கவும் இல்லை, போரில் அவர்களை இறுகப்பிடித்து வானில் தூக்கி யெறிந்து அவர்கள் உயிர் வானத்திற் செல்லவும், அவர்களது உடல் நிலத்தில் வந்து வீழவும் செய்தான். இத்தகைய அரிய செயலைச் செய்து விட்டோம் என்று அவன் மகிழவும் இல்லை; செருக்கடையவும் இல்லை."

செழியனது பகைவர் யாம் படை வலிமை மிகப் பெற்றிருக்கின்ருேம்; எதிரியோ இளைஞன்! அவனை வென்ருல் கிடைக்கும் கொள்ளைப் பொருள் மிகவும் கூடுதலாயிருக்கும் என்றெண்ணி, அவனது மார்பின் வலிமையை அறியாராய் முழையின்கண் இருக்கும் புலிக்கு அதன் இரையாகிய விலங்குகள் தாமே அதன் இருப்பிடத்தை நோக்கி வந்தாற் போல அவனேடு போரிட வந்தனர். அப்படி வந்த அவர்களைப் புறங்கொடுத்து ஓடுமாறு செய்து, அவர்களது மனைவிமார் நாணி யிறந்து விடுமாறு அவர்களது ஊர்களுக்கும் சென்று அங்கே போரிட்டு அவர்களைக் கொன்ருன்."

"இதோ வேப்பமாலை சூடிச் செழியன் களிறுபோலப் பெருமிதத்தோடு நடந்து போர்க்களத்துக்கு வந்துள்ளான். அவனை எதிர்த்து நிற்கும் பகைவரோ மிகப் பலர்.

பகற்பொழுதோ கொஞ்சமாயிருக்கின்றது. ஆதலின் அப் பகைவரில் சிலர் இறந்துபடாது மிஞ்சவும் கூடும்,'' என் கின்றார் இடைக்குன்றூர்க் கிழார்.

இச்செய்திகளினின்று செழியன் மிகச் சிறுவனாயிருக்கை யிலேயே போர்க்களம் புகுந்து படைகளை அஞ்சாது எதிர்த்து நின்று, வேந்தரோடு நேருக்குநேர் கைகலந்து போர் செய்து அவர்களை வென்றான் என்பது கொள்ளக் கிடக்கின்றதன்றோ? இனிக் குடபுலவியனார் இவனைப் பற்றிக் கூறியுள்ள செய்திகளை யாராய்வோம்.

''வேந்தே, நீ மறுமைக்குரிய செல்வத்தை நுகர விரும் பினும், இவ்வுலகத்தரசர் எல்லாரையும் வென்று நீ ஒருவனே உலக முழுவதையும் ஆள விரும்பினும், உலகில் புகழை நிலை நிறுத்த விரும்பினும் அவற்றிற்குரிய செய்கைகளை யான் கூற நீ கேட்பாயாக: இன்றியமையாத உடம்பிற்கெல்லாம் உண்டி கொடுத்தவர் உயிர் கொடுத்தவராவர். உடம்பிற்கு உணவு இன்றியமையாதது. உணவென்று சொல்லப்படுவன நிலமும் நீருமாம். அவற்றை ஒன்றாகச் சேர்த்தவர்கள் இவ்வுலகத்தில் உயிரையும் உடம்பையும் படைத்தவராவர். வித்துக்களை நிலத்தில் விதைத்து நீருக்காக மழையை எதிர்பார்த்தால், அது முயற்சியுடைய அரசனுக்குப் பயன் படாது. ஆதலால் நீர் நிலைகளை இவ்வுலகத்து உண்டாக்கியவர் மறுமைச் செல்வத் தையும், இம்மைப் புகழையும் ஒருங்கே அடைந்தவராவர். அவ்வாறு நீர்நிலைகளை உண்டாக்காதவர் மறுமைச் செல்வத் தையும் அடையார்; இம்மைப் புகழையும் அடையார்.''

''தமிழ்ப்படை கைகலந்த தலையாலங்கானத்தில் உலகத் துயிர்கள் பலவென்பதையும், அவற்றைக் கொல்லும் கூற் றுவன் ஒருவன் என்பதையும் நீ உன் செய்கையால் உலகத் திற்குக் காட்டினாய். அத்தகைய செழியனே! நீ போரிட்ட

களத்தில் யானையினது துதிக்கை அறுபட்டுக் கலப்பையைப் போலக் கீழே கிடந்து புரள, மூதிற்பெண்டிர் வந்து தமது கணவரும் மைந்தரும் விழுப்புண் பட்டு, வலக்கையிற் பிடித்த வாளையுடையராய் வீழ்ந்து இறந்துகிடத்தலைக் கண்டு, இத் தகைய வெற்றியும் நமக்கு உண்டோ என்று சொல்லி, மகிழ்ச்சியால் அழ, அதுகண்டு கூற்றம் நாணி இரக்கங் கொண்டு போர்க்களத்தை விட்டுச் சென்றது. இவ்வாறு உன்னை எதிர்த்துவந்த எழுவர் பகைவரை வென்றாய். அதனால் உன் மார்பு வேடன், புலியைக் கொல்லுவதற்காகப் பொறி யறிந்து மாட்டிய கல்லடடரைப் போன்றது என்று எண்ணி நான் தழுவினேனன்றோ ?'' என்பர் குடபுலவியனார்.

இவ்வாறு இவர் கூறிய இக்கூற்றுக்களால் இவர் செழிய னது வீரத்தை வியந்து போற்றினராயினும், அவன் போர்த் தொழிலிலேயே ஈடுபட்டிருத்தலைப் பொறாது அவனுக்கு நல்லுரையும் செய்ய விரும்பினர் என்பது புலப்படும். இவர் புகட்டிய அறிவுரையாவது. நாட்டில் நீர்நிலைகளைப் பெருக்கி விளைவை மிகுதிப்படுத்தவேண்டும் என்பதாகும். இதனை வலி யுறுத்த வேண்டி அங்ஙனம் நீர்நிலைகளை யுண்டாக்கியவர்கள் தாம் இம்மைப் பயனாகிய புகழையும், மறுமைச் செல்வமாகிய துறக்கவின்பத்தையும் ஒருங்கேயடைவர் எனக் கூறுகின்றார்.

இப்போது கல்லாடனார் இவனைப் பற்றிப் பாடிய செய்யுட் களின் பொருளைக் காணுவோம் :

''உனது பகைவர் நாட்டுக் குளங்கள் உனது யானைப் படையால் கலக்கமுற்றன. முருகனது கூளிச் சுற்றத்தைப் போன்ற உனது படைவீரர்கள் பகைவரது நாட்டிலுள்ள பொருள்களைக் கொள்ளைகொண்டு, அவ்வாறு கொள்ளை கொள்ள இயலாதவர்களைப் பகைவர் கொள்ளாதபடி அழித்து விட்டதனால் அப்பகைவர் புலங்கள் பாழ்பட்டுள்ளன. உனது

பகைவரது சோலைகளிடத்துள்ள காவல் மரங்கள் வெட்டப்பட்டு நிலைகலங்கியுள்ளன. உனது பகைவரது ஊர்களிலுள்ள மனைகளில் சமைப்பதற்குத் தீ மூட்டாதவாறு அம்மனைகள் தீயாற் சுடப்பட்டன. உனது பகைவர் நாண அவரிடம் சென்று இன்னும் இத்தகைய செயல்களைச் செய்ய வல்லவன் நீ என்று சொல்லுமாறு தலையாலங்கானத்தில் பகைவரை எதிர்த்துக் கொன்றாய் நீ. அத்தகைய வலிமையுடையவனே! யான் உன்னைக் காணுதற்காகக் காட்டு வழியில் நடந்து வந்தேன். அக்காடு எத்தகையதெனில் கலைமான், புலி வாயில் பட்டதாகத் தன் சிறு குட்டியைத் தழுவி மான்பிணை பூளை யோங்கிய பாழிடத்து வேளையினுடைய வெள்ளிய பூவைக் கறிக்கும் தன்மையது,'' என்பார் அவர்.

இங்குப் புலவர் தாங் காட்டிடைக் கண்டு வந்ததாகக் கூறும் இக்காட்சியால் பிறிதொரு கருத்தினைப் பாண்டியனுக்குக் குறிப்பால் உணர்த்தல் உறுகின்றனர். நீ பொருது தாக்கிய ஊரில் தன் தலைமகன் உன் படையை எதிர்த்துப் போரிட்டு மாண்டுபோகத் தலைமகள் ஒருத்தி நேர்ந்த வருத்தம் இன்னதென அறியாது விளையாடும் தன் இள மகவோடு வாடி நிற்கக் கண்டேன் என்பது அவர் உள்ளடக்கிய பொருளாம். இதனால் துணையை யிழந்து மாதர்கள் தனியராயிருந்து வருந்து நிலையை யுண்டாக்கும் போர் புரிதலைத் தவிர்க என்றும் புலவர் தங் கருத்தைப் புதைபடு பொருளாக்கியுள்ளார்.

'' ஞாயிறு திங்களுடனே நிலத்தைப் பொருந்தினாற் போல வலிமை பொருந்தியவரும் வஞ்சினங் கூறியவருமாகிய சேர, சோழ வேந்தர் இருவரையும் நீ போரில் வென்று அவர்களுடைய முரசைக் கைக்கொண்டாய். அக்காலத்தில் பகைவர்களுடைய மனைவிமார்களது கூந்தலைக் கொய்தலாகிய துயரைக் கண்டு இரங்கியல்லவா உனது வேல் பகைவரைக் குத்தலா

னுண்டாகிய சிதைவைப் பெருது ஒழிந்தது. அதாவது பகைவரைக் குத்திக்கொல்லாது இருந்தது.''

''ஊனையும் வெள்ளிய நிணத்தையும் யானையினது கொம்பைப் போன்ற தனது பற்களில் அழுத்திச் சுவைத்துக் கொண்டு, குடர்களைத் தலைமாலையாகச் சூட்டிக்கொண்டு, இத்தகைய உணவைத் தினமும் உண்ணுமாறு குறையாத பெரிய வளத்தினைச் செய்தான் இம்மன்னன். வானத்தில் விளங்கும் மீன்களைக் காட்டிலும் பல காலம் உலகத்தில் வாழ் வானுக வென்று அச்சந் தரத்தக்க பேய்மகள் வாழ்த்திக் கொண்டு விருந்துண்ண, இரத்தத்தோடு பொருந்திய துகளை மேலே படியப்பெறற போர்க்களத்துத் தலைவனே! உன்னிடம் யானை முதலிய பரிசில்களை முகந்து கொள்ளுதற்காக யான் தடாரி, சிறுபறை முதலியவைகளை முழக்கிக் கொண்டு வந்தேன்,'' என்கின்ருர் கல்லாடனுர்.

இவர் பாடிய பாடல்களில் செழியன் பகைவரை வென் றடக்கிய திறம் புகழப்பட்டிருத்தல் காண்க. போர்க்களத்துப் பேய் மகள் ஊஞ்கிய உணவைக் சுவைத்துக் கொண்டு வாழ்த்தியதாகக் கூறும் இறுதிப்பகுதி மிக்க அச்சந் தரத்தக்க தாயிருத்தலை அறிக. போர்க்களத்தைச் சிறப்பித்துக் கூறிய திறம் வியக்கத்தக்கது.

இனி மாங்குடி கிழார் அல்லது மாங்குடி மருதனுர் இம் மன்னனைப் பற்றிப் பாடிய பாடல்களின் செய்திகளை நோக்கு வோம். இவரே நம் செழியனது அவைக்களத்துத் தலைமை பூண்ட புலவர் என்பதும், செழியனது நன்மதிப்பை மிகவும் பெற்றவர் என்பதும் நாமறிவோம். இவர் இம்மன்னனது வெற்றியைச் சிறப்பித்துப் பாடியிருப்பதோடு இவன் அறக்கள வேள்வியும் மறக்கள வேள்வியுமாகிய இருவகை வேள்விகளையும் செய்தான் எனக் கூறுகின்ருர். மேலும் இம்மன்னன் போர்

செய்தலையே குறிக்கோளாகக் கொண்டு நடத்தலைப் பொருத வராய் அவன் நாட்டுக்கு நலஞ் செய்தலாகிய செயலில் ஈடுபட வேண்டுமென இவனுக்கு அறிவுரை செய்கின்றார். இவர் மறக்கள வேள்வியைக் குறித்துக் கூறியவற்றினின்று மறக்கள வேள்வியின் திறம் இன்னதென நன்கு விளங்குகின்றது. அதாவது: நெற்கதிரை அறுத்துக்களத்திற் குவித்து, வைக் கோற் போரை அழித்துப் பிணையடித்தலைச் செய்து, முடிவாகக் கிடைத்த நெல்லைச் சுற்றத்தாரோடு துய்ப்பதற்கு முன்பாகக் கடவுளர்க்குப் படைத்துப் பரிசிலர்க்கு அவரவர் தகுதிக்கேற்ப வழங்குவர். அதுபோலவே மறக்கள வேள்வியில் போர்க்களத் தில் அரசன் நாற்படைகளையும் கொன்று களத்திற் குவிக்கின் றான். பின்னர் யானைகளை எருதுகளாகக்கொண்டு பிணக் குவியல்களின் மீது செலுத்திப் பிணையடித்துக் கலக்கி, அப்படிக் கலக்கியதாலுண்டான நிணச்சோற்றைக் குருதி யாகிய உலையில் ஏற்றுகின்றான். அதன் பின்னர் ஈனு வேண் மாள் அதனை இடமாகத் துழாவிச் சமைப்பாள். அப்படிச் சமைத்த கூழ்ப்பலியைக் களப்பலியாக அரசன் கொடுப்பான். பின்னர்க் கொன்றொழித்தன போக எஞ்சிய யானை குதிரை களையும், மற்றும் பல கொள்ளைப் பொருள்களையும் பரிசிலர்க்கு வரிசைப்படி வழங்குவான்.

நிற்க, இப்புலவர் இவ்வரசனுக்குப் "போர்செய்தலையே குறிக்கோளாகக் கொண்டொழுகுதல் கூடாது. இவ்வாறு பெறும் பொருள்கள் ஐம்பொறிகளாலும் நுகரப்படுவனவாய் நின் முன் நிற்பனவாகும். இவற்றுடன் உனக்கு என்ன உறவு இருக்கின்றதென்பதை எண்ணிப்பார்; நின்னிடத்தில் உண்டாகிய இந்த உலகமாயை கெடுக. அரசனே! மிகப் பெரியதாயிருப்பதொரு பொருளைப் பற்றி நான் உனக்குக் கூறுவேன். அஃது என்னாற் காட்டுதற்கரியது. அதனைத் தொல்லாணை நல்லாசிரியரிடத்தே நீ கேட்பாயாக!" என்று அறிவு புகட்டுகின்றார்.

"உன்னைப்போல் மிக்க வீரத்தோடு உலகம் முழுவதையும் ஆண்டு கழிந்தோர் பலர். அதனால் இதினினும் பெரியதும் உயிர்க்கு உறுதி பயப்பதுமாகிய மெய்யுணர்வை அறிவை நீ. ஆன்றவிந்தடங்கிய கொள்கை சான்றோர்பால் கேட்டறிந்து வீடுபேறு அடையும் வழியைத் தேடுவாயாக" என்பதே இவர் கூறிய அறிவுரையின் உட்பொருளாம். இவ்வாறு நல்வழிப் படுத்தப்பட்ட அரசன் புலவர் கூறிய நல்லுரையின்படி ஒழுகி மேன்மையடைந்தான்.

11. கானப்பேரெயில் தந்த உக்கிரப் பெருவழுதி

இவ்வரசன் பாண்டியன் தலையாலங்கானத்துச் செரு வென்ற நெடுஞ்செழியனது புதல்வன். அவனுக்குப்பின் பட்டம் எய்தி நாடாண்டான். இவனது பெயருக்குமுன் உள்ள "கானப்பேரெயில் தந்த" என்னும் அடைமொழி இவன் கானப்பேர் என்னும் அரணைக் கைக்கொண்டான் என்பதை உணர்த்தும்.

கானப்பேர் என்றது தற்காலத்துக் காளையார்கோவில் என வழங்கும் ஊராம். இப்பாண்டியன் காலத்து இவ்வூரில் பேரரண் ஒன்றை அமைத்துக்கொண்டு வேங்கை மார்பன் என்னும் ஒரு சிற்றரசன் தன்னையாரும் வெல்வாரில்லை எனத் தருக்கியிருந்தான். ஐயூர்முலங்கிழார் என்னும் புலவர் உக்கிரப் பெருவழுதியைப் பாடிய பாட்டால், அவ்வரண் எத்தகைய வலிமை பொருந்திய தென்பது புலப்படும். அங்கு அதனைப் பற்றி அப்புலவர் கூறியுள்ளதாவது :

"அவ்வரணைச் சூழ்ந்த அகழி, நிலவெல்லையைக் கடந்து பாதலத்தேயுற ஆழ்ந்த இடத்தையுடையது; அவ்வகழியை அடுத்த மதில், வானைப் பொருந்துமாறு உயர்ந்தது. அதன் மீதுள்ள சூட்டுக்கள் அதாவது கொத்தளங்கள் வானிடத்து

மீன் (நட்சத்திரங்கள்) பூத்தாற் போன்றன. அவ்வரணைச் சூழ்ந்த காவற் காடு. வெயில் நுழையாதவாறு மரம் செறிந்தது. மேலும் அப் பேரரண் பல சிற்றரண்களால் சூழப் பெற்றது.''

இவ்வாறு அரணின் பெருமை கூறவே அதன் மதிலிடத்துப் பல பொறிகள் அமைந்திருத்தல் சொல்ல வேண்டாதாயிற்று. இத்தகைய பேரரணை அழிப்பது எத்தகைய அரிய செயல் ஆதல் வேண்டும்! அங்ஙனம் அழித்துக் கைக்கொண்டதனாலேயே இவ்வரசன் இவ்வடைமொழி பெற்றான். இப்படிக் கைக்கொண்ட அரணை வேங்கைமார்பன் மீண்டும் கைக்கொள்ளல் இயலாதென நம்பிக்கையைக் கைவிட்டுப் போமாறு அதனைத் தன் வயமாக்கிக் கொண்டான் என அப் புலவர் கூறுகின்றார். அதற்குவமையாக அப்புலவர் கொல்லனுல் செந்தியின் மாட்டப்பட்ட இரும்புண்ட நீரினும் மீட்டற் கரிதென்று கூறுகின்றார். இதனால் இவ்வரசனது வீரம் நன்கு விளங்கும்.

இவ்வரசன் கடைச்சங்க காலத்து மன்னரில் கடைசியானவன் என இறையனாரகப் பொருள் உரையால் தெரிகின்றது. இவனுக்குப் பின்னர் வந்த பாண்டிய அரசன் யாவன் எனத்தெரியவில்லை; அவன் காலத்தே களப்பிரர் தோன்றிப் பாண்டிய நாட்டைக் கைப்பற்றியிருக்கலாமெனத் தோன்றுகிறது. ஏனெனில் கடைச்சங்க காலத்திற்குப் பினனர்த் தமிழ் நாட்டைக் களப்பிரர் கைக்கொண்டதாக வரலாறு வல்லார் கூறுகின்றனர். இம் மன்னன் காலத்தே தான் திருக்குறள் அரங்கேற்றப்பட்டதென்பது செவிவழிச் செய்தி. அதற்கேற்பத் திருக்குறளுக்குப் பாயிரமாக இவனாற் பாடப்பட்டதாக, '' நான்மறையின் மெய்ப்பொருளை '' என்று தொடங்கும் பாட்டொன்று கூறப்படுகின்றது. ஆயினும் ஆராய்ச்சி வல்லுநர் சிலர், திருக்குறள் இவன் காலத்து அரங்கேற்றப்படவில்லை எனக் கூறுவர்.

இவன் அரசனுக இருந்ததோடு மட்டுமல்லாமல் சிறந்த புலவனுமாக இருந்தான். நற்றிணையில் ஒரு பாடலும்; அகநானூற்றில் ஒரு பாடலும் இவன் பாடியனவாகக் காணப் படுகின்றன. மற்றும் இவன் மதுரை உப்பூரிகுடி கிழார் மகனுர் உருத்திரசன்மரைக் கொண்டு அகநானூறு தொகுப்பித்தான்.

இவ்வரசனும், சேரமான் மாரி வெண்கோவும், சோழன் இராசசூயம் வேட்ட பெருநற் கிள்ளியும் சிறந்த நண்பராயிருந் தனர் என்று ஔவையார் பாடிய பாடலொன்றினுல் தெரி கின்றது. அப் பாடல் புறநானூற்றில் உள்ளது. அப் பாடலில் "உலகாளும் உரிமை தவஞ் செய்தார்க்கே உரியதாகும்; அதனுல் பார்ப்பார்க்குப் பூவும் பொன்னும் நீர் வார்த்துக் கொடுத்தும், இரவலர்க்குப் பொருளைக் கூசாது கொடுத்தும் இவ்வுலகில் வாழ்தல் வேண்டும். அங்ஙனம் பிறரை வாழச் செய்தலால் உண்டான அறப்பயன் அல்லாமல், இறங்குங் காலத்து நல்லுலகடைதற்குப் புணைவேறு இல்லை; இங்கே இப்போது நீவிர் அந்தணர் வளர்க்கும் மூன்று நெருப்புக்கள் ஒன்ருகவிருப்பதுபோல் ஒன்று கூடியிருக்கின்றீர்கள். இங் ஙனம் பல வேந்தர் ஒற்றுமையாய் ஒன்றுகூடியிருப்பது நானறிந்தவரையில் இது ஒன்றே; இதற்கு முன்னர் வேறெது வும் இல்லை. ஆகையால் நீங்கள் வானத்து விளங்கும் மீன் களிலும், வானினின்று வீழும் மழைத் துளிகளினும் பல காலம் மேம்பட்டு வாழ்வீராக!" எனக் கூறியிருக்கின்ருர்.

இங்குத் தமிழ் மன்னர் பலர் ஒற்றுமையாய் வாழ்ந்திருந் தது ஔவையார்க்கே வியப்பாய் இருந்ததுகாண்க. இங்ஙன மிருந்தது குறித்து ஔவையார் மிக மகிழ்ந்து இவர்களை வாயார வாழ்த்தியிருத்தலை நோக்குக. இங்குக் குறிக்கப்பட்ட சோழனுகிய பெருநற் கிள்ளி "இராச சூயம் வேட்ட" என்னும் அடைமொழி பெற்றிருப்பதால் இராச சூயம் என்னும் வேள்வியை வேட்டவன் என அறியலாம். எல்லா அரசரும்

தனக்குள் அடங்கி நிற்கத் தான் ஒருவனே யாவரினும் மேம்பட்டவனாய் 'ஸம் ராட்' அ தா வ து 'பேரரசன்' என அழைக்கப்படுவதற்காகவே அந்த வேள்வி வேட்கப்படுவது. இவ்வேள்விக்கு முன்னர் நாற்றிசையினும் உள்ள அரசரையெல்லாம் வென்றடக்குதல் வேண்டுமென்பது முறையாம். இதற்கிணங்க இவன் சேரன் செங்குட்டுவன் உதவியால் தன் தாயத்தாராகிய ஒன்பது சோழரை வென்றடக்கினான். சேரமான் மாரிவெண்கோ, செங்குட்டுவன் வழித்தோன்றியவனாதலால் இவனோடு நட்பினனாதல்கூடும். மற்றுச் சிறந்த வீரனாகிய உக்கிரப் பெருவழுதி என்னும் பாண்டிய அரசன் இவனுக்கு எவ்வாறு அடங்கினான், எவ்வாறு நண்பனாயினான் என்பது புலப்படவில்லை. மூவரும் ஒருங்கிருந்தாரை ஔவையார் பாடினார் எனப் புறநானூற்றில் கூறப்படுதல் வியப்பிற்குரிய செய்தியே யன்றோ?

12. வரலாறு நன்கு விளங்காத பாண்டியவரசர்

இதுகாறும் ஓரளவு வரலாறு விளங்கும் பாண்டிய அரசரைப்பற்றிக் கூறினோம். இனி வரலாறு நன்கு விளங்காத பாண்டிய அரசர் சிலர் புறநானூறு முதலிய நூல்களின் வாயிலாக அறியப்படுகின்றனர். அவர்களைப்பற்றி அறியக் கிடக்கும் செய்திகளைப்பற்றி இப்போது ஆராய்வோம்.

(I) பாண்டியன் கருங்கை ஒள்வாள் பெரும்பெயர் வழுதி: இவன் கரிகாற் பெருவளத்தானது மாமனாராகிய இரும்பிடர்த்தலையார் என்னும் புலவரால் பாடப்பெற்ற பாண்டியவரசன். ஆதலால் இவன் கரிகாலன் காலத்து மதுரையை ஆண்டவனாவான். அப்புலவர் இவனைப் பாடிய பாட்டில்,

"நினது கொடையாலுண்டான புகழைக் கேள்வியுற்று இரவலர், ஊரில்லாதனவும், பொறுத்தற்கரிய துன்பத்தையுடையனவும், நீரில்லாதனவும், நீண்ட வழியையுடையனவும், வீரர் கல்லறைகளின் மீது பருந்துகள் இருந்து வருந்தும்

உன்ன மரத்தினை யுடையனவுமாகிய கவர்த்த வழிகளில் வருவார்கள். அங்ஙனம் வருவாரது மனக்கருத்தை நீ முகக் குறிப்பால் அறிந்து அக்குறிப்பிற் கேற்பக் கொடை கொடுக் கும் தன்மையை யுடையாய். ஆதலால் நிலம் பிறழினும் உனது ஆணை பிறழாதிருக்க வேண்டும்" என்று கூறுகின்றார். இதனால் இவனது கொடைத் திறம் எத்தகையதென அறிந்து கொள்க.

(2) இலவந்திகைப் பள்ளித்துஞ்சிய நன்மாறன்: இப் பெயரிலிருந்து இப்பாண்டிய அரசன் எந்திரவாவியையுடைய பூங்காவிடத்துப் பாயலில் இறந்தான் என அறியலாம். இவன் மூவேந்தர்களில் உயர்ந்தவன். இவனைப் பாடிய நக்கீரர் இவனது வீரம், ஆற்றல் முதலியவைகளைக் குறித்து, "நீ வெகுளியால் கூற்றத்தை யொப்பாய்; வலியால் பலராமனை யொப்பாய்; புகழால் திருமாலை யொப்பாய்; கருதியது முடித்தலால் முருகனை யொப்பாய்; ஆதலின் உனக்கு அரியவும் உளவோ?" எனப் பாடியிருக்கின்றார். இன்னும் இவர் பாடிய பாடலிலிருந்து இம் மன்னன் காலத்தில் மேல் நாடுகளினின்று யவனர் மதுவகைகளைக் கொணர்ந்து விற்றனர் என்றும், அதனை அரசர் செம்மாந்து வீற்றிருந்து பெண்மக்கள் பொற்கலங்களில் ஊற்றிக் கொடுக்க அருந்துவர் என்றும் தெரிகிறது. மற்றும் இவனைப் பாடிய புலவர்கள் மதுரை மருதனிளநாகனார் காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக் கண்ணனார், ஆவூர் மூலங்கிழார், இடைக்காடனார், வடம வண்ணக்கன் பேரி சாத்தனார் ஆகியோராவர்.

(3) கூடகாரத்துத்துஞ்சிய மாறன் வழுதி: இப் பெயரி னின்று இவன் கூடகாரம் என்னும் இடத்தில் இறந்தான் என்றுஅறியலாம். இவன் மிகச் சிறந்த வீரன். இவனை ஐயூர் முடவனாரும், மருதன் இளநாகனாரும் பாடியுள்ளனர். ஐயூர் முடவனார் இவனைக் குறித்துப் பாடிய பாடலில் "நீர்மிகின்

அதனைத் தாங்கும் அரணும் இல்லை; நெருப்பு மிகின் உலகில் அதனைப் போக்க நிழலுமில்லை; காற்று மிகின் அதனைப் போக்க வலியும் இல்லை. நீ இவற்றை யொத்தவன்" எனப் புகழ்ந்துள்ளார். இதனால் இவனது வீரம் விளங்கும்.

மருதனிளநாகனார் இவனைப் பாடிய பாடலில் "மலை முழையிலுள்ள புலியை ஊனை விரும்பிய உள்ளம் செலுத்து தலால் அது இரையைக் கருதித் தான் விரும்பிய விடத்திற்குச் சென்றாற்போல, நீயும் போரை விரும்பி வடநாட்டரசர்பால் சென்று அவரோடு போரிட்டாய்', என்கின்றார். இதினின்று இவன் வடநாட்டரசர் மீதும் படையெடுத்துச் சென்று அவர்களை வென்றான் என்பது விளங்கும்.

(4) வெள்ளியம்பலத்துத் துஞ்சிய பெருவழுதி: இப் பெயரால் இவன் வெள்ளியம்பலத்தில் இறந்தான் என்பது தெரியலாம். வெள்ளியம்பலம் என்பது மதுரைக் கோயிலாம். இவன் கோயிலில் இறந்தான் போலும். இவன் சோழன் குராப்பள்ளித் துஞ்சிய பெருந்திருமாவளவனோடு நட்புக் கொண்டவன். இருவரும் ஓரிடத்தில் ஒருங்கிருக்க அப்போது அவர்களைக் கண்ட காவிரிப்பூம்பட்டினத்துக் காரிக்கண்ணனார் இருவருடைய ஒற்றுமையையும் கண்டு வியந்து வாயார வாழ்த்திப் பாடினர். அப்பாடலில் அவர் இருவரும் இருந்த தோற்றத்தைக்குறித்துப், "பால் நிறங்கொண்ட பனைக்கொடியை யுடைய பலராமனும், நீல நிறங்கொண்ட சக்கரப்படையையுடைய கண்ணபிரானும் ஆகிய இருபெருந் தெய்வங்களும் ஒன்று சேர்ந்து இருந்ததுபோல இருக்கின்றீர்கள்" என்றனர். இன்னும் அவர் "நீங்கள் ஒருவிர்க் கொருவர் துணையாய்ச் செயலாற்றுவீராயின், உலகம் முழுவதும் உமக்குக் கிடைப்பது திண்ணம்; அதனால் உங்களைப் பிரித்தற்கெனத் திரியும் பகைவரது பேச்சைக் கேளாமல் இன்றுபோல் என்றும் இருக்க" என அறவுரை கூறுகின்றார். தமிழ் வேந்தர் தம்மில்

பகைகொள்ளாது ஒற்றுமையுடன் வாழவேண்டும் என்பதை அக்காலத்துப் புலவர் எவ்வளவு விரும்பினர் என்பது இதனால் விளங்கும்.

(5) நம்பிநெடுஞ்செழியன்: இவன் அரிய பண்புகள் யாவும் ஒருங்கே பெற்றவன். அரசர்க்குரிய எல்லாவகை இன்பங்களையும் இவன் ஒருசேரத்துய்த்துள்ளான். இவன் பெயரே இவற்றை நன்கு புலனாக்கும். செழியன் என்பது பொதுவாகப் பாண்டியர்கள் குடிப்பெயர். இவன் பெயருடன் இணைந்த இச்செழியன் என்னுஞ்சொல் இவன் பாண்டிய மரபினன் என்பதை இனிது இயம்பும். அச் செழியன் என்பதற்கு அடைமொழியாக உள்ள சொல் நெடுமையென்பது. நெடுமை + செழியன் என்பன நெடுஞ்செழியன் எனப் புணர்ந்துள்ளன. இங்கு நெடுமை என்பது புகழால் இவன் நீண்டமையை உணர்த்தும். இப்பெயர் இவனையன்றிப் பிறபாண்டியர்க்கும் பெயராக இருப்பதால் இவன் பிறப்பதற்கு முன்னர்ப் பிறந்திருந்த ஒருவன், கல்வி, கேள்வி அறிவு ஒழுக்கங்களில் மிக்கானாய்த், தன்புகழ் எட்டுத்திக்குகளிலும் பரவத் தான் நெடுஞ்செழியனாய் வாழ்ந்திருக்கக் கூடும். இவன் அம்மரபில் தோன்றியதால் அப்பெயர் இவனுக்கும் பெயராக அமைந்தது என்றுங் கொள்ளலாம். எங்ஙனம் ஆயினும் இவன் நற்புகழுக்கு உரியவன் என்பதை எவரும் மறார்.

இவனுக்குப் பெயராக அமைந்த இதே தொடரில் முதற்கண் இடம் பெற்ற சொல் நம்பி யென்னும் இனிய சொல். அஃது ஒன்றே இவன் இயல்புகளையெல்லாம் நன்கு எடுத்து விளக்குவது. நம்பி யென்னும் இச்சொல் ஆண்பாற் சிறப்புப் பெயர்ச்சொல். இதன் பெண்பாற் பெயர்ச்சொல் நங்கை என்பது. "நம்பியைக் காண நங்கைக்கு ஆயிரம் நயனம் வேண்டும்" என்னும் இத்தொடர்க்கண் இவ்விரு சொற்களும் இடம் பெற்றுள்ளன. எனவே, நம்பி என்னும் இச்சொல்லின்

இயைபால் இவன் குடிதழீஇக் கோலோச்சிய மாநில மன்னவனாக இருந்திருக்க வேண்டுமென்பது துணிவு. இஃது இவனைப் பாடிய புலவரொருவர் வாய்மொழியாலும் விளங்கும். இவன் இறந்து பட்டபோது பேரெயின் முறுவலார் என்பார் வருத்தம் தாங்காது பாடிய செய்யுள் நமது நல்லூழால் இன்றுங் கிடைக்கிறது. அச்செய்யுள் புறநானூற்றில் 239-வது பாடலாக இடம் பெற்றுள்ளது. இச்செய்யுள் அப்புலவரால் எப்போது பாடப்பெற்றது என்பதை எண்ணிப்பார்க்க வேண்டும். மன்னவன் ஒருவன் நன்னிலைக்கண் வாழுங்கால், பரிசு வேண்டிப் பாடுவோர் அவன்பால் இல்லாத ஒன்று இரண்டு இயல்புகளை இடைமடுத்துப்பாடுதல் இயல்பு. மொட்டைத் தலையனையும் குடுமித் தலையனாகச் சொல்லிப் பாடினாலோ யாதானும் ஒன்று பெறலாம். ஆனால், பேரெயின் முறுவலார் இச்செழியன் இறந்துபட்ட போது வருந்திப் பாடினார். எனவே, அதன்கண் கூறுவன யாவும் மெய்யாயினவே என்பதில் பொய்யில்லை.

"பெரிதினிது பேதையார் கேண்மை பிரிவின்கட், பீழை தருவதொன்றில்" எனவரும் குறட்பா, பேதையார் தொடர்பைப் புகழ்வது போன்று பழிக்கின்றது. அறிவற்றவர்களோடு நட்பக்கொண்டிருந்தால் அந்நட்பு அவரினின்றும் தாம் பிரிந்த போதோ, அவர் தம்மினின்றும் பிரிந்த போதோ துன்பம் தருவதில்லை. ஆதலால் அந்நட்பு மிக இனியது எனப் பாராட்டுவாராய்ப் பழிக்கின்றார். இதனாலே அறிஞர் தொடர்பு பிரிவிடைப் பெரியதோர் துன்பம் தரவல்லது என்பதையும் இதுவே இடமாகப் பெற வைத்தார் திருவள்ளுவர். இதற்கிணங்க முறுவலாரும், செழியனும் நட்புக் கொண்டிருந்ததால் பாண்டியன் பெரும்பிரிவு (சாவு) கொண்டபோது புலவர் பலபட வருந்திப்பாடலானார். இவ்வாறு படைக்கும் செய்யுளைக் கையறு நிலைச் செய்யுள் என்பர் அறிஞர். கையுறுநிலையாவது ஒருவர் இறப்பின் இன்றி

யமையாத அலுவல்களையும் விடுத்து எஞ்சியிருப்பார் பெரிதும் வருந்தி நிற்றலாம். இதன்கட் கூறும் இயல்புகள் யாவும் புலவர் பலகாலும் கண்டு மகிழ்ந்து மனத்திற் பதிய வைத்த பண்புகள் எனக் கொள்ளத் தடையில்லை. இனி முறுவலார் கருங்கல் மனமும் உருகும் வண்ணம் கூறுங் கருத்துக்களைக் காண்போம்.

எங்கள் மன்னன் இல்லற இன்பங்களை இனிது பெற்றான்; காவல் அமைந்த இளமரக்காவில் கிடைத்த பூவைச் சூடினான்; குளிர்ச்சியும் நறுமணமும் மிக்க சாந்து பூசினான்; தன்னைப் பகைத்தோரை அவர்கள் உறவினர் பலரோடும் பாழ்படுத்தினான்; தன் நண்பர்களை நல்வாழ்வு வாழச் செய்தான்; தன்னைக் காட்டிலும் வலியவரிடம் மானம் விடுத்து வாய் பொத்தி வழிபாடு செய்து அறியான்; தன்னினும் மெலியவரிடம் தான் ஏளனமாக நடந்து அறியான்; பிறர்பால் 'இது தருக' என எதனையும் இதுகாறும் கேட்டது இலன்; சூழ்ந்து நின்று ஈகவென்று வேண்டின இரவலர்க்கு இல்லையென மறுத்தல் இலன்; பிறமன்னர் அவைக்களத்தில் தன் புகழே மிகுமாறு வாழ்ந்தான். தன்னைத் தாக்க வந்த மாற்றவர் படையைத் தன் தலைநகர் எல்லையையே மிதியாத வண்ணம் தடுத்தான்; களத்தில் தன்னைக் கண்டு வெருண்டு ஓடிய பகைவர்களைத் துரத்திச் சென்று தாக்குதலை உணரான்; மிகுந்த விரைவுள்ள குதிரையைத் தன் மனதைவிட விரைவாக ஓடுமாறு ஏறி நடத்தினான், நீண்ட தெருவில் பெரிய தேரைச் செலுத்தினான். மலைபோன்ற தோற்றமுள்ள களிறுகளை ஏறி ஊர்ந்தான்; மதுக்குடங்களை மற்றவர்கட்கும் கொடுத்துத் தானும் உண்டு மகிழ்ந்தான்; பாணர் பசியைத் தொலைத்தான்: நடுவு நிலைமை தவறாமல் வாழ்ந்து சொன்ன சொல்லை மாறிச் சொல்லாமல் இருந்து மாண்புற்றான்; இவ்வாறு செய்யத் தகுவனவெல்லாம் செய்தான்; இவன் செய்யாது ஒழிந்தன

எவையும் இல்லை. இப்புகழை விரும்புவோனது தலையை வாளால் அறுப்பினும் அறுக்க, அல்லது சுடுதலைச் செய்தாலும் செய்க என்பதே பேரெயின்முறுவலார் நம்பி நெடுஞ்செழியன் மறைவிடைச் சொன்ன கையறு நிலையாம்.

அப்புலவர் தலைவர் செழியனின் வாழ்க்கை முறைகளை யெல்லாம் நமக்கு எடுத்துக்கூறி இது வையத்து வாழ்வாங்கு வாழும் முறையென்பதை நமக்குச் சொல்லாமல் சொல்லுகிறார். இவ்வாறு வாழ்பவரே வானுறையுந் தெய்வத்துள் வைக்கப் படுபவர் என நினைப்பு மூட்டுகிறார். அழியும் இயல்புள்ள தம் உடலைக்கொண்டே செய்வன செய்து கொண்டவர் அவ்வுடம்பு அழியுங்காலத்து வருந்தார் என்பது இதன் கருத்து. வருந்தி வயலில் கரும்பை விளைவித்து அதன் சாற்றினால் வெல்லக் கட்டி செய்து விற்றுப் பயன் கொண்டவர். அக் கரும்பின் சக்கை தீப்பற்றி எறியும்போது தாம் வயிறு எரியார். இஃது உலக நிகழ்ச்சி என்கிறார் அவர். இச்செய்யுளிட் கூறப்பெற்ற பண்புகள் தாம் மக்கள் தன்மையை வழங்க வல்லன. இவை யாவும் ஒருங்கே யமையப்பெற்றான் ஒருவன் நம்பி யெனப் போற்றப் பெறுதல் புதுமையானது அன்று.

இதுகாறும் சொல்லப் பெற்ற பாண்டியர்களைத் தவிர மேலும் பலர் சிறப்புடன் இந்நிலப்பரப்பை ஆண்டு வந்துள்ளனர். அவர்கள் யாவரும் தம்மவர்களைப் போலவே தாய் மொழி வளர்ச்சியிற் சலியாது பாடுபட் டுள்ளனர். இவர்களில் ஒருவரான பன்னாடு தந்த பாண்டியன் மாறன் வழுதியென்பவன், எட்டுத்தொகை நூல்களில் முதற் கண் உள்ளதாகிய நற்றிணையைத் தக்கார் ஒருவரைக்கொண்டு தொகுப்பித்து உதவியுள்ளான். செந்தமிழ்ச் சுவையறியும் முறையும், அறிவும் நிரம்பப் பெற்றிருந்தமையால் அன்றோ இவன் நற்றிணை தொகுப்பித்து உதவுவதில் தன் மனத்தை ஈடு படுத்தியுள்ளான். இவன் பெயர்க்கு முன் 'பன்னாடு தந்த'

என்னும் அடைமொழி வருவதால் தறுகண்மையோடு மாற்ருர் மேற் சென்று போர்புரிந்து அவர் தம் நாடுகளிற் பலவற்றைத் தனது தாயகத்தோடும் சேர்த்தான் போலும் என எண்ண இடமிருக்கின்றது. இனி நல்வழுதி யென்னும் பாண்டியனும் சொல்லின் செல்வனுகத் திகழ்ந்தான் என அறிய இடம் உள்ளது. அவன் பாடிய பாட்டொன்று பரிபாடலில் வந்துள்ளது. அந்நூலில் வரும் அவனது பன்னிரண்டாம் பாட்டு வையை யென்னும் பொய்யாக் குலக்கொடியைச் சிறப்பிக்கின்றது. உலக ஆறுகளிலே, புலவர் நாவிற் பொருந்திய பூங்கொடிகளாகிய சில ஆறுகளிலே வையையும் ஒன்று என்பதை மறுக்கவும் முடியாது; மறைக்கவும் முடியாது. அப்பாட்டிற் பாண்டியன் வையை யாற்றின் சிறப்பையும், அதன்கண் நிகழும் புதுநீர் விழாவையும் பற்றி விரிவாகக் கூறியுள்ளான். மேலும் குறுவழுதியென்னும் மன்னவன் புலத்துறை முற்றிய புலவர் ஒருவரால் தொகுக்கப் பெற்ற அகநானூற்றில் வரும் நூற்றைம்பதாவது பாடலைப் பாடியுதவியுள்ளான். இவ்வாறு தாமும் தமிழைப் பயின்று, பிறர்க்கும் பயிற்றிச், சங்கம் அமைத்து, அதற்குத் தலைமை பூண்டு பாண்டியர் தமிழை வளர்த்தனர். மன்னன் எப்படி மன்னுயிர் அப்படி யென்பதற்கு ஏற்ப, இந்நாட்டு மக்கள் தம் மன்னரைப் போலவே தமிழ் வளர்ச்சியில் முனைந்திருந்தனர்.

கடைச்சங்கத்தை நிலைபெறுவித்து அதனை இடர்ப்பாடு இன்றிப் பேணித் தலைமை பூண்டு வந்த பாண்டிய மன்னர் நாற்பத்தொன்பதின்மர் ஆவர். இவருள் கவியறங்கேறினேர் மூவர் என்று இறையனுர் களவியலுரை கூறுகின்றது. ஆனுல், புறநானூறு, அகநானூறு, நற்றிணை, குறுந்தொகை, பரிபாடலாகிய எட்டுத் தொகை நூல்களிலே வரும் பாடல்களைக் கொண்டு காணுங்கால், பாண்டியர் பன்னிருவர் கவியரங்கேறினேர் என்பது விளங்கும். நல்லிசைப் புலமை படைத்திருந்தமையாலேதான் பாண்டியர் தம்மை நாடிவந்த தமிழறி

ஞர்க்குப் பொருளை வாரிவழங்கிச் செய்யுள்களைச் இயற்று வித்தும், தாமும் இயற்றியும், புலத்துறை முற்றியவர்களைக் கொண்டு நூல்கள் தொகுப்பித்தும் தமிழை வழி வழியாக வளர்த்து வந்தனர். இம்மன்னர்களின் இடையறாத முயற்சியாலே இந்நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் தமிழ் முழக்கஞ் செய்தது; தமிழ்த்தாய் அரியணை யேறிச் செங்கோல் செலுத்தினள்.

6. பண்டைப் பாண்டியர் அரசியல்

தமிழகத்தில் ஆட்சிபுரிந்த மூவேந்தர்களும் படைப்புக் காலந்தொடங்கியே மேம்பட்டு வந்தவர்கள் ஆதலாலும் இவர்கள் ஆண்ட நாடுகள் மூன்றும் அடுத்தடுத்து இருந்தமையாலும், அரசியலில் ஒரு நாட்டில் தோன்றிய சிறந்த கொள்கை எளிதில் அண்டை நாட்டிற்பரவ வாய்ப்பு இருந்தாலும் தென்னாட்டு அரசியல் என்பது இம்மூவர்க்கும் பொதுவான அரசியல்தாம். என்றாலும் தமிழகத்து அரசியல் முறைகளிற் பெரும்பாலான பாண்டியர்க்கும் உரியன ஆதலால் பாண்டியர் அரசியல் பற்றிச் சில கூறுவாம். சிலப்பதிகாரமும், மதுரைக் காஞ்சியும், புறநானூறும் போல்வன பாண்டியர் அரசியல் அறிவதற்குப் பெருந்துணைபுரிவன. பாண்டியர் ஆட்சியில் நடுவு நிலைமை, நாட்டுப் பற்று, மொழிப்பற்று, கைத்தொழில் வளர்ச்சி, வாணிகச் சிறப்பு, படைப் பயிற்சி, இனவுணர்ச்சி முதலியன மக்களிடையே பரவியிருந்தன. இவற்றைச் சிறிது விளக்கமாகக் காண்போம்.

பேரரசும், சிற்றரசும்: பண்டைப் பாண்டிய மன்னர் தமிழ் நாட்டு முடியுடை மூவேந்தர் எனப்படும் பேரரசர் மூவருள் ஒருவராவர். தமிழ் நாட்டில் இப் பேரரசரையன்றிப் பல சிற்றரசரும் இருந்தனர். அவர்கள் ஒரோருகால்

பேரரசர்க்கு உள்ளடங்கியும், ஒரொருகால் உரிமை பெற்றும் தமது நாடுகளை ஆண்டு வந்தனர். ஆயினும் தமிழ்நாடு முழுவதும் பேரரசர் மூவர்க்கும் உரித்தாகவே கொள்ளப்பட்டு வந்தது எனத் தெரிகிறது.

அரசுரிமை: அரசுரிமை வழி வழியாக அரசனது மூத்த மகனுக்கே உரியதாகக் கருதப்பட்டது. ஏனையோர் அம் மூத்தவனுக்கு அடங்கியவர்களாத் தமக்கெனத் தனி நகர்களைத் தலைநகர்களாகக் கொண்டு நாட்டின் சில பகுதிகளை ஆண்டு வருவர். பேரரசன் தான் உயிரோடிருக்குங் காலத்திலேயே தனக்குப் பின் அரசெய்துவதற்கு உரிமை பெற்றவனாக இளவரசுப்பட்டம் கட்டுதலின் வழியாக ஒருவனைத் தேர்ந்தெடுத்து அமைப்பான். இவ்வுரிமை பெரும்பாலும் அவனது மூத்த மகனுக்கே உரியதாகும். ஒரேவழித் தம்பி, இளைய மகன் முதலியோர்க்கு இவ்வுரிமை வழங்கப்படும். பேரரசன் இறந்துபோன காலங்களில் அவனுக்குப் பின் ஆளும் அரசுரிமை பெற்றவர் வலியற்றவராயிருப்பின், தாயத்தார் எழுந்து பூசல் விளைத்து நாட்டைக் கவர முயலுதலும் உண்டு. இளவரசுப் பட்டம் பெற்றவர் அரசனுடன் உதவியாயிருந்து பணியாற்றுதலும் உண்டு. அன்றி வேறொரு தலைநகரினின்று தனியே சிற்றரசன் போல நாட்டின் பகுதியைப் புரத்தலும் உண்டு.

இவ்வாறு அரசன் ஒருவன் தான் வலியனாய் உள்ள போதே தனக்குப் பின் அரசு பெறுவதற்கு உரிய தன் மூத்த மகனை ஆட்சித் துறையில், படையெடுப்பில் ஈடுபடுத்தி அவற்றில் பயிற்சி கொடுத்தல் மரபு. அரியேறும் புலியும் ஆகிய விலங்குகள் தங் குருளைகளைப் பிற விலங்குகளின் மேற் பாயப் பழக்கி விடுமாப்போல, மன்னர்கள் தம் மக்களை ஆட்சி முறையிற் பழக்குதலும் வழக்கமாக இருந்தது. மேலும் நாடு பிடித்தற்கும், வீரம் புலப்படுத்தற்குமாக உயிரையும் பெரிதாக

மதியாது போர் புரிதலையே பொழுதுபோக்காகக் கொண்ட மன்னர்கள் அக்காலத்தில் இருந்தமையால், அத் தாக்குதல் களிலிருந்து தற்காத்துக்கொள்ளுதற்கும் தம் மக்களுக்கு அவ் விருவகைப் பயிற்சியுங் கொடுப்பது இன்றியமையாததாக இருந்தது. இம்முறையைப் பாண்டியர்களும் கைக்கொண் டிருந்தனர். கொற்கையில் தங்கித் தென்பாண்டியைத் திறம் பெற ஆண்டு பழகி வந்த வெற்றிவேற் செழியன், பழவினைப் பயத்தால் கோவலனை அறியாது கொன்று, பின் அறிந்து நெடுஞ்செழியன் இறந்தபோது மதுரை வந்து முடி சூடினான் எனச் சிலப்பதிகாரஞ் சொல்லுவது இதனை உறுதிப்படுத்தும்.

உறுதிச் சுற்றம்: அரசுரிமை தெய்வத்தால் ஏற்பட்ட தாகக் கருதப்பட்டது. அரசன் திருமாலின் தோற்றமாகக் கொள்ளப்பட்டான். அதனால் மக்கள் அரசனைத் தெய்வமெனக் கருதிப் போற்றி வந்தனர். இவற்றால் அரசன் தன் மனம் போனவாறு செயலாற்றும் ஆணை பெற்றிருந்தான் ஆயினும் அவன் அங்ஙனம் செய்வதில்லை. எல்லாச் செயல்களையும், தனக்குதவியாய் அமைந்த ஐம்பெருங்குழு, எண்பேராயம் எனப் பட்ட உறுதிச் சுற்றத்தாருடன் கலந்தாராய்ந்தே செய்து வந்தான். ஐம்பெருங்குழுவினராவார், அமைச்சர், புரோகிதர், சேனாபதியர், தூதுவர், சாரணர் என்போர். எண்பேராயத்தார் என்போர் கரணத்தியலவர் (கணக்கர்), கரும விதிகள் (ஆணையை நிறைவேற்றுபவர்), கனகச் சுற்றம் (பண்டகசாலை காப்போர்), கடை காப்பாளர் (அரண்மனைக் காவலர்), நகர மாந்தர், படைத்தலைவர், யானை வீரர், குதிரை வீரர் ஆகியோர். இவர்களையன்றி கரும வினைஞர், கணக்கியல்வினைஞர், தரும வினைஞர், தந்திரவினைஞர், பெருங்கணி என்போரும் இருந் தனர். கருமவினைஞர் என்பவர்கள் நாட்டின் ஆட்சியை நடத்தி வந்தனர். கணக்கியல்வினைஞர் அரசிறை வருவாய்களைக் கண்காணித்து வந்தனர்; தருமவினைஞர் அறங்களைப் பாது காத்தனர்; தந்திர வினைஞர் படைகளை நடத்தினர்; பெருங்கணி

என்போன் அரச அலுவல்களில் தலைமையானவற்றை நிகழ்த்துவதற்குரிய நற்காலத்தைச் சோதிட நூலைக்கொண்டு ஆராய்ந்தறிந்து தீர்மானித்துச் சொல்லிவந்தான்.

அரச அடையாளங்கள்: குடை, கொடி, முடி, செங்கோல், முரசு, காவன்மரம் என்பன அரசர்க்குரிய அடையாளங்களாம். இவற்றுள் குடை வெண்மை நிறமானது. "வெண்கொற்றக் குடை" எனவும் கூறப்படும். இது அவையில் அரசனமரும் அரியணையின் பின்னால் அமைக்கப்பட்டது. "வியன்குடை, வெயின் மறைக் கொண்டன்றோ அன்றே, வருந்திய குடி மறைப்பதுவே" என்னும் ஆன்றோர் மொழியால் அரசனுடைய வெண்கொற்றக் குடையானது, குடிகளது துன்பங்களைப் போக்குவதைக் குறிக்கும் அடையாளம் என்பதை அறியலாம். வெயிலில் துன்பப்பட்டார்க்குக் குடை, நிழல் கொடுத்து அவ்வருத்தத்தைப் போக்குவது போல அரசனது பாதுகாவல் கள்வர், பகைவர், பஞ்சம், நோய் முதலியவற்றினின்று குடிகளைப் பாதுகாக்கும் என்பதை இக் குடை உணர்த்தும்.

கொடியானது அரசனது ஆணையைக் குறிக்கும் அடையாளமாகும். அது உயர்ந்துள்ள வரையில் அரசன் ஆணையும் உயர்ந்திருக்கும். அது கீழ்ப்பட்டதாயின் அரசனது ஆணையும் வீழ்ந்ததாம்.

அரண்மனை முகப்பிலும், கோட்டை வாயில்களிலும் அந்நாட்டுக்கொடி பறந்துகொண்டிருக்கும். பகைவர்கள் மேல் படையெடுத்துச் சென்று அவர்கள் நாடு நகரங்களைப் பிடித்தார்களாயினும், அவை தம்முடையன என்பதைக்காட்ட முதற்கண் கொடியையே பறக்கவிடுவர். இதனாலேயே கோட்டையைப் பிடித்துக் கொடியை ஏற்றுவது என்னும் பழமொழியும் எழுந்தது. படையெடுப்பில் வென்றபோதும் இந்நாட்போலப் புதுப்புதுக் கொடிகளை யேற்றி விழாக் கொண்டாடல் உண்டு.

பாண்டியர் கொடியில் மீன் உருவம் பொறிக்கப்பட்டிருக்கும், இவ்வுருவம் நீரிடைப்பாயும் மீன் போலப், பாண்டியர் போரிடைப் பாய்வர் என்பதையும், பாண்டி நாட்டு நீர் வளத்தையும் காட்டும்.

முடி அரசனது ஆட்சி முறைமையைக் குறிக்கும் குறி. முடி பறிக்கப்பட்டதாயின் அரசனது மேன்மையும் அழிந்தது என்பதே கருத்தாம்.

இம்முடி பொன்னாற் செய்யப் பெற்று மணிகள் பதிக்கப் பெற்றிருக்கும். இதனை அருங்கலம் எனப் பலரும் சொல்வர். அரசனுக்கு உரியது அருங்கலம் என்னும் தொடரும் அரசனுக்கும் முடிக்கும் உள்ள இயைபைப் புலனாக்கும். அரசப் பொறுப்பை யேற்றுக்கொள்வதையே பொதுவாக முடிசூட்டு விழா என்று மட்டுமே சொல்லுவர். இதனாலும் இதன் சிறப்பு விளங்கும். ஒரு நாட்டு உழவர்களும் வணிகர்களும் முன்னின்று இம் முடிசூட்டைச் சிறப்பித்தல் வழக்கம்.

செங்கோல், அரசனது நடுவு நிலைமையைக் குறிக்கும் அறிகுறியாம். இது இடையிடையே மணிகள் பதிக்கப் பெற்ற பொற்கோல். இதை அரசன் அரியணையில் வீற்றிருக்கையில் கையில் வைத்துக்கொண்டிருப்பான். அரசன் ஆட்சி தவறுவானாயின் அவன் கோல் கோடிற்று. அவன் கொடுங்கோலன் ஆனான் என்று மக்கள் கூறுவர்.

செங்கோல், என்னும் இத்தொடர் செம்மை + கோல் எனப்பிரித்து நேர்மையான தடி யெனப் பொருள்படும். அத்தடி வேண்டுவோர் கைப்படும் போது நேர்மையாகவும், வேண்டாதார் கைப்படும் போது நேர்மை குன்றியும் இருத்தல் இல்லை. எவர் கைப்படினும் ஒரே இயல்பிலேயே இருப்பது இயல்பு. அவ்வாறே மன்னன் ஒருவன் ஆட்சியும் உறவினர், பகைவர், அயலவர் என நோக்காது யாவர்க்கும் பொதுமையாக இருத்தல்

வேண்டும் என்ற கருத்தைப் புலப்படுத்த அமைக்கப்பட்டதே இச் செங்கோல். கொடுங்கோல் என்பது வளைந்த தடியெனப் பொருள்பட்டு அது முறைமை தவறிய ஆட்சி முறையை உணர்த்தும். பாண்டியன் நெடுஞ்செழியன் வைத்திருந்த செங்கோலைக் கோவலன் பழவினையானது வளைத்துக் கொடுங் கோலாக்கியது. பாண்டியன் அதனை யுணர்ந்து தன் உயிரைக் கொடுத்து அதன் வளைவை நிமிர்த்து முன்போலச் செங்கோல் ஆக்கினான், எனச் செங்குட்டுவன் பாராட்டுவதாகச் சிலப்பதிகாரம் சொல்லும். இதன் கருத்து கோவலனது பழவினையின் தூண்டுதலால் நெடுஞ்செழியன் கோவலனை ஆராயாது கொன்றமையால் அவனது தவறாத ஆட்சி முறை தவறிப் போனது. அத்தவறு பாண்டியர் குடிக்குப் பெரிய களங்கமானது. அக் களங்கம் நெடுஞ்செழியன் தவறுணர்ந்து மாண்டதால் மறைந்து போனது என்பது இங்கு முறை தவறாத ஆட்சி செங்கோலாகவும், முறைதவறிய ஆட்சி கொடுங்கோலாகவும் சொல்லப் பெற்றிருத்தல் காண்க.

முரசு அரசனது வெற்றியைக் குறிக்கும் அடையாளமாகும். வெற்றியைக் குறிக்க முரசு கொட்டல் வழக்கம். மற்றும் திருமணம், விழா, கொடை முதலான பலவகைச் செய்திகட்கும் முரசு கொட்டப்படுமாயினும், வெற்றி குறித்துக் கொட்டப்படுவதே சிறப்பாம். இம்முரசை வைத்தற்கெனத் தனியாக முரசு கட்டில் என்றொரு தவிசு உண்டு. அதில் வைத்து இது பூசிக்கப்படும். அம்முரசு கட்டிலை இகழ்வோர் கொலை செய்யப்பெறுவர். பொதுவாக முரசங்கள் யாவும் தோல் போர்த்துச் செய்யப்படுவனவே யென்றாலும் வீரமுரசு செய்யும் முறையே வேறானது. இந்த முரசும் தோல் மூடிய முரசுதான். ஆனால் இந்தத் தோல் பிற தோல்களினும் வேறுபட்டது என்பது அறியத் தக்கது. வேங்கைப் புலியோடு பொருது அதனைத் தன் கூர்ங்கோட்டால் குத்திக் கொன்று, கொம்பில் மண்ணுடன் பாய்ந்து சென்று உயிர்விட்ட காளை

யின் மயிர் சீவாத தோலைப் போர்த்துச் செய்வதே வீரமுரசாம். இதனை மயிர்க்கண் முரசு என்று நூல்கள் கூறும். இதன் முழக்கம் இடி முழக்கம் போல இருக்கும். இதன் ஓசை கேட்டதுமே இளைஞர்கள் தோள் துடிக்கும். எதிரிகள் உள்ளந் திடுக்கிடும்.

தெய்வத் திருநகர்களில் கோவில் மரம் என ஒரு மரத்தைக் கொள்வது போலப் பண்டை அரசர்கள் தத்தமக்கெனக் "காவன் மரம்" என்று ஒன்றை அமைத்துக்கொண்டிருந்தனர். அது பெரும்பாலும் அரசனரண்மனைக்கு எதிரில் அமைந்திருக்கும். அம்மரம் அரசனுக்கு வாழ்வு வர இருப்பதைத் தன் செழிப்பாலும், தாழ்வு வர இருப்பதைத் தன் வாட்டத்தாலும் அறிவிக்கும், இது கடவுள் மரமாகக் கருதப் படும். அதனை ஊறுபடுத்துவோர் அரசனுக்கே ஊறு செய்வதாகக் கருதப்படுவர். நன்னன் என்னும் ஓர் அரசனது காவன் மரமாகிய மாமரம் ஒன்றிலிருந்து வீழ்ந்த கனியை ஒருத்தி தின்றதால், அவள் கொல்லப்பட்டாள் என்றொரு வரலாறு கூறப்படுதால் இதனை அறியலாம். போரில் வென்ற அரசர், தோற்ற அரசரது காவன் மரத்தை வெட்டுதல் வழக்கமாம்.

இதுவரை சொல்லப்பெற்ற குடை, கொடி, முடி, முரசு என்பவைகளும், படையுமாகிய இவை பேரரசர்க்கே உரியன. சிற்றரசர் வைத்துக்கொள்ளற்கு உரிமையுடையவர் இல்லை. சிற்றரசர் பேரரசர்க்குக் கட்டுபட்டிருக்கும் வரை இவைகளைத் தமக்கெனத் தனியாகக் கொள்ளாமல் இருப்பார். வலிமைமிக்குப் பேரரசர் பிடிப்பிலிருந்து விடுபட்டுச் சிற்றரசர் தம்முரிமை பெற்றுவிடுவாரானல் இவைகளைத் தமக்கெனத் தனியே வைத்துக்கொள்வர்.

அரசர்க்கு இன்றியமையாத ஆறு பொருள்கள் :

"படைகுடி கூழ்அமைச்சு நட்புஅரண் ஆறும்
உடையான் அரசருள் ஏறு"

என்றார் வள்ளுவனார். இதனால் படை, குடி, விளைச்சல் அமைச்சர், நட்பினர், அரண் எனும் ஆறு பொருள்கள் அரசர்க்கு இன்றியமையாதனவாகும் என அறியலாம்.

படை: 'படை' என்பது பகைவரைப் படுப்பதற்கு அதாவது அழிப்பதற்குக் கருவியாக உள்ளதைக் குறிக்கும். படைப் பெருக்கையும், கருவிப் பெருக்கையும் உடைய அரசர் வலிமைமிக்குப் பல நாடுகளை வென்று பேரரசராவர் என்பது மறுக்க இயலாத உண்மையாம். பண்டைத் தமிழகப் படை யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை என நால்வகைப்பட்டதாம். வில், அம்பு, ஈட்டி அல்லது வேல், வாள் இவை சிறந்த போர்க்கருவிகளாகும். போர் புரியச்செல்லுங்கால் இப்படை முன்னணிப்படை, நடுப்படை, பின்னணிப்படை என மூன்றாகப் பகுக்கப்படும். முன்னணிப் படை, தூசிப்படை என்று கூறப்படும். இது முன்னே பகைவர் நாட்டை அழித்துக்கொண்டு செல்லும். நடுப்படை தார் எனப் படும். இதுவே போரில் சிறப்பாக ஈடுபடுவது. பின்னணிப் படை உதவிப்படையாம்.

இப்படை மூலப்படை, கூலிப்படை, நாட்டுப்படை, காட்டுப்படை, துணைப்படை, பகைப்படை என அறுவகை யாகவும் பிரிக்கப்படும். இவற்றுள் மூலப்படை யென்பது வழிவழிப்படையாக வருவது. கூலிப்படை அப்போதைக்கு அப்போது கூலி கொடுத்துச் சேர்க்கப்படுவது. நாட்டுப்படை யென்பது நாட்டிலுள்ள இளைஞர்களைப் போர்க்காலத்தில் தொகுத்து அமைப்பது.

காட்டுப்படை யென்பது காட்டிலுள்ள வேடர்போல் வாரைத் திரட்டி அமைப்பது. துணைப்படை யென்பது தமக்கு நண்பரான அரசர் உதவியது. பகைப்படையென்பது பகைவர் களை வென்று அவர்களிடமிருந்து திறையாகக்கொண்டுவந்தது.

இவற்றுள் மூலப்படை தொல்படை யென்றுங் கூறப்படும். இப்படையே அரசன் நம்பிக்கைக்குப் பெரிதும் உரியது. அரசனுக்குப் போரின்கண் தோல்வி நேருவதாக இருந்தால் அப்போது முகத்திலும், மார்பிலும் கழுத்திலும் புண்படுவதற்கு அஞ்சாது எதிர் நின்று போராடி அத்தோல்வியை இப்படை தொலைக்கும். தன்மானமும், உடல்வலிமையும், அரசன்பால் அன்பும், நன்றியறிவும் இத் தொல்படைக்கே யுண்டு. அதனால் இப்படையைக் கையூட்டுத் (இலஞ்சம்) தந்தோ, புறங்கூறியோ பகைவர் வஞ்சித்துப் பிரிக்கமுடியாது. இப்படை தறுகண்மை படைத்ததாக இருக்கும். அதனால் பகைவர்களை விரைவிற் கொன்று ஒழிக்கும், மானம் என்னும் பண்பும் அப்படையினிடையே வயங்கும். அதனால் அது அரசனுக்குத் தாழ்வு வராமல் தடுக்கும். தனக்கு முன்னிருந்த படை கைக்கொண்டிருந்த உயர்ந்த கொள்கைகளையே வழி வழியாகப் படை கைக்கொள்ளும். அதனால் வெறுங்கையர்களைத் தாக்குதல், தோற்று முதுகுகாட்டி ஓடுபவர்கள்மேல் தன் படைக்கலங்களைத் தொடுதல் இவற்றை மேற்கொள்ளாது. இச்சிறப்புகள் யாவும் உடையதாக இருப்பதால் அப்படை அரசன் நம்பிக்கைக்கு உரியதாகத்திகழும். இவ்வியல்பால் மாற்றார்கள் தம் வயமாக்குவதற்கு ஏவிவிடுகிற மகளிர்கள் வழியாகவோ வழங்குகிற பணத்தின் வழியாகவோ மனநிலை கெட்டுத் தன் மன்னவனை வஞ்சித்துத் தான் அவனுக்கு மாறுபட்டுக் காட்டிக்கொடாது. இப்படை போர்க்காலங்களில் பகைவர்கள் அணிவகுத்துத் தம் படைகளையேவி விட்டால், அவற்றைத் தடுக்கும் முறையறிந்து தடுத்து, அவர் முன்னணிப் படையைத் தன்மேல் வாராவண்ணம் விலக்கி, அவ்வளவில் நில்லாமல் தான் அதன்மேற் சென்று தாக்கித் தன் அரசனுக்கு வெற்றியைத் தேடித் தருவதில் வல்லதாக இருக்கும். இப்படைக்கு எவரையும் சேர்த்துவிடும் இயல்பு அந்நாளில் இருந்ததில்லை. அஞ்சாமல் பகைவர்களைத் தாக்கும்

திண்மையுணர்ச்சியும், அப்பகைவர்கள் படை தம்மைத் தாக்கினுல் அதனைத் தாங்கிக்கொள்ளும் மனவுறுதியும் படைத்த இளைஞர்களையே பொதுவாகப் படைக்கு உரியவர்களாகப் பொறுக்கியெடுத்தனர். இவ்வியல்புகளைத் தலைமையாகக்கொள்ளுதலோடு இந்நாளிற்போல உயரமும் பருமையும் கொண்டவர்களைச் சேர்த்தல், ஒப்பனை செய்யப் பெற்ற தேர், யானை, குதிரைகளோடு, கொடி, குடை, கொட்டுவன ஊதுவனவாகிய பல்லியங்கள் (பலவகை வாத்தியம்), காகளம் (ஒருவகை ஊதுகுழல்), என்பனவற்றை அமைத்துக் கொடுத்தல், வனப்பு வாய்ந்த உடைகள், தொடுதோல் (செருப்பு), கழல், கையுறை, உறுதியும் தோற்றமுங் கொண்ட கருவிகள் முதலானவற்றைப் பூணுவித்தல் ஆகிய இச்செயல்களால் படைக்குப் பகைவர்கள் கண்டதும் அஞ்சத்தக்க தோற்றப் பொலிவு இருத்தலும் சிறப்பாக நோக்கப் பெற்றது.

குடி: 'குடி' என்பது குடிமக்களைக் குறிக்கும். குடிமக்கள் அரசனது உயிராவர். அரசன் மன்னுயிர்களை அதாவது குடிகளைத் தன்னுயிர்போலக் காத்தல் வேண்டும். அவர்கட்குத் தன்னுலும், தன் இனத்தவராலும், கள்வர், பகைவர் முதலியோராலும், விலங்குகளாலும், பஞ்சத்தாலும், நோயாலும் யாதொரு தீங்கும் நேராதவாறு அரசன் பாதுகாக்க வேண்டும் என்னும் கொள்கை ஏற்பட்டிருந்தது.

இக்குடிகளிற் பலர் உழவு மேற்கொண்டு எல்லாவகை உணவுப் பொருள்களையும் விளைவித்து மலைபோற்குவித்தலில் மனத்தை ஈடுபடுத்துவர். "உண்டி முதற்றே யுண்வின் பிண்டம், உண்டி கொடுத்தோர் உயிர்கொடுத்தோரே" என்ற உண்மைகள் பண்டைக் குடிமக்களால் உணரப் பெற்றிருந்தன. உள்நாட்டில் உணவுப் பொருட் பெருக்கம் குறைந்தால், அவ்வுணவுக்காகப் பிற நாட்டை யெதிர்பார்த்து நிற்க நேரிடும். அந்நாட்டுக்கு உணவுக்காகக் கொள்ளை கொள்ளை

யாகச் செல்வத்தைக் கொட்டி அளக்க வேண்டியதிருக்கும். இதனுல் செல்வக் குறைவு நேரும். ஆகவே தமது தாயகம் உணவுப்பொருள் ஏற்றுமதிக்கு உரியதாகத் திகழவேண்டும் அல்லது தன்னிறைவு கொண்டதாகவாவது தழைக்கவேண்டு மென அந்நாளைய குடிமக்கள் எண்ணினர்; அதனுல் உணவுப் பெருக்கத்தை உண்டாக்கினர். மற்றுஞ் சிலர் வாணிகம், கைத்தொழில்களால் செல்வத்தை வளர்த்தனர். பிறநாடு களில் நேர்ந்த அரசியற்குழப்பத்தாலோ, கொடுங்கோன்மை யாலோ, வறுமையாலோ மக்கள் தொகுதியும், ஆன், எருமை முதலான விலங்குத்தொகுதியும் அடைக்கலமாக வந்தால் அவ் வடைக்கலத்தை ஏற்று, அவற்றைத் தம் நாட்டிற்போல மக்கள் வாழச்செய்வர். இங்ஙனம் பிறநாட்டுக் கூட்டத்தை வரவேற்று இருக்கச் செய்தமையால் தம் கைப்பொருள் செல வாயிற்று என்று சொல்லிக் கள்ளக்கணக்கு முறையைக் கைக் கொண்டு தாம் ஆள்வோருக்குத் தரவேண்டிய வரிப் பொருளை அந்நாட் குடிமக்கள் மறைத்திலர்; குறைத்திலர். பிறநாட்டு மக்களும் உயிரினங்களும் சேர்ந்த சேர்க்கை முறையாலே மிக்க பசியும், நீங்காத நோயும் தம்மிடையே தலையெடாதவாறு மக்கள் விழிப்பாய் இருந்தனர். இனம் பற்றியும், கடவுட் கொள்கை பற்றியும், அரசியற் கருத்துப் பற்றியும் தனித்தனிக் குழு (கட்சி) ஆக மக்கள் இணைவது முன்னேற்றத்திற்குத் தடையென்பது முன்னுளைய குடிகளின் எண்ணம். களவு செய்தல், கன்னமிடுதல், வழிப்பறி பறித்தல், பொய் கூறுதல், மக்களை ஏமாற்றுதல், கோள் கூறுதல், பொய்ச்சான்று போதல், முன்னென்று சொல்லிப் பின்னென்று சொல்லுதல், அடுத்துக் கெடுத்தல், தீவைத்தல், நஞ்சிடுதல், சூறையாடுதல், பிறன்மனை விரும்பல் முதலான இழிச்செயல்களைப் பண்டைக் குடிமக்கள் கொண்டிலர். இவற்றைச் சிலர் கொண்டிருப் பினும் அவர்களைப் பசும் பயிரிடையே முளைத்த களையாகக் கொண்டு ஆள்வோர் விரைவிற் களைவர். உழவுக்கு உதவி

யாகக் கிணறுகளும், குளங்களும், ஏரிகளும், ஆறுகளும் ஆகிய வற்றை மக்கள், ஆள்வோர் உதவியுடன் அமைத்துக் கொண்டனர். நோயில்லாமையும், செல்வப் பெருக்கமும், நல்ல விளைச்சலும், இன்பவாழ்வும், தகுந்த காவலும்தான் நாட்டை அழகு படுத்துவன என்ற கருத்து இந்நாட்டு முந்தையோரிடம் அமைந்திருந்தது. இவையெல்லாவற்றையுங் காட்டிலும் "வேந்தமைவு" என்னுந் தொடரால் ஆசிரியர் திருவள்ளுவர் கூறும் உயர்ந்த பண்பு பண்டைப் பாண்டி மக்கள்பால் பதிந்திருந்தது என்னின், அது பொய்யுரையுமன்று புனைந்துரையுமன்று. அஃதாவது ஆள்வோர்கள் தங்குறைகளை யெல்லாம் தீர்த்துக் "காவல் குழவி கொள்பவரின் ஓம்புமதி" யென்பதைப் பின்பற்றிப் பெற்ற தாய் பிள்ளைகளைப் பேணுமாறு போலப் பேணி வரும்போது, ஒன்றிரண்டு சிறிய கருத்து வேறுபாடுகளைப் பெரியனவாக்கிக்கொண்டு சட்டத்தை மீறி நடப்பது, குழப்பம் விளைவிப்பது, கடமை செய்யத் தவறுவது, வரி செலுத்த மறுப்பது முதலான தவறுகளுக்கு அவர்கள் இடம் தந்தார்கள் இல்லை. சுருக்கமாகச் சொல்லப்போனால் அந்நாளைய மன்னருக்கும் மக்களுக்கும் இடையிலிருந்த தொடர்பு, பெற்றோர்களுக்கும் பிள்ளைகளுக்கும் இடையில் இருந்த தொடர்பு போன்றது என்றால் அது மிகையாகாது. அதனாலேயே 'நன்னடை நல்கல் வேந்தற்குக் கடன்' என விதிக்கப் பெற்றது.

கூழ்: கூழ் என வள்ளுவர் குறித்தது உணவினுக்கு அடிப்படையாகிய விளைவைக் குறிக்கும். இதில் அரசன் மனம் செலுத்துதல் வேண்டும். இவ்விளைவைப் பெருக்குதற்காக நீர் நிலைகளைப் பெருக்கிய அரசர் உயர்வடைவர்; அங்ஙனம் பெருக்காத அரசர் தாழ்வர் என ஒரு புலவர் கூறுகின்றார். விளையுளைப் பெருக்கி ஓரரசன் தன் நாட்டை வளம்பெறச் செய்வானாயின், வேற்று நாடுகள் அவன் குடைக்கீழ்த் தானே வந்து பொருந்தும் என்பது ஆன்றோர் அருண்மொழி.

உணவின் சிறப்பைக் குடிமக்கள் உணர்ந்திருந்தது போலவே மன்னர்களும் உணர்ந்திருந்தனர். அதனால் உழவுத் தொழிலுக்குத் தம்மாலான உதவிகள் யாவும் செய்து வந்தனர் தமிழ் வேந்தர்கள். மேலும் வீட்டிலும், தன்னரசும், வேற்றரசும், நால்வாயும் (யானை) கிளியும், விளைவின்மையும், பெருமழையும், பெருங்காற்றும் ஆகிய இவ்வெட்டும் உழவுக்குக் கேட்டினைப் பயப்பன என அவர்கள் உணர்ந்தனர். இவ்வெண்வகைக் கேடுகளில் தம் அறத்தாலும் மறத்தாலும் ஒழிப்பனவற்றை ஒழித்து உணவுப்பொருள் பெருக உதவுவர். வேற்றரசரையும், நால்வாயையும் தம்மறத்தாலும், ஏனையவற்றை அறத்தாலும் இல்லாமல் செய்வர். அரசர்கள் செங்கோலினராகி நாடாள்வரேல் அளவான மழை பெய்யும் அளவான காற்று வீசும்; தீமை பயப்பன மாயும் 'இயல்புளிக் கோலோச்சு மன்னவன் நாட்ட, பெயலும் விளையுளுந் தொக்கு' என்பது தமிழ்மறை. துலாக்கோலைத் தூக்கி வாணிகர் தம் தொழில் செய்தற்கும், செங்கோல் தாங்கி மன்னர்கள் நாடாள்வதற்கும், பிரப்பங்கோல் தாங்கி ஆசிரியர் கற்பித்தற்கும் உழவர்கள் தாற்றுக்கோல் தொழிற்பட வேண்டும் என மன்னர்கட்கு உணர்த்தினர் முன்னைய பொய்யா மொழிப் புலவர்கள். "உழவினர் கைம்மடங்கி னில்லை விழைவதூஉம், விட்டேமென் பார்க்கு நிலை" என எடுத்துக்கூறினர். அதனால் வாய்க்கால் வகுத்தும், குளந்தொட்டும், மழை பெய்தற்குதவியாகக் காவளர்த்தும் உழவர்களை வேந்தர்கள் ஊக்கிவிட்டனர். உழவையும் வாணிகத்தையும் பண்டைத் தமிழரசர் முறையே வலக்கண்ணும், இடக்கண்ணுமாக எண்ணினர். இவ்விருதொழிலின் மக்களையும் அவர்கள் தம்மினமாகக் கொண்டனர். அதனால் உழவு ஓங்கியது. வாணிகம் வளர்ந்தது.

அமைச்சு: அமைச்சு என்பது அரசாட்சியை நடத்துதற்கு உதவியாய் அரசரைச் சார்ந்து பணியாற்றும் அறிஞர்களைக் குறிக்கும். அரசன் நாடுகாவல் பொருட்டுச் செய்ய

வேண்டிய அலுவல்களைப் பிரிவுகளாகப் பிரித்து அப்பிரிவுகளை முறையே பலரிடம் ஒப்படைப்பான். இப்பணிகளைச் செய் பவர்களே அமைச்சர்கள். அமைச்சர்கட்கெல்லாம் தலைமை தாங்கி முதலமைச்சர் அல்லது தலைமையமைச்சர் என ஒருவர் செயலாற்றி வருவார். இத்தலைமையமைச்சர் அரசனுக்கு அடுத்தபடி எல்லாப் பொறுப்புகளையும் உடையவர். வேற்று நாடுகளுக்குத் தூது செல்லும் பணி, அமைச்சர்கட்கே பெரும் பாலும் கொடுக்கப்படும். இத்தூதுவர் இருவகைப்படுவர். ஒரு வகையார் அரசரிடம் எல்லா உரிமையும் பெற்றுத் தூதிடை ஆற்றவேண்டிய செயலைக் கால இடங்கட்குத் தக்கவாறு தாமே தமது அறிவால் உரிமையுடன் செயலாற்றுபவர். இவர்கள் சிறந்த தூதுவர் ஆவர். மற்ருெரு வகையார் தாமாக ஒன்றும் செய்யாமல் அரசனேவியபடி செயல் புரிவர். இவர்கள் தாழ்ந்தோர்.

இவ்வமைச்சர்கள் நுண்ணறிவும் நூலறிவும் படைத்த வராக இருப்பர். இவ்வமைச்சர் முதலாய அரசியல் வினை ஞர்கள் அறவழி, பொருள்வழி, இன்பவழி, உயிரச்சவழி என்னும் நால்வகை வழிகளால் தக்கார்கள் வழியாக அன்று தேர்ந்தெடுக்கப்பெற்றனர். உயர் குடியிற் பிறந்தோராக, செருக்கு முதலான குற்றமும், சோம்பலும், மறதியும், செயல் களில் தவறுதலு மென்பன அற்றவராகத் தமக்கு வடு வருமோ என அஞ்சுபவராகப் பார்த்தும், சுற்றத் தொடர்பு உள்ள வராக நோக்கியும், குற்றநற்றங்களை யாராய்ந்து அவற்றுட் கூடுதலாக எதனை உடையவர் என எண்ணியும் அமைச்சர் முதலாயினுரைத் தேர்ந்தெடுத்துத் தொழிலில் அமர்த்தினர். இவ்வாறு இல்லாமல் இனம் மதம் தொண்டுகள் குறித்து அன்புகொண்டு திறமையற்றவரை அல்லது தீச்செயல் உள்ள வரை அலுவலில் அமர்த்தல் அந்நாளில் இல்லை. அங்ஙனம் பொறுக்கி அலுவலில் அமர்த்தினுல் அலுவல்கள் கெடும்;

இழப்பு நேரும். இவற்றை மக்கள் கண்டு திறமை உள்ளதையும் இல்லதையும் கண்டுகொள்ளும் ஆற்றல் இம்மன்னர்க்கு இல்லை. இவர்பால் நடுவு நிலைமை இல்லை. இன்னது செய்யின் இன்னது விளையும் என்னும் எதிர்கால உணர்வும் இவர்க்கு இல்லை என எண்ணுவர்; சொல்லுவர் எனக்கருதித் தக்காரையே தேர்ந்து தெளிந்தனர். அதனால் நேர்மை நிலவிற்று. திறமை திகழ்ந்தது. ஆட்சி தழைத்தது. மக்கள் நம்பிக்கை ஓங்கியது. அமைச்சர்களும் தொழில் செய்வதில் உறுதிப்பாடும், குடிமக்களைக் காக்கும் உணர்ச்சியும், அறநூல்களைக் கற்றுச் செய்வன தவிர்வன அறிதலும், விடா முயற்சியும், தமக்கென வாழாது பிறர்க்கென வாழும் பெற்றியும் கொண்டவராக இருந்தனர்.

நட்பு: இது அரசனது நட்பினரைக் குறிக்கும். கல்வி கேள்விகளிலும் நற்பண்பு நற்செயல்களிலும் சிறந்த சான்றோரையே அரசன் தன் நட்பினராகக் கொள்ளல் வேண்டும். இத்தகைய நட்பினர் அரசன் மனம் புண்படுமாறு சில வேளைகளில் அவனது தவறுகளை எடுத்துக் கூறக்கூடும். ஆயினும் அரசன் அவைகளையெல்லாம் பொறுத்து அவர் சொற்படி நடக்கவேண்டும். அப்படிச் செய்வதால் அவனது குடைக்கீழ் உலக முழுவதும் தங்கும் என நாயனார் கூறுகின்றார். பண்டைத் தமிழ் மன்னர் பலர் இத்தகைய சான்றோர் பலரை நட்பினராகக் கொண்டிருந்தனர் என்பதை இலக்கியங்கள் வாயிலாக நாம் அறிகின்றோம்.

இந் நண்பினர் சாலப் பெரியோராய் இருப்பர். இவர் கல்வி கேள்வி அறிவு ஒழுக்கம் குடிப்பிறப்பு கடவுட் கொள்கைகள் யாவும் ஒருங்கே கொண்ட உரவோராவர். மன்னரைத் தீநெறிவிலக்கி நன்னெறிச் செலுத்தி அரசாட்சியில் பெருந்துணை புரிவர் இந் நண்பினர். நாட்டில் நன்மையும் தீமையும் மாறி மாறி வரும். பெருமழை பெய்யலாம். மழையே

பொய்யாமலும் போகலாம். காற்றும் தீயும் பிணியும் மிகலாம், இவைகளை வரு முன்னரே அறிவித்துக் கடவுள்வழிபாட்டாலும் கழுவாய் (சாந்தி)களாலும் நீக்கி உதவுவர். மேலும் பகைவர், கள்வர், உறவினர், அலுவலர்களாலும் தீங்கு பிறக்கலாம். அவற்றை இனிமை, பிரிப்பு, கொடை, ஒறுப்புக் (சாம பேத தான தண்டம்) களால் நீக்க வழிகாட்டுவர். இங்ஙனம் சான்றோர்களால் பெரு நன்மை இருப்பதை அறிந்த பாண்டியரை யுள்ளிட்ட தமிழ் வேந்தர்கள், இவர்கள் விரும்புவன வெல்லாம் செய்து, இவர்கள் தொடர்பைப் பெறுவதற்கு அரிய பேருகக் கருதிக்கொள்வர். பொருளும். படையும், அரணும் ஆகிய இவை களினும் பன்மடங்கு உறுதி தருவது என எண்ணினர். நமக்குத் தக்கார் துணையுள்ளது. நாம் அவர் காட்டும் வழி ஒழுகுகிறோம். ஆதலால் நம் பகைவர் நமக்கு என்ன தீங்கு இழைக்க இயலும் என ஏளன எண்ணங் கொண்டனர். மரத்து அடிப்பக்கத்து இருக்கும் புல் கலப்பையைக் கண்டு அஞ்சுவது இல்லையன்றோ ! அங்ஙனமே பெரியாரைத் துணைக் கொண்ட யாமும் அஞ்சோம் என இறுமாந்தனர். இடித்துரைக்கும் சான்றோர் உரையை இன்சொல்லாகக் கருதினர். அன்பு கலந்து வஞ்சனை கலவாமல் வரும், அவர் வாய்மொழியே தம்மை வாழ்விக்கும் எனமுன்னுளைய மன்னர்கள் மனங்கொண்டனர். இதனுல் மன்னர்கள் அடைந்த நன்மைகள் சாலப் பல.

அரண் : அரண் என்பது பாதுகாவலைக் குறிக்கும். இது தலைநகரின் பாதுகாவலைக் குறிக்கும். தலைநகர்க்குப் பாதுகாவலாக மதில், அதனைச் சுற்றி அகழி, அகழியைச் சூழ்ந்து காவற்காடு இவை அமைந்திருக்கும், மதிலின் மீது சூட்டுக்கள் அல்லது கொத்தளங்கள் என்று சொல்லப்படுகிற அமைப்புகள் உண்டு. இவற்றில் பலகைப் பொறிகள் வைக்கப்பட்டிருக்கும். மதிலின் மேலிருந்து போர் புரிவதற்கான பலவகைக் கருவிகளும் இதில் சேர்த்து வைக்கப்படும். மதிற் பொறிகளாவன, வளைவிற்பொறி, குரங்குப்பொறி, கற்களை வீசும் கவண்,

காய்ச்சிய எண்ணெயை வீசும்பொறி, ஈயத்தைக் காய்ச்சி வீசும்பொறி, தூண்டிற்பொறி, ஆண்டலைப்புட்பொறி, பன்றிப் பொறி, கைகளைப் பெயர்க்குமாறு குத்துதற்குரிய ஊசி முதலியன.

இனி அரணிற் சிலவகை உண்டு. அவை நீரரண், நிலவரண், மலையரண் என்பன. இவை இயற்கையாக வாய்ப்பன. இவ்வரண்கள் உள்ள இடமாகத்தேடி நாடு நகர் அமைப்பது மரபு. பாண்டிய நாட்டின் கிழக்கிலும் தெற்கிலும் இயற்கையான நீர் அரணாக அமைந்துள்ளது. ஒரோருகால் பகைவர் அந்நீர்வழிப் படையெடுத்தாலும் அவரைக் கடற்படைகொண்டு தாக்கி மடியச் செய்வர். 'கடலுண் மாய்ந்த இளம்பெருவழுதி' என்னும் இப் பெயரால் இக் கருத்துக்கொள்ளுவதற்கு இடனுண்டு. பாண்டிநாட்டின் மேல்பால் நெடுஞ்சுவர்போல மலை அமைந்துள்ளது. இது பகைவர்களையுள்ளே புகாதவாறு தடுத்து நிற்பதுடன் பல ஆறுகட்குப் பிறப்பிடமாகவும் அமைந்துள்ளது, "இருபுனலும் வாய்ந்த மலையும் வருபுனலும், வல்லரணும் நாட்டிற் குறுப்பு" என்னும் பொய்யாமொழிக்கு எடுத்துக்காட்டு வையைபாயும் இவ்வளநாடுதான். அம்மலை பலவகை மரங்கட்கும், விலங்குகட்கும் இடமாகி வேறு விளங்குகிறது.

மேற்கூறப்பெற்ற தலைநகரத்து அரண்பற்றிச் சிறிது பார்ப்போம். இந்நாள் அத்தகைய அரண்களில் ஒன்றுகூட இல்லை தமிழ் நாட்டில் நேரில் கண்டு விளங்கிக்கொள்ளற்கு. பாஞ்சைநகரத்து அரண் வெள்ளையர்களாற் பாழ்பட்டுப் போயிற்று. திருவரங்கத் திருக்கோவில், மதுரைக்கோவில், தில்லைக்கோவில் முதலான திருக்கோவில்களின் திருமதில்களைக் கொண்டு, தமிழகத்துத் தலைநகரங்களைச்சூழ இருந்த அரண்களை ஒருவாறு மனத்திற் கற்பனை செய்து கொள்ளலாம். எருமை நாடு எனப்படும் மைசூர்ப் பகுதியில் திருக்கோவிலை

நடுவண் கொண்ட சீரங்கப்பட்டணம் இன்றும் தன் அரண் சிதையாமற் சிறந்திருக்கிறது.

அது நூல்கள் கூறும் முறைப்படியே அமைந்து பண்டை அரண்களின் சார்பாக நின்று அவற்றின் அமைப்பை அறிவித்துக் கொண்டு திகழ்கின்றது. அது தானும் இந்நாளில் இல்லையானல், தமிழர்கள் சொல்லும் நகரக்கோட்டைகள் வெறும் மனக் கோட்டைகளோ என்று பலர் ஐயப்படுவார்கள்.

பொதுவாக அரண்கள் வலிமை பெற்ருருக்கும் பயன் படும்; வலிமையற்ருர்க்குப் பயன்படுமென்பது சிலருக்குப் புதுமையாகத் தோன்றலாம். வலியற்ருர்க்குப் பயன்படும் என்பது எல்லாராலும் ஒப்பப் பெறுவது. வலிமை பெற்ருர் அது குறித்துத் தம் பகைவரை வலிதொலைக்க எண்ணி அவர் மேற் படையெடுத்துச் செல்வர். அப்போது அவர் மகளிரையும், பொருள் முதலியவற்றையும் பிறரொருவர் கவர்ந்துகொண்டு செல்லாமல் பேணிவைத்துக் காப்பதற்கு அரண் பெரிதும் உதவும் அன்ருே? இப்போது தெரியும் அதன் இன்றியமையாமை. இனி வலிமையற்ருர்க்கு அரண் உதவியாதல் வெளிப்படை. அவர்க்கு அரண் இல்லையாளுல் கடலிற் செல்லும் போது மரக்கலம் உடைந்து போளுல், அதன்கண் உள்ளவர் தப்பும் வழிகாணுது தவிப்பது போல வருந்த நேரிடும். ஆதலால் அவர்க்கு அது காவலாக அமைகிறது என்பதாம்.

அரண் உயரமும், அகலமும், திண்மையும், பகைவர் நெருங்க முடியாமையுமாகிய இயல்புகள் கொண்டதாக இருக்கும். அரண் பற்ற வருவோர் ஏறி உள்ளே செல்வதற்கு உதவியாக ஏணி முதலியன கொண்டுவருவர். அவ்வேணிக்கும் எட்டாத அளவு உயரமாக அரண் அமைந்திருக்கும். அது மட்டும் அமைந்துவிட்டால் போதாது அரணுக்கு. அகலமும் அமைய வேண்டும். அவ்வகலந்தானும் அடியகலமும், தலை

யகலமும் என இரு வகைப்படும். அரணுக்கு அடியகலம் இருந்தால் அதனை அழிக்க வந்தவர் அடிப்பகுதியைத் தோண்டி யழிக்க முடியாது. தலையகலம் இருந்தால், அவ்வரண் காப்போர் அதன் மேல் நின்று பகைவர்களைத் தாக்கி முதுகு காட்டியோடச் செய்வதற்கு இயலும். மேலும் கருங்கல்லும் செங்கல்லுங்கொண்டு அமைக்கப்பட்டு அரண் திண்மை பெற்றுத் திகழ்வதாய் வேறு இருக்கவேண்டும் அவ்வாறு இருப்பின் வளைத்துக்கொண்டிருக்கும் பகைவர்கள் அரணை இடித்தல், தோண்டுதல் முதலான அழிவு வேலைகள் செய்ய வழியற்றவராய்த் திகைப்பர். அடுத்து இத்துணைச் சிறப்பு யாவும் அமைந்திருந்தால்கூடப் போதாவாம். யாம் மேற்கூறிய கருவிகள் பலவும் பொருத்தப்பட்டிருக்க வேண்டுமாம். அவ்வாறு இருந்தால் பகைவர்கள் நெருங்குதலையும், தீண்டுதலையுமே செய்ய இயலாதவராய்த் திரும்புவர் அல்லது மாய்வர். எனவேதான் பண்டைய மன்னர்கள் அரணை இந்தத் திறமெல்லாம் அமைய எடுத்தனர்.

அன்றியும் அவ்வரணத்து அமைப்புப்பற்றி இன்னுஞ் சில முறைகளும் மேற்கொள்ளப்பெற்று வந்தன. ஆற்றல் மிக்க பகைவர்களாயிருந்து பல நாட்களாக முற்றுகையிட்டிருந்தாராலும், அதனால் எவ்வகை இடையூற்றுக்கும் இடமின்றி, மக்கள் இனிது வாழத்தக்க இடம் மிகுதியும் இருக்குமாறு அமைப்பர். அங்ஙனம் அமையும் அரணில் ஒரு சிறு பகுதியே படைகளை நிறுத்திக் காக்கத் தக்கவாறு பார்த்துக்கொள்ளுவர். வாயிலும் வழியுமாகிய இவ்விடங்களில் மட்டும் காவல் அமைந்தால் போதும்; ஏனைய இடங்கள் மலை, காடு, நீர்நிலை என்னும் இவைகள் இயல்பின் அமையுமாறு ஏற்ற இடமாகத் தேடிக் கண்டு அரண் அமைத்தல் உண்டு. அரணில் எல்லாப் பகுதியுமே படைகள் நிறுத்திக் காக்குமாறு இருந்து விடுமாயின் உள்ள படைகள் இதனைக் காப்பதற்கு மட்டுமேதான் ஈடுபடுத்தப்படும். எதிர்த்துத் தாக்கிப் பகைவர்களைப பின்வாங்கச்

செய்யப் படை இல்லாமற் போகும். அதனாலேயே தாக்கும் இடம் சிறியதாக இருக்கும்படியும், உள்ளிடம் அகலமாக இருக்கும்படியும் செய்வர். இப்படியெல்லாம் தமிழ்வேந்தர் தலைநகரங்கள் அரண்கள் பெற்றுத் திகழும். இன்னும் சில தலைநகர்களில் சிதைந்த அரண்கள் தென்படலாம். மதுரையில் அரண் இருந்தமைக்கு உரிய அடையாளம் இல்லையென்றாலும், அவ்வரண் இருந்ததைப் புலப்படுத்தும் சில பெயர்கள் உள்ளன. வடக்கு வாயில், தெற்கு வாயில், கீழை வாயில், மேலை வாயில் என இந்நாளும் மதுரை மக்கள் சொல்லி வரு கின்றனர். வாயிலை வாசல் என்பர் கொச்சையாக. இப் பெயர்கள் அன்று இருந்த அரணின் வாயிலைத்தானே குறிக்கும். கணவனுடன் கீழை வாயில் வழியாக மதுரை அகநகரம் வந்த கண்ணகி, கோவலனை இழந்து, வருத்தம் மிக்கு, நிலை பிறழ்ந்து, வளையல்களை யெல்லாம் தகர்த்து மேலை வாயில் வழியாகவே வெளிப்போந்தாளெனச் சிலப்பதிகாரம் சொல்லும்.

இவற்றைத் தவிர அகழியை எதிரிகள் எளிதில் கடந்து வாராதவாறு அதில் முதலை, சுறா, எட்டுக்கால் மீன் முதலிய வைகள் விட்டு வைக்கப்படும். இன்னும் காவற் காட்டி டத்தும், கால்களை இறுகப் பற்றிக்கொள்ளும் இடுக்கிப் பொறி, முள்வேலி முதலியன அமைக்கப்பட்டிருக்கும்.

இவற்றுள் மதிலைச் சூழ்ந்து கிடக்கும் அகழி கடலோ என ஐயுறுமாறு ஆழமும் அகலமும் நீளமும் கொண்டு விளங்கும். இவற்றில் நீர்வாழ் விலங்குகள் கிடத்தலோடு விழுந்தால் விழுந்தவர்களை உள்ளே விழுங்கிக் கொள்ள (அமுக்கிக் கொள்ள)க்கூடியபடி தாமரை முதலான கொடிகளும், பாசி களும் கிடக்கும். விழுந்தவர் நீந்தவோ நிற்கவோ இயலாது, அமுங்கி இறத்தலைத்தவிர, பிணத்தையும் அப்புறப்படுத்த இடம் இராது. ஆனால் அங்குள்ள விலங்குகள் பிணம் முதலியன அழுகி நாற்றமெடுக்கும் அளவுக்கு விடுதல் இல்லை.

அரைகுறையாக உயிருள்ளபோதே அவை தம் பசியைத் தணித்துக்கொள்ள ஒன்றி னென்று முந்தும். இவ்வாறெல்லாம் இருக்குமென்பது பகைவர்கட்கும் தெரியும். எனவே தான் அவர்கள் இவ் வகழியைக் கடப்பதற்குப் படகு போல்வன வற்றையும், அரணில் ஏறுவதற்கு ஏணிகள் போல்வன வற்றையும் உடன் கொண்டு வருகுவர். இக் கருவிகளை மதின் மேல் உள்ளவர் அங்கு இருந்த வண்ணமே சிதைக்க முற்படுவர். வந்தவர்களிற் பலர் அகழியைக் கடந்துகொண்டிருக்கும்போது அழிக்கப்படுவதும் உண்டு. மதிலை நெருங்கிக் கொண்டிருக்கும்போது மாய்க்கப்படுவதும் உண்டு. நகரத்தில் உள்ளவர் வெளிவரவும், வந்து உள்ளே செல்லவும் உதவும்படி மரவழி (மரப்பாலம்) அகழியில் அமைக்கப்பட்டிருக்கும். அவ்வழி இரவுக் காலத்தும் போர்க்காலத்தும் உள்ளே எடுத்துவைக்கப் பெற்றுவிடும். அங்ஙாளைய அகழியைக் கொஞ்சமாக நினைப்பு மூட்டுவதாக உள்ளது பாழ்பட்டுச் சிதைந்து பெரும்பகுதி தூர்ந்தும்கூட அச்சம் தரும் நிலையிலுள்ள நகரத்து அகழி.

இவ்வகழியைச் சூழ்ந்து அமைவதே காவற்காடு. இது முதியனவும், பொந்து விழுந்தனவும், அடர்ந்த கிளைகளை யுடையனவுமாகிய மரங்கள் பலவற்றைக் கொண்டிருக்கும். அவற்றின் பொந்துகளில் எல்லாம் போர்க்கருவிகள் மறைத்து வைக்கப்பெற்றிருக்கும். அக்காட்டின் இடையிடையே குடிசைகள் அமைத்துக்கொண்டு மறவர்கள் வாழ்ந்து வருவர். இக்காடு அகழிக்கும் அடுத்ததாகத் தலை நகரத்தைச் சூழ அமைந்து தோன்றும். ஆதலால் எத்திசையிலிருந்தும் பகைவர் படையெடுத்து வந்து அகழியையும் அணுகமுடியாது. காட்டிலேயே இக்காவல் வீரர் பகைவர்களை மடக்கிப்போர் செய்து மீளச்செய்வர்; அல்லது மாளச் செய்வர். வந்தவர் வலியவராய் இருந்து வெல்லுவாராஞல் அகழியிலும் மதிலுமாக அவரோடு போர் தொடங்கி அழிக்கப்பார்ப்பர். இக்காடும் அகழியும் அரணுமென்னும் இவை யெல்லாம்

அணுக்குண்டும், நீர்க்காற்றுக் குண்டும், வான ஊர்தியும் முதலாயின கண்டுபிடிக்கப்படாத முன்னாட்களில் தலைநகர்களைக் காப்பதற்குப் பெரும் பயனளித்து வந்தன. இப்பயன் இருத்தல் நோக்கியே பாதலத்தைக் காணும் அளவுக்கு அகழியை அகழ்ந்தனர்; வானத்தைத் தொடும் அளவுக்கு மதிலையெழுப்பினர். இவ்வகையில் மிகப்பெரும் அளவுக்குச் செல்வத்தைச் செலவு செய்தனர்.

நிற்க, அரசன் வேற்று நாட்டுச் செய்திகளை ஒற்றர் வழியாக அறிந்து வந்தான். இதற்கு ஒற்றாடல் என்று பெயர். இங்ஙனம் ஒற்றாடல் செய்யாக்கால் அரசனுக்கு வெற்றி கிட்டாது. ஒற்றர் அரசர்க்குக் கண் போன்றவர். அரசன் இவர்க்குத் தக்க சிறப்புச்செய்து இவர்களை மேன்மைப்படுத்த வேண்டும். ஒரேசெய்தியை ஒற்றர் மூவரால் தனித்தனி அறிந்து மூவர் செய்திகளும் ஒத்திருந்ததாயின் அதையே உண்மையெனத் துணிதல் வேண்டும். என்று நாயனார் கூறுகின்றார்.

மேலே சொன்னதற்கும் சிறிது மேலாக அவ்வொற்றர்கள் பற்றி அறியலுறுவோம். ஒவ்வொருவர் விடும் மூச்சும், அங்கங்குக் கூடிப்பேசும் பேச்சும் அரசர்க்கு ஒற்றர்களால் அறிவிக்கப்படும். இவ்வொற்றர்களைக்கொண்டு அரசர்கள் அரசியல் வினைஞர், ஏனைச் சுற்றத்தார், மாறுபட்ட கொள்கையுடைய மக்கள், கள்வர், பகைவர், என்று இன்னோர் நிலைகளை அப்போதைக்கு அப்போது அறிவர். இந் நாளில் தொலைபேசிகள் போல அந் நாளில் ஒற்றர்கள் அரசர்க்குச் செய்தித் துறையில் உதவி வந்திருக்கின்றனர் என்பது திருக்குறள் முதலான செந்தமிழ் நூல்களால் நன்கு விளங்கும். செய்தியை அறியச்செல்லும் ஒற்றர்கள் துறவிகள், பெண்கள், இரவலர்கள், வழிப்போக்கர்கள், பித்தர்கள், முதியவர்கள் முதலானவர்களைப்போல வடிவங்கொண்டு, தாம் செல்லும்

இடத்தில் உள்ளவர்கள் சிறிதும் ஐயம்கொள்ளாதவகையில் செல்லுவர். சென்ற இடங்களில் அங்குள்ளவர்கள் சினந்து நோக்கினுலும் சிறிதும் அச்சம் இன்றி இருப்பர். ஐயுற்றுப் பகைவர் தம்மைப்பற்றி இனிமை, பிரிப்பு, கொடை, ஒறுப்பு (சாமபேத தான தண்டம்) களால் தம்மனத்துக்கொண்ட. வற்றை அறிய முற்பட்டாலும் இம்மியும் வெளிவிடார். இவ்வாறு சென்று அறிந்த செய்திகளை இவற்றின் தோற்றம் விளைவு முடிவு இவை என ஐயப்பாட்டிற்கு இடமின்றி விளங்கிக்கொள்ள வல்லுநராக இருப்பர். இவ்வொற்றர்களில் பல பிரிவினர் இருந்தனர் போலும். பிறர்விடும் மூச்சினையும் பேச்சினையும் கொண்டு செய்திகளை அறியும் இவர்களில், ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை அறிந்துகொள்ளாதவாறு இவ்வொற்றர்களைப் பணி செய்விக்க வேண்டுமாம். என்னே ஒற்றர் திறமை! இவ்வாறு உயிரையுங் குறித்து அஞ்சாது செய்திகளை ஒற்றி அறிந்து வரும் இவர்கட்கு மன்னர்கள் மாபெரும் பரிசுகள் வழங்கி வந்துள்ளனர். பரிசு வழங்கும் போது பலர் அறியலாகாத முறையைப் பண்டை மன்னர் மேற்கொண்டிருந்திருக்கின்றனர். பலர் அறியப் பரிசு வழங்கினுல் இவனுக்குப் பரிசுவழங்குவது ஏன்? இவன் அரசியலில் ஆற்றிய திறமென்ன? என ஒருவரையொருவர் கேட்பர். ஒருவர்க்கு ஒருவர் மறுமொழி பகர்வர். இவர் ஒற்றரென யாவரும் அவரைக் கண்டதும் தம் பேச்சை நிறுத்துவர் அல்லது தலை மறைவு கொள்வர். இச் செயலால் செய்திகள் அறிவது தடைப்படலாம். அதனுல்தான் மறைத்துப் பரிசு வழங்கி வந்தனர். இதனுல் ஒற்றர்கள் தம் உழைப்பு மதிக்கப் படுகிறது என்று அறிந்து மகிழ்ந்து மேலும் முனைந்து ஒற்றி வருவார். மக்களும் ஒற்றர்களை அறிந்துகொள்ள முடியாது போகிறது. இக்காலத்தில் ஸ்காட்லாந்து ஒற்றர்கள் இத் திறமை முழுதும் வாய்ந்து உலகில் பெரும் புகழ் பெற்று விளங்குதல் வெளிப்படை.

இனி, அரசனது செங்கோன் முறைமையைப் பற்றிய சில கருத்துக்களைக் கூறுவோம். வேல் அன்று மன்னவனுக்கு வெற்றி தருவது; அவனது செங்கோல் அதனைத் தரும் என்றார் வள்ளுவனார். அதற்கேற்பச் சங்கத்துச் சான்றோர் ஒருவர், அரசன் யானைப்படை, குதிரைப்படை, தேர்ப்படை, காலாட்படை என்னும் நான்கிலும் மேம்பட்டவன் ஆயினும், அவனது கொற்றம் அறநெறியையே காரணமாகக் கொண்டதாகும் என்கின்றார். அரசன் மக்களைத் தன்னைச்சார்ந்தார், அயலவர் என்னும் வேற்றுமை பாராட்டாது நடுவு நிலைமையினின்று முறை வழங்க வேண்டும். நாட்டில் மழை பெய்யாது ஒழிந்தாலும் பஞ்சம் நேர்ந்தாலும், நோய் முதலிய துன்பங்கள் நேர்ந்தாலும் குடிகள் அரசன் செங்கோலைப் பாதுகாவாமையாலேயே இவை நேர்ந்தன வெனக்கூறி அவனைத் தூற்றுவர். ஆதலால் நாட்டில் இத் துன்பங்கள் நேராதவாறு அரசன் பாதுகாத்துக் கொள்ள வேண்டும். தமிழ் வேந்தர் இச் செய்திகளை எல்லாம் நன்கறிந்திருந்தனர். அதற்கேற்பத் தாமும் சரிவர நடந்து வந்தனர் என்பதற்குச் சான்றுகள் பலவுள.

ஒரு பாண்டிய அரசன், உலகம் நிலை பெற்றருத்தற்குக் காரணமாகச் சிலவற்றைக் கூறுகின்றான். அதினின்று நன்னடக்கையைப்பற்றிய அவனது கருத்துக்கள் விளங்கும்.

"இவ்வுலகத்தில் சிலர். வானுலகத்து அமுதத்தைப் பெற்றாலும் அது மிக இனிதென்னும் காரணத்தால் தாமேயுண்ணாது பிறருக்குக் கொடுத்துத் தாமும் துய்க்கின்றார்கள்; மேலும் அவர்கள் சினம் கொள்ளார்கள்; சோம்பலை மேற்கொள்ளார்; பிறர் அஞ்ச வேண்டியவைகளுக்கு அஞ்சுவர். புகழ் கிடைத்தால் உயிரையும் கொடுப்பார். பழி கிடைத்தால் உலகம் முழுவதையும் தந்தாலும் பெற்றுக்கொள்ளார். இங்ஙனம் தங்நலம் கருதாது பிறர் நலம் கருதுவோர் இருக்

இன்றமையால் அன்றோ உலகம் நிலைபெற்றிருக்கின்றது!" என்பது.

மற்றொரு பாண்டிய அரசன் தன் செங்கோல் பிழை பட்டது என்று அறிந்ததும் அரியணைமீதிலிருந்து கீழே விழுந்து இறந்து பட்டான். இச்செயலை வியந்து சேரன் செங்குட்டுவன் என்னும் அரசன், "தான் செங்கோலினின்று தவறிய செய்தி வேற்றரசன் காதிற் படுமுன் அவன் இறந்து பட்டானாதலால் அவனது பழுதுபட்ட செங்கோல் மீண்டும் செம்மை யடைந்தது. கொடுங்கோலுக்கு அஞ்சிக் குடிகளைப் பாதுகாத்தற்குரிய அரச குடியிற் பிறத்தல் துன்பமல்லது மேன்மை பெற்றதன்று" என்றான்.

இன்னும் ஒரு பாண்டிய அரசன் தான் பகைவரைத் தவறாது வெல்லுவதாக வஞ்சினங் கூறிய காலத்து, "நான் அங்ஙனம் செய்யேனாயின், எனது குடிகள், கொடியன் எமதரசன் என்று எனது குடியைப் பழிதூற்றுமாறு கொடுங்கோலனாக ஆவேனாக" என்கின்றான்.

நிற்க, அரசர் ஒரோருகால் நிலைதவறி நடந்தாராயினுஞ் சான்றோர் அவர்களை அச்செயல் புரியாது தடுத்துக் கடுமொழியாலும் அறிவு புகட்டி வந்தனர். அக்காலத்து, அரசர் சினங்கொண்டு அவர்களைத் துன்புறுத்தாமல் அவர்களது மொழிகட்குச் செவிசாய்த்துத் தாம் நல்வழியில் நடந்து வந்திருக்கிறார்கள்.

முழுமுதற் பரம்பொருளான இறைவனே இவ்வுலகத்து மன்னவன். அவன் பணியாளரே நாம். நமது காவல் தவறினால் அவ்விறைவன் நம்மையும் ஒறுப்பான். நம்குடி வேருடன் மடியும் என்னும் அச்சவுணர்ச்சி அக்கால மன்னரிடையே பொதுவாக இருந்ததுண்டு. அதனாலேயே தம் காவல் அலுவலரையும் நம்பாது மாற்றுருவில் தாமும் காவல் காத்து

வந்துள்ளனர். மேலும் தாம் முறை செய்யாமையாலும், குறை தீராமையாலும் தம் குடிமக்கள் கண்ணீர் வடித்து அழுதாலே போதும், தம் செல்வம் குறைவதற்கும், தம் வாழ்நாள் சிதைவதற்கும் என்று கொண்டு அவர்கள் அஞ்சினர். உறங்கும்போதும் தம் உலகங்காக்கும் ஒளி ஒழியும் என்று மன்னர் உன்னினர். தம் ஆட்சிமுறை தவறுமாயின், பருவ காலம் தவறும் என்பதும், ஆவால் வரும் பயன் குன்று மென்பதும், அந்தணர் தம் நூல் மறப்பார் என்பதும் அவர்கள் கொண்ட கருத்துக்கள். மழை இல்லாது போனல் உயிர் வகைகள் எவ்வாறு துடிக்குமோ அவ்வாறு நல்லாட்சி நிலவாமற்போனல் மக்கள் துடிப்பர் என்பது அவர்கள் அறிந்த செய்தி. செங்கோன்மை இல்லாத நாட்டிலே மக்கள் செல்வ ராக இருப்பது சிரமழிவுதான் என்று உணர்ந்திருந்தனர். எனவே தான் தாங்கள் குடிதழீஇக் கோலோச்சினர்கள். அவர்கள் காவலால் அவர்கள் மக்கள் எவரும் நலியவில்லை. தாமும் நலிந்திலர். தம் மக்கள் பால் குற்றம் தோன்றின் அக் குற்றத்தினின்றும் அவர்களைக் காத்தற்குப் பல வகையான் முயன்றுள்ளனர். தாம் அரசியல் நூலறிவு பெற்றிருந்தா ராதலால் அக்குற்றத்தையும், அதற்குரிய ஒறுப்பினையும் கூடுதல், குறைதல் இன்றித் தாமாக ஆராய்ந்தனர். அதன் மேல் நில்லாது தமது முடிபு தக்கதா என ஒப்பிட்டு அறிவ தற்குத் தம் அவையிலுள்ள நூலாராய்வு படைத்தவரோடு கலந்து கேட்டுத் தெளிந்தனர். இக்காலங்களில் இன்னர், இனையர் என எவர்பாலும் இரக்கங்காட்டுதலின்றிக் கொலை செய்ய வேண்டிய அளவு பெருங்குற்றம் செய்தவர்க்குக் கொலைக் தண்டமும் கொடுப்பதில் அவர் அஞ்சினரில்லை; அதனைத் தமது கடமையாகக் கொண்டனர்.

மென்மையாகத் தண்டிக்கும்போதும் குற்றஞ்செய்தவர் கண்டு அஞ்சும்படியாக முகத்திற் சினத்தை வருவித்துத் திரட் டிக் காட்டிக்கண்களை உருட்டி விழித்து, மீசைகளைத் துடிக்கச்

செய்து, கீழுதட்டை மேல் வரிசைப் பற்களால் கடித்துக் கொண்டு கல்லெறிந்தாற்போலப் பேசி, இவ் ஒரு முறை தப்பினுற்போதும் இனியொரு போதும் தவறே செய்யோம் என அவர் நினைக்கும்படியும், ஏது, பார்த்தால் இந்த முறையிலேயே நமது இறுதி வந்துவிடும் போலும். நாம் எங்கே தப்பப் போகிறேம் என அவர் முடிவு செய்யும்படியும் நடித்துத் தண்டிக்கும்போது தந்தை மகனைத் தண்டிக்குமாறு போல மெல்லத் தண்டிப்பர். இம்முறையால் குற்றஞ்செய்வோர் இனியுஞ் செய்தால் தப்பமுடியாது என எண்ணித் திருந்தி விடுவர். அதே வேளையில் அரசன் தம்மேல் காட்டின அன்புடைமையையும் மறவார். இவ்விரண்டாலும் அவர் என்றுமே மீளத் தவறு செய்யார். தமிழரசர் தம் மனைவி மக்கள் முதலான நெருங்கின உறவினர் செய்யினும் தண்டிக் கும்போது அவ்வுறவு முறையை எண்ணுர். தமது செயல் நன்னேக்கில் நிகழ்ந்திருந்தாலும் அதனைப் பிறர் நிகழ்த்தின தாகத் தவறுபட நினைத்த மக்கள் அதற்குத் தண்டனை தர வேண்டு மென்ருலும் அது கேட்டுத் தம்மையும் தண்டித்து இருக்கின்றனர்.

இதனைக்கண்ட பரிமேலழகர் "இறைகாக்கும் வையக மெல்லாம்" என்னும் அருமை தமிழ் மறைப்பாடலில் "முட் டாமற் செலுத்தியவாறு மகனை முறை செய்தான் கண்ணும் தன்கை குறைத்தான் கண்ணுங் காண்க" என விளக்கந் தந்தார். மகனை முறை செய்தலும் தன்கை குறைத்தலும் எளிய செயல்கள் அல்ல. ஆனல் மகன் தன்னின் வேருயவன். தன் செங்கோலுக்காக அவனையும் முறை செய்யத் துணிவு பிறக்கும் சிலருக்கு. அவ்வாறு துணிவு பிறந்ததும் செந்தமிழ் மன்னன் ஒருவனுக்குத்தான். அதனைவிட அரிய செயல் தன் கை குறைத்தல் என்பது. 'கை' தன்னுடன் ஒன்ருனது. அதனை வெட்டுவதால் நோவு பொறுக்க முடியாது போவ துடன் உயிரையும் பொறுக்க (சுமக்க) முடியாது போதல்

நேரிடும். இது தெரிந்தும் பாண்டியன் ஒருவன் அங்ஙனம் தன்னை ஒறுத்துக் கொண்டான் என்றால் அவனுக்குச் செங்கோலில் உள்ள ஆர்வந்தான் அவ்வாறு செய்யத் தூண்டிற்று என்று கொள்ளவேண்டும். இவ்வாறு பாண்டியர் ஆட்சி பெயருக்கும் செயலுக்கும் ஏற்ப அன்று குடியரசாகத் திகழ்ந்தது இதுவரை சொன்னமையால் விளங்கும்.

இனிப் போர் முறையைப் பற்றிச் சிறிதாராய்வோம். போர்முறை: 'உள்ளதே போதும்' என அரசன் சோம்பியிராமல் மேலும் மேலும் முயலும் முயற்சியுடையனாய்த் தன் ஆட்சியைப் பெருக்கித் தானே யாவரினும் மேம்பட்டவன் என்பதை நிலை நாட்ட வேண்டும் என்னும் ஒரு கருத்துப் பண்டைக் காலத்து இருந்தது. இதுவே பண்டைக் காலத்தில் போருக்கு அடிப்படையா யிருந்தது என்பது மிகையாகாது. இஃதன்றிப் பிறர் நாட்டைக் கவர்தல், மகளைக் கொடுக்க மறுத்தல் போன்ற வேறு சில காரணங்களும் போர்க்கு ஏதுவாயிருந்தன.

பண்டைக் காலத்தில் போர் ஒரு கலையாகக் கொள்ளப் பட்டது. அதன் இலக்கணத்தைப் புறப்பொருளிலக்கணம் என்பர். தொல்காப்பியம், பன்னிரு படலம், புறப்பொருள் வெண்பாமாலை இவை அவ்விலக்கணத்தை விரித்துரைக்கின்றன. அவற்றை விரிக்கிற் பெருகுமாதலால் அவற்றிற் கண்ட கருத்துக்கள் சிலவற்றை ஈண்டுக் கூறுவோம்.

பகைவர் நாட்டில் படையெடுக்குமுன் அரசர் அந்நாட்டு ஊர்களில் உள்ள பசு நிரைகளைக் கவர்வர். அவ்வாறு பசுநிரை கவர்தற்குச் செல்லுதல் வெட்சி எனப்பட்டது,

இங்ஙனம் பகைவர் கொண்டு சென்ற பசு நிரையை மீட்டு வருதல் கரந்தை எனப்படும். பகைவர் மீது போருக்குப் புறப்படுதல் வஞ்சி எனப்படும். அங்ஙனம் படையெடுத்து

வரும் வேந்தனைத் தானும் படையுடன் எதிர்கொண்டு சென்று போருக்கு முனைந்து நிற்றல் காஞ்சியாம். போர் குறித்து வேற்றரசனது ஊரை அடைந்த அரசன் அவ்வூரின் மதிற் புறத்தே நின்று முற்றுகையிடுதல் உழிஞை எனப்படும். உழிஞைப்போர் செய்வார்க்கு எதிராக தமது மதிலைக் காத்தல் நொச்சியாம். இருதிறப் படைகளும் எதிர்த்துப் போரிடுதல் தும்பை எனப்படும். போரில் வெற்றி பெறுவது வாகை எனப்பட்டது. இச்செயல்களுக்கெல்லாம் அவ்வப் பெயர்கொண்ட பூமாலைகளைச் சூடுதல் வழக்கமாம். இதனால் இவர்கள் இன்னாரைச் சேர்ந்தோர், இன்ன செயலைச் செய் தற்காக வந்தவர் என்பது நன்கு விளங்கும்.

போர் புரிய முற்பட்ட போது பெருங்கணி என்பான் அதற்குரிய நற்காலத்தைத் தேர்ந்தெடுத்துக் கூறுவான். அந் நற்பொழுதில் குடையையும், வாளையும் திருவோலக்கமாக வீதியிற் செல்ல விடுவர். இவை முறையே குடைநாட்கோள், வாள்நாட்கோள் என்று சொல்லப்படும், பின்னர்ப் படையைத் திரட்டிப் போருக்கு புறப்படுவர். கொம்பு, முரசு முதலிய வற்றை ஒலித்துக்கொண்டு பள பள வென்று வாள், வேல் முதலிய கருவிகள் மின்னப் பேராரவாரம் செய்து கொண்டு நூறாயிரக் கணக்கானவர், ஆயிரக்கணக்கான யானை, குதிரை, தேர் முதலியவைகளோடு செல்லுதல் மிகவும் அச்சந்தரத் தக்கதா யிருக்கும். இங்ஙனம் செல்வோர், சென்ற இடங் களில் எல்லாம் எதிர்த்தவரைக் கொன்று எதிர்ப்பட்ட பகைவரது ஊர்களை நெருப்பிட்டுக் கொளுத்திக் கொடுமை புரிவர். ஆயினும் ஆனினங்களும், ஆனியல்பு கொண்ட பார்ப்பன மக்களும், பெண்மக்களும், பிணியுடையாரும் பிதிர்க் கடன் கழித்தற்குப் பிள்ளைகளைப் பெறாதவரும், ஆண்டில் இளையரும், இறப்ப முதியரும் ஆகிய வலியற்றார் தத்தமக்குரிய பாதுகாப் பிடங்களைத் தேடியடைக என முன்னமேயே பறை சாற்றப்படு மாதலால், பெரும்பாலும் பொதுமக்கட்கு அழிவு இராது.

அங்ஙனம் பாதுகாப்பிடங்களுக்குச் செல்லுபவர் விலையுயர்ந்த தமது பொருள்களையும் கொண்டு சென்று விடுவர். ஆதலால் பொருட் சிதைவும் மிகுதியுமிராது. ஆனால் குடியிருப்பிடங் கட்கு மட்டும் பெருஞ் சிதைவு நேரும்.

நொச்சி, உழிஞைப் போர்கள் மிக்க அச்சமானவை என்று கூறல் வேண்டும். இப்போரில் முற்றுகையிடுவோர் அகழியைக் கடக்கும் போதும், அதனைக் கடந்து மதில்மேலே ஏறும் போதும் பெருஞ் சிதைவு பெறுவர். மதில் மீதுருந்து விடாது அம்பு மழை அவர்கள் மீது பெய்யும். கவண்பொறி கற்களை அவர்கள் மீது வீசும். இன்னும் காய்ச்சிய எண்ணெயும், ஈயக் குழம்பும் அவர்கள் மீது ஊற்றப்படும். மதில்மேல் ஏணி வைத்து ஏறுவர். அவ்வாறு ஏறுங்கால் ஏணிகள் கீழே தள்ளப்பெறும். சென்றெறிசிரல் என்னும் சிச்சிலிப்பறவைப் பொறியிலுள்ள நாணகத்தாலான பறவை தன் கூரிய மூக்கால் அவர்கள் மண்டையைப் பிளக்கும். தூண்டிற் பொறி அவ் வீரர்களை மீன்போல் மேலே தூக்கிச் செல்லும். அங்கு அவர்கள் கீழே விடப்பட்டதும் கொல்லப்படுவர். எல்லா வற்றிற்கும் தப்பி மேலேறி மதிலின் மீது கையை வைத்ததும் ஊசிகளால் அவர்களது கைகள் குத்தப்படும். இதற்கும் தப்பி மேலே சென்றால் அங்குள்ள பன்றிப் பொறி, குரங்குப் பொறி, பேய்ப் பொறி இவை வீரர்களைத் தவறாது கொல்லும்.

ஆயினும் முற்றுகை யிடுவோர் இவற்றுக்கெல்லாம் சளையார். வீரர் இறந்து படப்படப் புதிய வீரர் மேலே செல்லுவர். மதில்மேலிருப்பவர் அவர்களைத் தாக்காதவாறு கீழே இருப்பவர் விடாது அம்பெய்வர். யானைகளைக் கொண்டு மதிற் கதவை இடிக்கச் செய்து பிளந்து கொண்டு உட்புகுவர். அகழிகளை மண் கொண்டு தூர்த்து மதிலின் புறத்தை அடைய வழிகோலுவர். மதிலை இடித்துத் தகர்த்து உட்செல்ல வழியமைப்பர்.

மற்றும் போர்க்களத்தில் வீரர் புரியும் அரிய செயல்கள் பலவாம். பெருவீரன் தன்னையொத்த பெருவீரனோடு போர் புரிவானேயன்றி வலிமை குறைந்தவர்களோடு போரிடான். தன்மேல் எய்யப்பட்ட வேல் தன் உடலில் தைத்திருப்பினும் அதனைப் பொருட் படுத்தாமல் எதிரியைக் கொல்லுதற்குப் புதிய வேல் கிடைத்ததென்று மகிழ்வான். பகைவர் வேல் எறியுங்கால் அதனைப் பார்த்த கண், இமைக்குமாயினும் அதனை இழிவென்று கொள்வர் வீரர். போரில் விழுப்புண் படாத நாளை வீண் நாளாகக் கொள்ளுவர். தம்மைப் பாது காக்கும் அரசர் கண்களில் நீர் துளிக்குமாறு தாம் இறந்து படுதலைப் பெரிதும் விரும்புவர் வீரர். உயிர்க்குச் சிறிதும் அஞ்சாது எத்தனைபேர் மேல்வரினும் அத்தனை பேரையும் ஒருவனுகவே எதிர்த்து நிற்க விரும்புவான் வீரன். ஒரு தமிழ்த் தாய் இறந்து பட்ட தன் மகனைப் போர்க் களத்தில் கண்ட போது அவன் மேலெல்லாம் அம்புகள் பாய்ந்து நிற்க, அவன் முள்ளம் பன்றி போலக் கிடந்தான் என்று இலக்கியத்தால் அறிகின்ருேம். மற்ருெரு தாய் தன் மகன் போரிற் புறங் கொடுத்தான் எனச் சிலர் சொல்லக்கேட்டு, அங்ஙனமாயின் அவனுக்குப் பால் கொடுத்த என் மார்பை அறுத்தெறிவேன் எனச் சொல்லிப் போர்க்களத்துக்குச் சென்று அங்கு மார்பிற் புண்பட்டுக் கிடக்கும் தன் மகனைப்பார்த்து, ஈன்றபோதினும் பெரிது மகிழ்ந்தாள் என நூல்களால் அறிகிருேம். வேருெரு தாய் முன்னெருநாள் தன் தந்தையும் பின்னர்த் தமையன், கணவன் ஆகியோரும் போர்புரிந்து இறந்து போயிருக்கவும், அடுத்த நாள் தனது ஒரே மகனும் மிகச் சிறிய வயதினனுமான தன் குழந்தையைத் தலைமயிரைச் சீவிச் சரிசெய்து போர்க் கோலம் புனை வித்துக் கையில் வேலைக் கொடுத்துப் போர்க்குப் போக்கினுள் என்று தெரியவருகின்றது.

போரில் வென்ற அரசன் களவேள்வி செய்வான். இது மறக்கள வேள்வி எனப்படும். போரில் இறந்துபட்ட பகை

வரது படைமீது யானைகளை எருதாகக்கொண்டு பிணையடித்து அதனால் உண்டான நிணச்சோற்றைக் குருதியாகிய உலையில் இட்டுப் பலி சமைப்பார்கள். அப்பலியை ஈனுவேண்மாள் இடமாகத் துழாவிச் சமைப்பாள். அதனைப் போர்த் தெய்வத்திற்குப் பலியாக அளிப்பார்கள். பிறகு மிகுந்துள்ள யானை, தேர், படைக்கலங்கள் முதலிய பொருள்களை அரசன் வீரர்க்குப் பங்கிட்டுக் கொடுப்பான். இதுவன்றிச் சிறந்த வீரர்க்குக் காலில் வீரக்கழலை அரசன் தானே தன் கையால் அணிவான். அவரவர் தகுதிக்கேற்பப் பொன் முதலிய பரிசில்கள் கொடுத்தலும், ஏனுதிப் பட்டம் அளித்தலும் வழக்காம். ஏனுதிப் பட்டம் பெற்ருேர் படைத் தலைவராயிருப்பர்.

போரில் மிக்க திறம்காட்டி இறந்துபட்ட வீரர்க்கு நடுகல் நடப்படும். இதற்குரிய கல்லைத் தேர்ந்தெடுத்தலும், அதனைக் கொணர்ந்து தூய்மைப் படுத்தலும், பிறகு அதனை நிலை நாட்டுதலும், பூசித்தலும் ஆகிய எல்லாம் தெய்வம் நிறுவல் போலவே பெருமையாகச் செய்யப்படும். அப்படி நடும் கல்லின் மீது இறந்துபட்ட அவ்வீரனது பெயர், புகழ் முதலியவை பொறிக்கப்படும். இச்செய்தியே பிற்காலத்துக் கல்வெட்டாய் மாறிற்று எனின் அது மிகையாகாது. இதுகாறும் பாண்டியர்க்கும் பிற தமிழவரசர்க்கும் பொதுவாகிய சில அரசியற் செய்திகளைக் கூறினேம். இனிப் பாண்டியர் அரசியலைப்பற்றி சில சிறப்பான செய்திகளைக் கூறுவோம்.

நாட்டுப் பிரிவு: பாண்டிய மன்னன் ஆண்டுவந்த நிலப் பரப்பு பாண்டிமண்டலம் எனப்பட்டது. இப்பாண்டிமண்டலம் மதுரை, திருநெல்வேலி, இராமநாதபுரம் என்னும் மாவட்டங்களையும், புதுக்கோட்டை நாட்டில் வெள்ளாற்றுக்குத் தெற்கிலுள்ள பகுதியையும் தன்னகத்துக்கொண்டிருந்தது. இப் பாண்டி மண்டலம் நாடு, கூற்றம் என்னும் பெயர்களைக் கொண்ட பல பிரிவுகளாகப் பிரிக்கப்பட்டிருந்தது. பறம்பு

நாடு, ஒல்லையூர் நாடு, தென்பாண்டி நாடு, முத்தூர்க் கூற்றம், மிழலைக் கூற்றம் என்னும் பெயர்களால் இதனை அறியலாம். இந்நாடுகளும் கூற்றங்களும் இக்காலத்துத் தாலுக்காக்களுக்கு ஒப்பானவை என்று கூறலாம். அரச குலத்தைச் சார்ந்த தாயத்தார்களும், இளவரசுப் பட்டம் எய்தினவர்களும், சிற்றரசர்களும் இந்நாடுகளை ஆண்டு வந்தனர்.

வருவாய்: அரசின் பெருத்த வருவாய், நிலவரி அல்லது செய்க்கடன் ஆகும். இஃதன்றிச் சிற்றரசரிடத்தில் வாங்கும் திறைப்பணம், ஏற்றுமதி இறக்குமதிகள் மீது விதிக்கப்படும் சுங்கவரி அல்லது உல்கு பொருள், பகைவரோடு போரிட்டு வெற்றி பெற்று அடைந்த கொள்ளைப் பொருள் அல்லது கொண்டிப் பொருள் ஆகியவையும் வருவாயாக அமையும். இனிப் பிற்காலப் பாண்டியர் காலத்தே வாங்கப்பட்ட தறியிறை, செக்கிறை, மனையிறை, தட்டாரப் பாட்டம், பாடி காவல் போன்றவை வாங்கப்பட்டனவா, அன்று, என்பதற்குப் போதிய சான்றுகள் இல்லையாயினும், பிற்காலத்திய நாடு காவல் முறை பெரும்பாலும் பண்டை முறையின் அடிப்படையிலேயே எழுந்ததாகையால் இவற்றிலும் சில அக்காலத்து வாங்கப்பட்டிருத்தல் கூடும்.

அரசியல் அலுவலாளர்: ஏனாதி, காவிதி என்னும் பட்டம் பெற்றோர் ஆட்சி முறையில் உயர்தர அலுவல்களை வகித்திருந்தனர். ஏனாதிப் பட்டம் பெற்றோர் படைத் தலைவராகவும், காவிதிப் பட்டம் பெற்றோர் அமைச்சராகவும் இருந்தார்கள் எனத் தெரிய வருகிறது. இவர்களுக்கு அடையாளப் பூக்களும், விரல் ஆழிகளும், இறையிலி நிலமும் வழங்கப்பட்டன. பிற்காலப் பாண்டியர் காலத்துப் பேரரையன் தென்னவன் பிரமராயன், பாண்டிய மூவேந்தவேளான், தொண்டைமான் போன்ற பட்டங்கள் கொடுத்து வந்தது முற்காலத்துப் பாண்டியர் முறையின் அடிப்படையிலேயே இருத்தல் கூடும்.

இன்னும், அரச அலுவல்களைப் பார்ப்போராகப் பிற்காலத்தில் ஏற்பட்ட வரியிலார், புரவுவரித்திணைக்களத்தார் என்பவர்களும் பண்டைக் காலத்தில் ஏற்பட்டிருத்தல் வேண்டும். இதற்குச் சான்றில்லையாயினும் இவர்களது வேலைகள் அக்காலத்து நடைபெற்றிருத்தல் வேண்டுமாகையாலும், இப்பெயர்கள் தமிழ்ப் பெயர்களாயிருத்தலாலும் இங்ஙனம் துணிதற்கிடமுண்டு. இவர்களில் வரியிலார், குடிகளால் அரசினர்க்கு வருதற்குறிய வரிகட்குக் கணக்கு எழுதி வைப்பவர்கள்; புரவு வரித்திணைக் களத்தார். இக்காலத்திய நிலவருவாய்த்துறை போன்ற கழகத்தினராவர். இக்கழகத் தலைவர் புரவு வரித்திணைக்கள நாயகம் எனப்படுவார். இவர்களைத்தவிர வழக்குகளில் தீர்ப்பு வழங்குதற்கு உரியவர்களாக அறங்கூறவையத்தார் எனப்படும் நடுவர்களின் குழு இருந்ததாகத் தெரியவருகிறது. இவர்கள், ஊர்கள்தோறும் உள்ள பொது மன்றத்திற் கூடியிருந்து வழக்குத் தீர்த்து வந்தனர். பிற்காலப் பாண்டியர் காலத்தே ஊர் மன்றுகள் ஏற்பட்டிருந்தன போல முற்காலத்தில் ஏற்பட்டிருந்தனவா? இல்லையா? வென்பது தெரியவில்லை; அதனுல் குடவோலைத் தேர்வு நிகழ்ந்ததா? இல்லையா? என்பதையும் கூறவியலாது.

நில அளவு: நில அளவு பற்றிய செய்தியும் பிற்காலப் பாண்டியர் காலத்தே புலப்படுவதுபோல் அவ்வளவு தெளிவாக முற்காலப் பாண்டியர் காலத்தே எங்ஙனமிருந்ததெனத் தெரியவில்லை. ஆனுல் இரண்டிற்கும் இடையில் பெருத்த மாறுதல்கள் ஏற்பட்டிருக்க இடமில்லை; நன்செய், புன்செய் என்னும் தரங்கள் இருந்தே தீரவேண்டும். குழி, மா, வேலி என்னும் நில அளவைப் பெயர்கள் முற்காலத்தில் இருந்தன. அதையே பிற்காலத்தில் வழங்கப்பட்டன.

இறையிலி நிலங்கள்: கோயில்களுக்கும் பார்ப்பனர்களுக்கும், புலவர்களுக்கும், காவிதிப்பட்டம் பெற்ருருக்கும்

நிலங்கள் இறையிலியாக வழங்கப்பட்டன. இங்ஙனம் இறையிலியாக விடப்படுவது முற்றூட்டு எனப்படும். ஆனால் பிற்காலப் பாண்டியர் காலத்தே, பார்ப்பனர்களுக்கு அளிக்கப்பட்ட நிலம் பிரமதேயம், பட்டவிருத்தி என்றும், சிவன் கோவில்களுக்கு அளிக்கப்பட்ட நிலம் தேவதானம் என்றும், திருமால் கோவில்களுக்கு அளிக்கப்பட்டது திருவிடையாட்டம் என்றும், பௌத்த பள்ளிகட்கு அளிக்கப்பட்டது பள்ளிச்சந்தம் என்றும் பெயரிடப்பட்டதுபோல முற்காலத்தில் பெயரிட்டழைக்கப்பட்டனவா? என்பது விளங்கவில்லை.

அளவைகள்; அளவைகள் எண்ணல், எடுத்தல், முகத்தல், நீட்டல் என நான்காம். இவற்றைப் பொறுத்து ஏற்பட்டுள்ள பலவகைப் பெயர்கள் முற்காலத்தில் வழங்கப்பட்டனபோலவே பிற்காலத்திலும் வழங்கப்பட்டன என்று தெரிகிறது. எண்ணலளவையில் ஒன்று, பத்து, நூறு, ஆயிரம், பத்தாயிரம், நூறாயிரம், கோடி என்பவை தமிழ்ப் பெயர்கள். மற்றும் இதற்கு மேல் ஆம்பல், தாமரை, வெள்ளம் என்பனவும் இருந்தன வெனவும் தெரிகிறது. எடுத்தலளவை அல்லது நிறுத்தலளவையில் பொன், வெள்ளி போன்ற உயர்ந்த உலோகங்களை நிறுக்கும் அளவைகள் கழஞ்சு, கரணம் எனப் பெயர் பெற்றன. பலசரக்குப் பொருள்கள் பலம், துலாம், தூக்கு என்னும் அளவைகளால் அளக்கப்பட்டன. முகத்தலளவைகள் ஆழாக்கு, உழக்கு, உரி, நாழி, குறுணி, தூணி, பதக்கு எனப் பெயர் பெற்றன. நீட்டலளவைகள் கோல், குழி, மா, வேலி, தடி எனப்பட்டன.

நாணயங்கள்: பொன், காசு என்னும் நாணயங்கள் பழைய பாண்டியர் காலத்தில் இருந்திருக்கலாம் என்று தோன்றுகிறது. இவை பொன் நாணயங்களாம். பழைய பாண்டியர் நாணயங்கள் செவ்வக வடிவில் இருந்தன என்று ஆராய்ச்சியாளர் கூறுகின்றனர்.

ஆவணக்களரி: பிற்காலப் பாண்டியர் காலத்தில் ஒவ்வோர் ஊரிலும் ஆவணக்களரி, (பத்திரங்களைப் பதிவு) செய்யுமிடம் இருந்ததாகத் தெரியவருகிறது. அங்ஙனம் முற்காலப் பாண்டியர் காலத்தே இருந்ததா? என்பது தெளியக்கூடவில்லை. ஆயினும் நிலங்களை வாங்கல், விற்றல் என்பன எப்போதும் உண்டாகையால் முற்காலத்தில் அதைப் போன்ற தொன்று இருந்திருக்க வேண்டும் என உய்த்துணரலாம்.

வாணிகமும் கைத்தொழிலும்: பண்டைய பாண்டியர் காலத்தே உள்நாட்டு வாணிகமும் வெளிநாட்டுக் கப்பல் வாணிகமும் திறம்பட நடந்து வந்தன என்று தெரிகிறது.

மதுரை, கொற்கை முதலிய விடங்களில் கிடைத்துள்ள பண்டை உரோமாபுரி நாணயங்களே வெளிநாட்டு வாணிகத்துக்குச் சான்று பகரும். நிலத்தின் வழியாக வணிகர் பலர் வண்டிகளிலும். பொதிமாடுகளிலும் சரக்குகளைப் பல்வேறிடங்கட்குக் கொண்டு சென்று வாணிகம் செய்தனர். இப்படிச் செல்லும் கூட்டத்திற்கு வாணிகச் சாத்து என்று பெயர். வணிகருள் சிறந்தோர் எட்டி என்னும் பட்டம் பெற்றனர்.

பிறநாட்டு வாணிகத்தில் முத்துக்கள், ஆடைகள் முதலியன மேல் நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப் பெற்றன. அந் நாடுகளினின்று, மது வகைகள், குதிரைகள், சிலவகைப் பொறிகள் இவை வரவழைக்கப்பட்டன. கப்பல்கள் கடலில் திசை தடுமாறிச் செல்லாதிருத்தற்காகக் கலங்கரை விளக்கங்கள் (Light houses) இருந்தன. கைத்தொழில்களைப் பொறுத்து நாட்டில் பொதுவாக நடந்து வந்த இன்றியமையாத கைத்தொழில்கள் இருக்கச் சிறப்பாகக் கொற்கையில் முத்துக் குளித்தல் நடந்து வந்தது. கொற்கைக்குமுன் கவாடபுரத்து முத்துக்களைப்பற்றி முன்னரே கூறியுள்ளோம். இஃதன்றி நெய்தற்றொழில் நாட்டில் சிறப்பாக நடந்து வந்தது.

பஞ்சினுலும், பட்டினுலும், எலிமயிரினுலும் சிறந்த ஆடைகள் செய்யப்பட்டன எனச் சிலப்பதிகாரத்தால் தெரிய வருகிறது. மிக நுண்மையான இவ்வாடைகளை மேனுட்டார் விரும்பி வாங்கி யணிந்தனர் என அறியக் கிடக்கின்றது. இவற்றைத் தவிரச் சங்கறுத்தல், உப்பு விளைத்தல், மீன் பிடித்தல் முதலிய தொழில்களும் நடைபெற்றன.

கல்வி: தமிழ் நாட்டில் பண்டைக் காலத்தில் கல்வி சிறந்திருந்தது என்பது யாவரும் அறிந்ததே. பாண்டியர் சங்கம் நிறுவித் தமிழாராய்ந்தது வெள்ளிடைமலை; ஒரு பாண்டிய அரசன் கல்வியைப்பற்றி "ஆசிரியர்க்கு உற்றவிடத்து உதவியும் மிகுந்த பொருள் கொடுத்தும் அவர்க்கு வழிபாடு செய்யும் இழிந்த நிலைமையை வெருமலும் கற்றல் சிறந்ததாம். ஏனெனில் ஒத்தப் பிறப்பினராகிய தனது பல பிள்ளைகளிடத்தில் கற்றவனையே தாயும் விரும்புவாளாதலால் கல்வி தாயின் மனதையும் வேறுபடுத்த வல்லது. அரசன் ஒரு குடியுள் மூத்தவன் கல்லாதவனுயின் அவனை வருக என்றும் கூறுன். இளையோன் கல்விமானுயின் அவன் சொற்படி நடப்பான். மற்றுக் கீழ்க் குலத்தான் கல்வியில் வல்லவனுயின் மேற்குலத்தானும் அவனை வழிபடுவான்" எனக் கூறியுள்ளான். இதனுல் அக்காலக் கல்வியின் மேம்பாடு இனிது விளங்கும். "பாண்டிய நாடுடைத்து நல்ல தமிழ்" என்பது பழமொழி. "தமிழ்நிலை பெற்ற தாங்கரு மரபின் மகிழ்நனை மருகின் மதுரை" என்பது ஆன்ருேர் மொழி. பாண்டியநாடு செந்தமிழ் நாடு எனச் சிறப்புற்றதை முன்னமே கூறியுள்ளோம். சங்கப் புலவர் பற்பல குலத்தவராய் இருத்தலை நோக்குமிடத்து இன மத வேறுபாடின்றி யாவரும் கல்வி கற்றனர் என்பது பெறப்படும். கல்வி கற்பித்த ஆசிரியர் கணக்காயர் எனப்பட்டனர். "மதுரைக் கணக்காயனுர் மகனுர் நக்கீரர்" என்னும் வழக்காற்ருல் இது விளங்கும்.

சமயமும் கோவில்களும்: பாண்டியர்கள், சிவநெறிச் செல்வர்கள் என்றும், அங்கையற்கண்ணி தன்னுெடும் அமர்ந்த ஆலவாய் அடிகள் அவர்களது குல தெய்வம் என்றும் ஐயமற அறியக்கிடக்கின்றது. மதுரையை ஆண்ட மீனுட்சி அம்மன் பாண்டியர் தவமகள் என வழங்கப்படுகின்ருள். ஆயினும் பாண்டியவரசர் புறச்சமய எதிரிகளாயிருக்கவில்லை. பாண்டிய நாட்டில் பௌத்த சமணப் பள்ளிகளும் இருந்தன வென்றும், அவற்றிற்கு அரசன் பொருளுதவி செய்தான் என்றும் தெரிகிறது. மதுரையை அடுத்த புறஞ்சேரியில் சமணத் துறவிகள் வாழ்ந்து வந்தனர் என்பது சிலப்பதிகாரத்தால் அறியக் கிடக்கின்றது. கோவில்களில் பூசைகளும், திருவிழாக்களும் ஒழுங்காக நடைபெற்றன. பட்டிமண்டபங்களில் புலவர்கள் இருந்து சொற்போர் முதலியன செய்தனர். மதுரைத் தமிழ்ச் சங்கம் மதுரைக் கோவிலிலுள்ள பொற்ருமரைக் கரையில் இருந்ததென ஒரு வழக்கு உண்டு.

அரசர் சிறப்பு: அரசர் போர் குறித்துச் செல்லாத நாட்களில் பெரும்பாலும் நாடோறும் அத்தாணி மண்டபத்தில் அரியணையில், ஐம்பெருங் குழுவினரும், எண்பேராயத்தாரும் மற்றும் பலரும் சூழ்ந்திருக்கப் பெருமிதத்தோடு வீற்றிருந்து அரச அலுவல்களை மேற்கொண்டு வருவான். அக்காலை ஆடல் பாடல்கள் நிகழும். இவ்வாடல் பாடல்களைப் பெரும்பாலும் பாணர் எனப்படும் மரபினர் நிகழ்த்தி வந்தனர், இவர்கள் கீழ்க்குலத்தார் என அறியக் கிடப்பினும் அரசர் இவர்கட்குப் பெருமதிப்பளித்தனர். இவர்களைப் புறத்தலைச் கடமையாகவும் கொண்டிருந்தனர். மற்றும் இக்காலத்தில் புலவரோடு அளவளாவுதலும், அவர்கட்குப் பரிசிலளித்தலும் உண்டு.

போர்புரிந்து வெற்றியடைந்த காலத்துப் போரில் சிறந்த செயல்கள் புரிந்து மேன்மையடைந்தோர்க்கு அரசர் வரிசைகள் பல வழங்குதலும். பட்டங்கள் வழங்குதலும், கழல் செறித்

தலும் செய்வர். அரசரது பிறந்த நாள் விழாக்களும் கொண்டாடப் பட்டனவென்று தெரிகிறது. முடிசூடும் காலத்து விழாக்களும் உண்டு. இக்காலங்களில் சிரைபட்டவரைச் சிறைவீடு செய்தலும், உரியவர்க்கு வரிசைகளும், பட்டங்களும் நல்குதலும் உண்டு. தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியன் அரியணையில் சிறக்க வீற்றிருந்து பலர்க்கும் வரிசைகள் நல்கிய மேம்பாட்டினை மதுரைக் காஞ்சியால் அறிகின்றோம்.

முற்றிற்று.